ஒக்டோபர் 2024

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை 293

விலை :
ரூபா 100/=

சிறப்பு விஞ்ஞானக் கட்டுரை

## வெளிர் நீலப் புள்ளி
## PALE BLUE DOT

25ஆவது அகவையில்
ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை
சிறப்பு
விஞ்ஞானக் கட்டுரை



கலைக்கேசரி
திருமலை சுந்தா

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

ஞானம்
ஒளி : 25
சுடர் : 05
293

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்
நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-71-7362862
0094-11-2586013

மின்னஞ்சல் ☞ editor@gnanam.info

அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6,
Sri Lanka

வங்கி விபரம் ☞ G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ ஒரு வருடம்

| | |
|---|---|
| Sri Lanka (LKR) | 1000 |
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.

## இதழினுள்ளே.....

⊙ **கவிதைகள்**
சார்ஜன்ட் ஜோன்ஸ் கில்மெர் / அன்னலட்சுமி இராஜதுரை 05
வில்வரசன் 11
செல்லையா சுப்ரமணியம் 18
கனகசபாபதி செல்வநேசன் 20
கீத்தா பரமநாதன் 38
காருண்யன் 46
ஜலீமா முஸம்மில் 48
சரமபாகு சி. உதயகுமார் 51

⊙ **சிறுகதைகள்**
ரஞ்ஜனி சுப்ரமணியம் 06
முனைவர் புதுவை மனுநீதி 15
இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் 33
நிலவூர்ச் சித்திரவேல் 44

⊙ **கட்டுரைகள்**
கலாநிதி செ. ஞானராசா 03
பேராசிரியர் சபா ஜெயராசா 12
சொக்கலிங்கம் லோஜினி 19
ஞானம் பாலச்சந்திரன் 21

⊙ **பத்தி**
பேராசிரியர் துரை மனோகரன் 49

⊙ **தொடர்**
ஞா.பா. (பேசும் நாணயங்கள்)

⊙ **விமர்சனம்**
யௌவனன் (திரைப்பட விமர்சனம்) 43

⊙ **வாசகர் பேசுகிறார்** 52

# ஆசிரியர் பக்கம்

## நம்பிக்கை ஒளிக்கீற்று

இலங்கை சுதந்திரம் அடைந்தபின்னர் இடைவிடாது தொடர் சிக்கல்கள் நாட்டிலே தோன்றி 'சாண் ஏற முழம் சறுக்கல்' எனும் நிலையில் எங்கள் நாடு தொடர்ந்து இருந்துவருகிறது. 1958 – இனக்கலவரம், 1971 – ஜே.வி.பி புரட்சி, 1983 – இனக்கலவரமும் அதனைத் தொடர்ந்து முப்பது வருட ஆயுதப் போராட்டமும், 2004 – சுனாமி பேரழிவு, 2009 – யுத்தம், 2019 – ஈஸ்டர் குண்டுவெடிப்புகள், 2020 – கொவிட் முடக்கம், 2022 – அரசுக்கு எதிரான புரட்சியும் பொருளாதாரப் பின்னடைவும் என இலங்கையின் முன்னேற்றத்திற்கு இவை யாவும் காலத்துக்குக் காலம் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்திவந்துள்ளன.

இத்தகு அமைதியற்ற நிகழ்வுகளுக்குள், மூளைசாலிகள் வெளியேற்றம், இனத்துவேசம், இனவாத அரசியல், ஊழல் போன்றனவும் மெதுமெதுவாக விஸ்வரூபமாகி இலங்கையின் பலத்தினை கறையான் அரிப்பதுபோல் மெதுமெதுவாக அரித்து பலவீனப்படுத்தின.

சென்ற ஆசிரியர் (292) தலையங்கத்தில் "நேற்றைய பிரச்சினைகள் அல்ல இன்றைய பிரச்சினைகள்: கூர்ந்து நோக்கில், வயதான தலைமுறையினரைவிட, குழந்தைகள், மாணவர்கள், இளைஞர்கள், இளம் குடும்பத்தினர் என எதிர்கால இலங்கையின் நம்பிக்கைக்குரியவர்களே, அதிக அழுத்தத்திற்கு உட்பட்டு, இலங்கை மீதான நம்பகத்தன்மையை இழந்துவருகின்றனர்" எனக் குறிப்பிட்டத்தற்கு அமைய சென்ற ஜனாதிபதி தேர்தலின் முடிவு அமைந்துள்ளது.

நாட்டின் கடந்தகால அரசியலால் களைத்து – சலித்துப்போன நாட்டு மக்கள், **அனுர குமார திசாநாயக்க** அவர்களை நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்துள்ளார்கள். இலங்கை அரசியல் தலைமைத்துவத்தில் மாற்றம் வேண்டும் என்ற நோக்கில் முடிவாகியுள்ள இந்தத் தெரிவு, புதிய ஜனாதிபதிக்கும், அவரின் கட்சியினருக்கும் மக்கள் வழங்கிய ஓர் வேண்டுகோளாகும். அவ்வேண்டுகோளின் அடிநாதமாக,

**இந்து சமுத்திரத்தின் முத்தை மீட்டெடுத்துத் தாருங்கள், இரத்தின துவீபத்தை பட்டை தீட்டித் தாருங்கள், மங்கலத்தை (ஸ்ரீ) பெயரில் கொண்ட நாட்டிலிருந்து அமங்கலத்தைத் துரத்தித் தாருங்கள், குபேரன் ஆண்ட நாட்டை பொருளாதார சீரழிவிலிருந்து தூக்கித் தாருங்கள், இனங்களுக்கிடையில் பாலமமைத்துத் (பாலம் – சேது) தாருங்கள்..**

அமைகிறது. புதிய ஜனாதிபதியின் ஆர்ப்பாட்டமற்ற ஆரம்பகட்ட நடவடிக்கைகள் நம்பிக்கை ஒளிக்கீற்றைத் தருவதாக உள்ளன. குறுகிய, மத்திம, நீண்ட கால திட்டங்களை படிப்படியாகச் செயற் படுத்தி நாட்டை நிமிர்த்தக்கூடிய முதிர்ச்சியின் அடையாளங்கள் தெரிகின்றன. புதிய ஜனாதிபதியின் தோள்களின்மீது மிகப் பாரிய பொறுப்புகள் உள்ளன.

ஆனால், நல்லதைச் செய்ய விரும்பினாலும் செய்யவிடாது தடுப்பதற்கு **கொழுத்த** அரசியல்வாதிகள் தருணம் பார்த்துக்கொண்டுள்ளார்கள். புதிய ஜனாதிபதி மிகுந்த கவனத்துடன் பயணிக்க வேண்டிய நிலையில் உள்ளார்.

அதள பாதாளத்துக்குச் சென்றுகொண்டிருக்கும் நாட்டை உடனடியாக சில மாதங்களில் மீட்கமுடியாது. அடுத்த ஓரிரு வருடங்களுக்கு மக்கள் பொறுமை காத்தல்வேண்டும். எதிர்வரும் நவம்பர் மாத பாராளுமன்ற தேர்தலில் தூர சிந்தனையுடன் நிதானமாக உரிய தெரிவுகளை மக்கள் செய்யவேண்டும்.

❍❍❍

அட்டைப்பட அதிதி



# கலைக்கேசரி திருமலை சுந்தரா

**மானுடம்** காப்பவர். மனிதநேயர் ***"அதி உயர் இக்கிய விருது*** பெற்ற திருமலை சுந்தா, திருகோணமலையைப் தமது பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். ஐம்பத்தேழு வருடங்களாக இலக்கியப் படைப்புகளைப் படைத்து பதிவிட்டு வருகிறார். தற்போதும் புதிய வடிவமைப்பில் சுருக்கமாகவும் இலகு முறையில் விளங்குமாறும் எழுதிவருவது கண்கூடு.

**ஞானம்** இதழின் ஆரம்பகால எழுத் தாளர்களில் ஒருவர். 2000ஆம் ஆண்டு இதழ் வெளியிடத் தொடங்கிய ஒரு சிலமாதங்களில் திருகோணமலைப் பிரதேசத்தில் இவரது தலைமையில் "ஞானம்" பற்றிய ஒன்று கூடல் இடம்பெற்றது.

சிவனொளி, சிட்டு, சுகமா, மானுடம் போன்ற சிற்றிதழ்களை வெளியிட்டு, படைப் பாளிகளை ஊக்குவித்து வாசகர் வட்டத்தை வளர்த்துள்ளார். திருமலை சிவன் கோவிலிலும் இறைபணிகளில் ஈடுபட்டு வந்துள்ளார்.

சின்னத்துரை சுந்தரலிங்கம் என்னும் இயற்பெயருடைய திருமலை சுந்தா ***அம்மா*** பதிப்பகம் நிறுவியவர். அதன் உரிமையாளராக விருந்து பல எழுத்தாளர்களின் நூல்களை குறைந்த செலவில் வெளியீடு செய்தும் உதவியுள்ளார்.



**கலாநிதி. செ. ஞானராசா**

இதுவரை 250இற்கு மேற்பட்ட சிறு கதைகளையும், 150இற்கு மேற்பட்ட குறுங் கதைகளையும் எழுதியுள்ளார். இவரது கடுகுக்கதைகள் என்னும் புதிய வடிவக் கதைகள் என்றும் தனித்துவம் பெற்றவை யாகத் திகழ்கின்றன. பலர் விரும்பி குறுகிய நேரத்தில் வாசிக்கும் வண்ணம் வடிவமைக் கப்பட்டுள்ளன.

**வேள்வி**, **விழியோரத்துக் கனவுகள், நாளை யைத் தேடும் மனிதர்கள்**, ஆகிய சிறுகதைத் தொகுதிகள், ***அம்மா***, **தொலைந்த நாட்கள்** போன்ற கவிதைத் தொகுதிகள், **சடங்கு** கட்டு ரைத் தொகுப்பு, **போராடப் பிறந்தவர்கள்** நாவல், ***சிவனொளி*** சிற்றிதழ் - **மானுடம்** சிற்றிதழ் (2009இல்) தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

64 குறுங்கதைகளை உள்ளடக்கிய **நான் – அவள்** தொகுப்பு 01-02-2009 ஞாயிற்றுக் கிழமையன்று திருகோணமலை சிவன் தேவஸ்தான மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்டது. 2021 சித்திரைமாத வெளியீடு கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் கிழக்கின் 100(நூறு) சிறுகதைகள் தொகுப்பில் இவரது **போராளி வருகின்றான்** (பக்கம் 499 - 424) என்னும் சிறு கதை இடம்பெற்றுள்ளது.

எழுத்தாளர் கலாபூஷணம் ஷெல்லிதாசன் (பே. கனகரெத்தினம்) அவர்களின் பவள விழாவை முன்னிட்டு "ஞானம்" இதழில் அட்டைப்பட அதிதி கட்டுரை எழுதியும் திருமலை சுந்தா சிறப்பித்துள்ளார்.

முகநூல் கவிதைப் போட்டிகளில் தற்காலப் போக்கிற்கு ஏற்பவும் பங்குபற்றி பல வெற்றிச் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். நவீன சிந்தனைப்போக்கில் காலத்திற்கேற்ப கவிதைப்படைப்புகளைப் படைத்து சாதனை நிலைநாட்டியுள்ளமை பாராட்டத்தக்கதே.

***கலாபூஷணம்***, ***வித்தகர் விருது***, **நகர முதல்வர் விருது**, ***கலைக்கேசரி*** உயர் இலக்கிய விருது போன்றவற்றையும் பெற்றுள்ளார்.

ஞாயிறு **தினக்குரல்** *23* டிசம்பர் *2007*இல் **திருமலை சுந்தாவுடன் ஒரு சந்திப்பு** கேள்வி - பதில்கள் மூலம் பல கருத்துப் பகிர்வு இடம்பெற்றுள்ளது. "எதை எழுத, எதை எழு தாமல்விட மனதை அரித்த எழுத்தில் வராத எத்தனையோ கதைகளை நாளாந்தம் பலருக்குச் சொல்லி வருகிறேன். எழுதுவதைவிட இது எனக்குத் திருப்தி தருகிறது" என இவர் கூறியுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

மேலும் திருமலை சுந்தா கூறுகையில், எந்தவொரு பிரச்சனைக்கும் வேலியோரத்து தலையாக, இருக்க விரும்பவில்லை.. போர்வை இலக்கியம் என்னால் படைக்கமுடியாது, அதற்காக அடுப்படி இலக்கியமும் என்னால் முடியாததொன்று எனவும் எடுத்துரைக்கிறார். ஈழத்து விமர்சகர்களின் பார்வைக்கு எட்டாத எனது கதைகளுக்கு நானே விமர்சனநூல் ஒன்றை எழுத ஆசைப்படுகின்றேன் எனவும் பதிவிட்டுள்ளார்.

அத்துடன் நிறுத்திவிடவில்லை, "எனது கதை மாந்தர்கள் நிஜங்கள்.. இன்னும் என்னுடன் உலாவரு பவர்கள். என் கதைகளில் நானும் கதாபாத்திரமாகியுள்ளேன்." எனச் சுட்டிக்காட்டுகிறார்.

தான் வாழும் சமூகத்துக்கு எது எது தேவையோ அவற்றைத் தேடித்தருபவர் ஆகவும் திருமலை சுந்தா திகழ்கின்றார். கல்வெட் டுக்கள், இந்து ஆலயங்களின் கும்பாபிஷேக மலர்கள், தேர்த் திருவிழா மலர்களின் தொகுப்புகள் என்பன செய்துள்ளார். பேச்சாளர், எழுத்தாளர், கவிஞர், புத்தக வெளி யீட்டாளர் என பல்பரிமாணங் களைக் கொண்டவர். நேர்மை, பொறுமை, மானுடநேயம் இவரின் நிலையான பண்புகளாவுள்ளன.

***என்னை அழைக்கிறாள்*** என்ற இவரது முதலாவது சிறுகதை *1971*இல் மித்திரன் நாளேட்டில் வெளியாகியது. சிந்தாமணி, வீர கேசரி, தினகரன், சிரித்திரன், அபி யுக்தன், சுடர், ஞானம் உள்ளிட்ட நாளேடுகளிலும் இதழ்களிலும் இவரது படைப் பாக்கங்கள் வெளி வந்துள்ளன.

**புதுமை நெஞ்சங்கள்** என்ற இலக்கிய அமைப்பை எழுபதுகளில் உருவாக்கி பலவகையான இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார். செ. நவசோதிராசா, க. அருள் சுப்பிரமணியம் ஆகியோருடன் இணைந்து **புதுமை நெஞ்சம்** என்ற ரோணியோ இலக்கிய இதழ் வெளியிடப்பட்டு இலக்கிய ஆர்வலர், சித்தி அமரசிங்கம் என்னும் வெளி யீட்டாளரோடும் நெருங்கிய தொடர்பு வைத் திருந்தார்.

இவரது தாயார் *1999*இல் இறைபதம் அடைந்தார். தாயாரின் நினைவலைகளை மீட்டுப்பார்க்க பதின்மூன்று கவிஞர்களின் கவிதைகளை உள்ளடக்கி **அம்மா** கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது. "தாமரைத் தீவான்" தலைமையில் அம்மா கவியரங்கம் நடாத்தப்பட்டது,




"வேள்வி"
சிறுகதை தொகுப்பு
சிரித்திரன் – பிரசுரம்
25.08.1978

"அம்மா கவிதைகள்"
கவிதை தொகுப்பு
அம்மா பதிப்பகம்
தை 1998

"விழியோரத்து கனவுகள்"
சிறுகதை தொகுப்பு
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு
மார்கழி – 1995




"நாளையைத்தேடும் மனிதர்கள்"
சிறுகதை தொகுப்பு
அம்மா பதிப்பகம்
தை – 1999

"சடங்கு"
கட்டுரைத் தொகுப்பு
அம்மா பதிப்பகம்
21.04.2007

"நான்..... அவள்....."
குறுங்கதைகள் – 64
அம்மா பதிப்பகம்
11.01.2009

11-03-1951 இல் பிறந்த திமலை சுந்தா **'பவள விழா'**க்கண்டு இன்புறவும் எதிர்பார்க்கிறோம் அண்மையில் 24-08- சனிக்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதிமண்டபத்தில் இடம்பெற்ற மதிப்பளிப்பு விழாவில் ***அதி உயர் இலக்கிய விருது*** பெற்றுள்ளார். தம்பு சிவாவின் 80 ஆவது அகவையை முன்னிட்டு, இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகமும் இலங்கைக் கலை இலக்கிய பெருமன்றமும் இந்நிகழ்வை நடாத்திச் சிறப்பித்தது. அம்மா பதிப்பக வெளியீடாக முப்பத்தொரு (31) புத்தகங்கள் இதுவரை வெளிவந்துள்ளன. 600இற்கு மேற்பட்ட கடுகுக் கதைகளை எழுதியுள்ளார். கிழக்கு மாகாணத் தமிழ்த் தினப்போட்டிகளில் நடுவராகச் செயற்பட்டுள்ளார். இந்து இளைஞர் பேரவையால் வெளியிட்ட ஆன்மீகச் சஞ்சிகை ***சிவநெறி***இன் பிரதான ஆசிரியராகவும் செயற்பட்டுள்ளார்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தினால 1997, 1998,1999 ஆகிய ஆண்டுகளில் நடாத்தப்பெற்ற சிறு கதைப்போட்டியில் பங்குபற்றி தெடர்ச்சியாக முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

## சாமி எலி

"அம்மா... பிள்ளையார் கோவிலில் எலிக்குத் தீபம் காட்டி கற்பூரம் கொளுத்தி பூசை செய்யினம் நீங்க என்னடா என்றால் எலிகளைக்கொல்ல மருந்து வாங்கி வரச் சொல்லுறீங்களே..

அம்மா சொன்னார், "மகனே கோவிலில் இருக்கிறது சாகாத சாமி எலி

எங்கட வீட்ட இருக்கிறது சாகிற வீட்டெலி.. அதால தொல்லை இல்லை. இதால தொல்லை கூட அதுதான்"

மகன் அம்மாவை ஏற இறங்கப் பார்த்தான்.

அவன்முகத்தில் அசட்டுப் புன்னகையா?

**(நிமிடக்கதை)**

இவ்வாறு ***நிமிடக்கதை*** சொல்லும் தனித்துவமான சிறப்புக்கு உரியவராகவும் திருமலை சுந்தா எடுத்துக்காட்டாக எம்மத்தியில் விளங்குவது பெருமைக்குரியதே. நீடு வாழ்க! என ஞானம் இதழ் இவரை வாழ்த்தி மகிழ்கிறது.

○○○

# மரங்கள்

மரத்தைப்போன்றதொரு
அன்பானகவிதையினை
நான்
என்றேனும்
காண்பதற்கில்லை
என்றே நான்
கருதுகிறேன்
பூமியின் இனிய
பரந்தமார்பகத்தின்
மீது மரமொன்றின்
பசித்த வாய் அழுந்திக் கிடக்கிறது

நாள் முழுதும் இறைவனைப்
பார்த்திருக்கும்
மரமொன்று
வணங்கும் முகமாக
தன்இலைக்கரங்களை மேலே
உயர்த்துகிறது

கோடையில் தன்
கூந்தலில் றொபின்
கூடுகளை அணியக்
கூடியமரமொன்றின்
மார்பினில் பனி படர்ந்திருக்கிறது
மழையோடு மிக
அந்நியோன்யமாய் அது
வாழ்ந்திருக்கிறது

கவிதைகள் என்போன்ற
மூடர்களால்
ஆக்கப்படுகின்றன
ஆனால் இறைவனால்
மட்டுமே மரத்தினைப்
படைக்க முடியும்

ஆங்கில மூலம் :
**சார்ஜன்ட் ஜோன்ஸ் கில்மெர்**
(6-12-1886 - 30-7-1918)
தமிழ் வடிவம்:
**அன்னலட்சுமி இராஜதுரை**

சிறுகதை

# பரிமாணம்





ரஞ்ஜனி சுப்ரமணியம்

அன்று வருடப்பிறப்பல்ல. சித்திரைத் திருநாளோ கிறிஸ்மஸ் பண்டிகையோ கூட இல்லை. ஆனால் கோலாகலமான நாளாகத் தோற்றம் காட்டியது. 2009 மே மாத நடுவிலோர் நாள். நாடு அங்கங்கே திருவிழாக் கோலம் பூண்டிருந்ததில் வியப்பேதும் இல்லை. அவர்களுக்கு அது மிகமிக நல்ல நாள்.

சிலாபத்தில் இருந்து கொழும்பை நோக்கி அவசரமாக விரைந்து கொண்டிருந்தது சபேசனின் கார்.

காரின் முன்னால் வந்து வெடித்த பட்டாசுக் கோர்வையின் ஒலி சபேசனின் காதுகளை அதிரச் செய்தது. மூடிய கண்ணாடிகளைத் தாண்டி நெஞ்சுக் குழிக்குள் இறங்கியது.

அதிர்ச்சியில் காரை நிறுத்தி அவதானித்தார்.

வழியெங்கும் நிறைந்திருந்த வெடி சுற்றிய பேப்பர்கள் ஒருபுறம். பால்சோறு சமைத்து வழியில் செல்வோருக்கு பகிரும் கூட்டம் உள்வீதிகளில். பாட்டுப்பாடி ஆட்டம் போட்டு மகிழ்ந்தவர்கள் சிலரின் கையில் போத்தல்கள்.

ஆர்ப்பரிப்பு மனநிலையில் மக்களில் ஒரு சாரார். எங்கும் சந்தோஷம் நிறைந்திருப்பதாகத் தோன்றியது.

சபேசனின் மனம் இன்னதென்று கூற முடியாத இருளிலும் வேதனையிலும் கலங்கியிருந்தது. வீதியைப் பார்த்து ஓட்ட முடியாதபடி இடைக்கிடை கண்கள் கலங்கின. இதற்காகத்தானா எல்லாம்?

இது போதாதென்று காலை எட்டரை மணியளவில் வந்த செய்தி அவரது மனதினை மேலும் நிலைகொள்ளாது தவிக்க வைத்திருந்தது.

கொழும்பில் வேலை செய்யும் மகள் வானதியின் காரில் யாரோ அடிபட்டு விட்டார்களாம். வேறு விபரங்கள் தெரியவில்லை.

நடந்தது நடந்து விட்டது. வேறோர் நாளில் நடந்திருக்கக் கூடாதா என ஏங்கினார். இன்று ஏன்?

மகளுடன் தங்கியிருக்கும் பவானியால் நிலைமையை சமாளிக்க முடியுமா என்ற சஞ்சலம். ஒன்றுமில்லாத விஷயங்களுக்கே டென்ஷனாகும் சுபாவம் உள்ளவள். இன்று என்ன குழப்பம் பண்ணுவாளோ ?

❍

சிக்னல் விளக்குகள் இல்லாத அந்த முச்சந்தியை பக்கவாட்டின் சிறுவீதியின் ஊடாக வானதியின் கார் அடைந்தபோது, பிரதான வீதியில் கொகுவளை பக்கம் இருந்து ஹவ்லொக் சந்தியை நோக்கி வாகனங்கள் வரிசையாகச் சென்று கொண்டிருந்தன. அலுவலக நேரம். அதிக வாகனங்கள்.

இன்று வேலைக்குப் போகாமல் இருந்தால் என்ன என்று அம்மா காலையிலேயே நச்சரித்துக் கொண்டிருந்தாள். எல்லாத்துக்கும் பயம் அம்மாவுக்கு. என்ன பிரச்சனை என்றாலும் முகம் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்ற மனப்போக்கில் வானதி கிளம்பிவிட்டாள்.

காரியாலத்தில் கடமை நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அவள் சிறுவீதியில் இருந்து பிரதான வீதியின் ஒருபக்கம் கடந்து அடுத்த

பாதிக்குத் திருப்பி, அதே வீதியில் மீண்டும் 200m கொகுவளை பக்கம் போகவேண்டும். யாராவது ஒரு புண்ணியவான் காரை நிற்பாட்டி வழிவிடுவார் என பொறுமை காத்தாள்.

காத்து நிற்பது அவளுக்கு எப்போதுமே பிடித்தமானது. சந்திக்கு எதிர்ப்பக்கமாக நீண்ட ஒடுங்கிய ஒழுங்கை. அதன் ஒரு பக்கத்தில் சிறிய மீன் கடை. ஒழுங்கைக்கு மறுபக்கத்தில் அவள் திரும்ப வேண்டிய இடத்தில் ஒரு வேப்பமரம். காலை வேளைகளில் பறவை களின் சலசலப்பு இனிமை.

அந்த மீன்கடையில் அவளுக்கு எப்போதும் ஒரு ஈர்ப்புண்டு.

முதலாவது வாகனமாகத் தரித்து நிற்கும் சந்தர்ப்பங்களில் அந்தக் கடையில் மீன் வெட்டும் கட்டுமஸ்தான இளைஞனின் உடல் மொழியையும் முகபாவனைகளையும் தொழில் நேர்த்தியையும் ரசிப்பாள். வியப்பாள். ஏதோ ஒரு கவர்ச்சி அவனிடம் இருந்தது. மீன்கடைக் காரனை ரசிக்கக் கூடாதா என்ன?

கத்தியைத் தீட்டி எவ்வளவு கூர்மையாக வைத்திருப்பான். ஒரு நிமிடத்திற்குள் பெரிய தோர் மீனை செதில் சீவும் வேகமும், கலை யழகுடன் அழகிய துண்டங்களாக்கும் லாவக மும் சித்திரமாக விரிந்தது. அதுவும் மீன் வாங் கும் வாடிக்கையாளரிடம் சரளமாகக் கதைத்துக் கொண்டே செய்வான். நல்ல கதைகாரன்.

வீட்டில் அவள் சீவியகாலத்தில் மீன் வெட்டியதில்லை. ரசித்து சாப்பிடுவது மட்டுமே பிடிக்கும். மீனின் செதில்கள் உடலில் தெறிப்பது பிடிப்பதில்லை. தன்னால் முடியாததை யாரும் செய்யும் போது அதிகமாக ரசிப்பது இயல் புதானே. ஆனால் அன்று அந்த ரசனை கிடைக்க வில்லை. மீன் வெட்டுபவனைக் காணவில்லை. வாடிக்கையாளர்களும் இல்லை.

எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை. ஒரு நடுத்தர வயது கண்ணியமான தோற்றம் கொண்ட மனிதர் வானதி திரும்புவதற்காக காரின் வேகத்தைக் குறைக்க, பின்னால் வந்த வாகனங்களும் நின்றன.

மனதினுள் அவரது பெருந்தன்மையை சிலாகித்து நன்றியுடன் அந்தப் பக்கமாக பார் வையைத் திருப்பியவள் புன்னகை ஒன்றை அவசரமாகப் பரிசளித்தாள். இவ்வாறாக அடுத்தவரின் சிரமங்களை உணரும் திறன் படைத்த மனிதர்கள் இங்கு குறைவாகவே இருக்கிறார்கள்.

அவதானத்துடன் பிரதான வீதியின் ஒரு பக்கப் பாதையை மெதுவாகக் கடந்து, வலது பக்கமாக அடுத்த பாதையில் திருப்ப ஆயத்த மாகிய சந்தர்ப்பத்தில் எதிர்பக்க ஒழுங்கையின் முகப்பிற்கு அருகே கம்பீரமாக உடையணிந்த அந்த மனிதர் கண்ணில்பட்டார்.

நடுத்தர வயதிருக்கும். அவரையும் ஓரிரு நாட்கள் கண்டிருக்கிறாள். அலுவலகம் செல்பவர்போலும்.

பொறுப்பான பதவியொன்றில் இருப்பார் எனக் கணித்திருந்தாள். ஏனோ அவர் பற்றிய நன்மதிப்பு ஏற்கனவே மனதினுள் உருவாகி இருந்தது. நிமிர்ந்த நன்னடையும் மலர்ந்து தோன்றும் கண்ணியமான முகமும் காரணமாக இருக்கக்கூடும்.

வாகனம் திரும்பத் தொடங்கிய அந்தக் கணத்தில்தான் அனர்த்தம் நிகழ்ந்தது. ஸ்போர்ட்ஸ் பைக்கில் கொகுவளை பக்கமிருந்து ஹவ்லொக் சந்தி நோக்கி அதிவேகமாக வந்து கொண்டிருந்தவன் நடுத்தர வயது மதிக்கத் தக்கவன். காத்திருக்கப் பொறுமை இல்லாதவ னாக, நின்றிருந்த வாகன வரிசைகளை பக்க வாட்டாகத் தாண்டினான்.

பிழையான பக்கத்தில் அவசரமாக வந்தவன், வானதியின் காரின் இடப் பக்க போனட்டின் கீழ்ப்பகுதியில் பலமாக மோதி அடிபட்டான். பைக்குடன் சறுக்கிச் சென்று மீன்கடையின் முன்னால் விழுந்தான்.

ஒழுங்கை முகப்பில் பெருவீதியில் நின்று கொண்டிருந்த மனிதர் மிகுந்த பதற்றத்துடன் பின்வாங்கினார்.

நல்ல வேளையாக அந்தப் பக்கத்தில் பாதசாரிகள் வேறு யாரும் இல்லை. வானதி அதிர்ச்சியில் தன்வசம் இழந்தாள். இழக்கக் கூடாதுதான். ஏழு வருட காலத்தில் சிறு விபத்தையேனும் சந்தித்ததில்லை. மிக அவ தானமான ஓட்டம். திரும்பிய பக்கத்தில் அருகே இருந்த வேப்பமரத்தில் கார் மோத காரின் போனட் ஆ வென வாய்பிளந்தது.

கடவுளே, இது என்ன சோதனை?

சீட் பெல்ட் போட்டிருந்தாலும் நெஞ்சில் எங்கோ அடிபட்ட வலியில் முகம் வியர்த்தது. யோசிக்க நேரமில்லை. அடிபட்டவன் கதியும் தெரியவில்லை. கடவுளே அவனுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாதே என்னும் நினைவுதான் முதலில் பதற்றம் தந்தது. மெதுவாக கதவைத் திறந்து இறங்கினாள்.

பக்கத்தில் வந்த அந்த மனிதர் கனிவுடன் அவளை நோக்கினார். அவள் பயந்திருப்பதை அவர் ஊகித்திருக்க வேண்டும்.

அவளின் முகத்தை உற்று நோக்கி ஏதோ ஒரு அடையாளத்தைக் கண்டவராக,

"அடிபட்டுள்ளதா?" ஆங்கிலத்தில் வின வினார்.

"ம்...கொஞ்சம்"

"பயப்படத் தேவையில்லை. உங்களில் எந்தப் பிழையும் இல்லை. நான் பார்த்தேன். அவன்தான் பிழையான பக்கத்தால் வந்தான். நான் உங்களுக்கு உதவ முடியுமா?"

"இப்போ எதுவும் தேவையில்லை. மிகவும் நன்றி"

தன்வசம் இன்றிக் கூறினாள். அவரிடம் எதுவும் கேட்கும் மனநிலை இருக்கவில்லை.

"வீடு இந்த ஒழுங்கையில்தான். ஏதாவது சூடாகக் குடிக்கிறீர்களா? மிகவும் பயந்திருக்கி றீர்கள்"

"வேண்டாம். பிரச்சனையில்லை. உங்கள் கரிசனைக்கு மிகவும் நன்றி"

சில நிமிடங்கள் காத்திருந்தார். அடிபட்டவ னின் பக்கம் கூட்டம் சேர்ந்திருந்ததைப் பார்த்த வர், அங்கு தனது பிரசன்னம் தேவையில்லை என்று நினைத்தவர் போல தயங்கினார்.

அவரது கம்பனி வாகனம் வர அதில் ஏறிக் கொண்டார். கையசைத்து விடைபெற்றார்.

"உதவி தேவைப்பட்டால் கேளுங்கள். இந்த ஒழுங்கையில்தான் என் வீடு"

அவருடைய குரல் காற்றுடன் கலந்து தெளிவில்லாது மிதந்து வந்தது. காதில் வாங்கும் மனநிலையில் வானதி இல்லை.

மெதுவாகத் திரும்பி மோட்டர்சைக்கிளில் வந்தவன் விழுந்த இடத்தைப் பார்த்தாள்.

இப்போது மீன்கடைக்காரன் உள்ளிருந்து ஓடி வந்து விழுந்தவனின்பக்கத்தில் குனிந்து அவனை நேராக இருத்துவதற்கு முயற்சித்தான். விழுந்தவன் பிரக்ஞையோடுதான் இருந்தான். வானதியின் பக்கம் பார்த்து மீன் கடைக்காரனிடம் ஏதோ அவசரமாக ஆத்திரமாகச் சொல்லிக் கொண்டிருந்தான். இவனது முகபாவம் அடி பட்டவனுக்கான பரிவைச் சொன்னது.

வானதியின் மனம் ஆறுதல் அடைந்தது. நல்லவேளை கதைக்கிறான். தலையில் காயங்கள் எதுவும் வெளிப்படையாகத் தெரிய வில்லை. எழும்புவதற்கு முயற்சித்தவன் பைக்கின் அடியில் சிக்குண்ட காலை எடுக்க முயற்சித்து முடியாமல்,

"அனே மகே தெய்யனே" என பெருங்குரலில் அலறினான். முடியவில்லை.

யாரோ தகவல் சொல்ல அருகில் இருந்த காவல்துறை உடனே வந்து சேர்ந்தது. விபத்து நடந்த இடத்து நடைமுறைகளை இருவர் பார்க்க இன்னொரு பொலிஸ்காரரும் மீன் கடைக்காரனும் அடிபட்டவனை வந்து நின்ற அம்புலன்சில் ஏற்றிக் கொண்டனர். சேர்ந்திருந்த கூட்டம் உடனேயே கலையத் தொடங்கியது. நிற்பதற்கு நேரமில்லாத அவசர உலகம்.

கழன்று மரத்தடியில் கிடந்த bufferஐ கையில் எடுத்து மேலும் கீழும் பார்த்தவண்ணம் காருக்குள் போட்டார் ஒரு பொலிஸ்காரர். சம்பிரதாய நடைமுறைகள் முடிய காரும் மோட்டார் பைக்கும் காவல்நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.

தகவல் அறிந்து அம்மா காவல் நிலையம் வந்தபோது வானதியின் கலங்கிய முகம் பார்த்து சஞ்சலப்பட்டாள்.

"அப்பவே சொன்னன் பிள்ளை. நீ கேட் டியா. இண்டைக்கு வேலைக்கு போக வேண்டாம் எண்டு. காலையில இருந்து மனம் ஒரே பதட்டமாயிருக்கு. பூனை வேற குறுக்கால போச்சுது. சொல்லுக் கேட்டாத்தானே. நாங்கள் சொல்லுறதுகள் ஒண்டும் உங்கட காதிலை ஏறாது"

"அம்மா, அவன்தான் பிழையான பக்கத் தால் வந்து மோதிட்டான். அவனுக்கு என்ன நடந்தது எண்டுதான் யோசனையாக இருக்கு"

"சரிசரி. யோசிக்காதையம்மா. ஹொஸ்பிட் டல்லை டொக்டர் மோகனிட்டை சொல்லி அவன்டை நிலைமையை அறியலாம்"

❍

"பயப்பிடாதேங்கோ அன்ரி. நான் வாட் இன்சார்ஜ் S.H.O. உடன் கதைச்சனான். வழமையாக பேசண்ட் பற்றிய விபரங்களைக் கேட்பது சரியில்லைதான். எனினும் அவர் மறைமுகமாகச் சொன்னார். ஆபத்தான நிலை யில் யாரும் இல்லையென. குறிப்பாக இப்ப அட்மிட் ஆன அடிபட்டவர் பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை. பெரிய பிரச்சினை எதுவும் இருக்காது"

மோகனின் பதிலில் மனது சற்றே ஆறுதல் அடைந்தது.

”இல்லை மோகன். இன்று இவை எல்லாரும் என்ன மனநிலையில இருப்பினமோ தெரியேல்லை. எங்களைக் கண்டாலே கொஞ்சம் நக்கலா பாக்கிற மாதிரி எனக்கு ஒரு பிரமை. கதைக்கவும் பயமாயிருக்கு. சரி நான் ஸ்டேஷனில நிக்கிறன். ஏதும் தகவல் இருந்தால் சொல்லுங்கோ. பிழை செய்யாட்டியும் குற்றம் சுமத்துறதுக்கு எத்தனை வழியிருக்கு. காலம் அப்பிடி”

வானதியின் அப்பாவும் காவல்நிலையம் வந்துவிட்டார். விபத்து நடந்த இடத்திற்கு வந்திருந்த பொலிஸ் உத்தியோகத்தர் பெரேரா அப்போதுதான் வைத்தியசாலைக்குச் சென்று திரும்பியிருந்தார்.

மூவரும் ஆவலாக முகத்தைப் பார்த்தனர். மெதுவாக புன்னகைக்க முயன்றனர்.

சிரிப்பற்ற முகத்துடன் பெரேரா வெற்றுப் பார்வையோடு இவர்களைக் கண்களால் அளந்தார். அந்தப் பார்வையின் அர்த்தங்கள் எதுவாக இருக்கலாம் என இவர்களுக்கும் புரிந்தது.

“ஹொந்த வடே தமய் ஒயா கெரல தியன்னே. எச்சற ஹதிசியக்த? ஒயா ஓவர் ஸ்பீட் அவில்லா பைக் எக யட்ட கராகென கியா நேத”

என வானதியைப் பார்த்து இறுக்கமான குரலில் ஆரம்பித்தவர் சிங்களத்திலேயே தொடர்ந்தார்.

“அடிபட்டவன் சரியான பக்கத்தால்தான் வந்தவன். கார் சிறுவீதியில் இருந்து பிரதான வீதிக்கு வேகமாகப் பாய்ந்து பைக்கில் வந்தவனை அடித்து விழுத்தி வீதியின் மற்றப்பக்கத்திற்கு வீசியது. வந்த வேகத்தில் கார் மரத்தில் மோதியது”

உறுதியான தொனியில் சொன்னார். அவனுக்கு கால் எலும்பு முறிவு என்ற மேலதிக தகவல்.

சபேசன் கேள்விக் குறியுடன் மகளை நோக்கினார்.

“இல்லையப்பா. நான் திருப்பும் போது அவன்தான் பிழையான பக்கத்தில் வந்து காரின் இடப்பக்கமாக மோதினான்”

கழன்று விழுந்த *buffer*ஐ, இடம் வலம் மாற்றிப் பிடித்துப் பொலிஸ்காரர் காட்ட வானதியின் அப்பா அதிர்ந்தார். சரியான வளத்தில் காரில் பொருத்தினார்.

“பாருங்கோ எந்தப் பக்கம் அடிபட்டிருக்கு. நீங்கள் சொல்வது போல குறுக்காக பாய்ந்து அடித்தால் மற்றப் பக்கம்தான் நெளிவு இருந்திருக்கும்”

மௌனம்.

“....”

இல்லை. மீன்கடையில் நின்ற உபாலி அப்படித்தான் சொன்னான். பைக்கில் வந்தனும் அப்படித்தான் சொன்னான். சாட்சிக்கு மீன் கடைக்காரன் வருவதாகச் சொன்னான்.

அடிபட்டவன் மாத்தறையில் இருந்து அவசர அலுவலாக கொழும்பு வந்தவன். வெளிநாடு போவதற்காக. தன்னுடைய காரியம் எல்லாம் கெட்டுப் போனதாக சொல்கிறான். டிக்கட் எல்லாம் போட்டு விட்டான். இன்னும் இரண்டு நாட்களில் பயணம். செய்து கொண்டிருந்த வேலையும் விட்டு விட்டான். தான் ஆஸ்பத்திரியில் கிடந்தால் குடும்பத்துக்கு சாப்பாட்டுக்கும் வழியில்லை. மோட்டபைக்கும் நண்பனிடம் இரவல் வாங்கினது என்கிறான். அவங்களோடை கதைச்சு பாருங்கள். காசு குடுத்தாதான் வழிக்கு வருவார்கள். கோர்ட்டுக்கு போகாமல் பிரச்சனையை கெதியில் முடிக்கலாம்”

விருமாண்டி படம் போல ஒரு பக்கப் பார்வையை நியாயப்படுத்தி நைச்சியமான தொனியில் கூறினார் பெரேரா .

“அடிபட்டவரின் பெயர் என்ன?”

“ஜயதிலக” என்றவர் தொடர்ந்தார்.

“இன்றைக்கு உங்களுக்கெல்லாம் கெட்ட நாள். இல்லயா? பிரச்சனைகள் இனி அதிகமாகப் போகுது. என்ன செய்யப் போகிறீர்கள்? உங்களுக்குத்தான் சாட்சிகள் எதுவும் இல்லையே”

இரண்டு அர்த்தங்கள் தொனிக்க குதர்க்கமான பாவனையில் பேசி முடித்தார்.

“மீன்கடைக்காரன் நான் ரைட் டேர்ன் எடுக்கும்போது அங்கு நிற்கவேயில்லையே அப்பா. எப்படிக் கண்டிருக்க முடியும்?”

பொலிஸ்காரர் யாருக்கோ பக்கச்சார்பாகக் கதைப்பது தெரிந்தது. என்ன தேவைப்படுகிறது இவர்களுக்கு. இங்கு இதெல்லாம் சகஜம்தான்.

குற்றம் செய்யாமல் நாங்கள் எதுக்கு காசு குடுக்க வேணும் என குமுறியது வானதியின் மனம். கேட்பதற்கு ஆளில்லை.

“வானதி, இவர்கள் ஏதோ பெரிதாக அடி போடுகிறார்கள். அடிபடும் போது கண்டவர்களும் இப்போ இல்லையே. காணாத மீன்காரன் அவர்களுக்கு ஆதரவாகக் கதைக்கிறான். இன்சுரன்ஸ் நட்ட ஈட்டினைத் தந்தாலும் வழக்கு முடிய எவ்வளவு காலமாகுமோ. கோர்டுக்கு எத்தனை தவணைகள் சென்று காத்திருக்க வேண்டுமோ. நீ மேற்படிப்பிற்காக லண்டன் செல்லும் திட்டம் என்னவாகும்? எதுக்கும் ஓ.ஐ.சி.யிடம் கதைச்சுப் பார்ப்போம். எல்லா ரும் ஒரு மாதிரி இருக்க மாட்டினம்”

வானதிக்கு மிகவும் யோசனையாக இருந்தது. இப்போதான் வானதிக்கு தன்னுடன் வந்து ஆதரவாகக் கதைத்த மனிதரை ஞாபகம் வந்தது. அந்த நேரம் எதுவும் கேட்க மறந்த தன்னுடைய முட்டாள் தனத்தை நொந்து கொண்டாள். அவர் பெயரையாவது கேட்டிருக்க வேண்டுமே. அந்த நீண்ட உள்ஒழுங்கையில் எங்கு இருக்கிறாரோ. எப்படித் தேடுவது.

அடுத்த வழக்குத் தவணையில், அடி பட்டவன் வீல்செயரில் காலில் முழுவதாகச் சுற்றிய பாண்டேஜுடன் முக்கிமுனகி பக்கத் துணையுடன் வந்த போது நிலைமை இன்னும் இழுபடும் என்ற பயம் தொற்றியது. வழக்கு ஒத்தி வைக்கப்பட மனதில் திகில் பரவியது.

“அப்பா, அன்றைக்கு என்னுடன் கதைத்த மனிதர் அந்த ஒழுங்கையில்தான் எங்கேயோ இருக்கிறார். அவரைத் தேடிக் கண்டு பிடித்தால் உதவி செய்யக் கூடும்”

ஒழுங்கை முகப்பில் காத்திருந்த மூன்றா வது நாள் காலை வேளை அந்த மனிதரைக் கண்டபோது மகிழ்ச்சியில் தலைகால் புரிய வில்லை.

அதே நிமிர்ந்த நடை. மலர்ந்த புன்னகை. சம்பவத்தை ஞாபகப்படுத்த உடனே நினைவில் கொண்டு வந்தார்.

“ஆமாம். எனது வீடு அருகில்தான். வாருங்கள். வீட்டில் போய்க் ஆறுதலாக கதைப்போம்”

“*Office*...போகவில்லையா நீங்கள்?” இழுத்தார் சபேசன்.

“*Short leave* போட்டுக் கொள்கிறேன். பரவாயில்லை”

அவரது ஆர்வம் சிறிது சந்தேகத்தையும் பயத்தையும் சேர்த்தே தந்தது. இவர் என்ன சொல்லப் போகிறாரோ ?



வீட்டினுள் நுழைந்து வரவேற்பறையில் அமர்ந்தபோது மனம் இன்னும் கொஞ்சம் பதற்றமாகியது.

இராணுவ உடையில் அவரது படம். அவரது சாயலைக் கொண்ட வேறு இருவரும் இராணுவ உடையில் படமாக. சரி, விசயம் சரிவராதுபோல. மனம் அழுதது.

“சொல்லுங்கள். என்ன உதவி வேண்டும்”

“அன்றைய விபத்தில் சாட்சி எங்களுக்கு எதிராக இருக்கிறது. நீங்கள் மட்டுமே எங் களுக்கு உதவக்கூடிய ஒரு சாட்சி. விபத்து உங்கள் கண்முன் நடந்திருக்கிறது. முடிந்தால் காவல்நிலையம் வந்து நடந்ததை ஒரு வாக்கு மூலமாக கொடுக்க முடியுமா?”

இருவரையும் கூர்ந்து நோக்கினார் அவர்.

“அது என் கடமை அல்லவா. கோர்ட் நடை முறைத் தாமதங்களுக்கும் பிரச்சனைகளுக் கும் பயந்து மற்றவர்கள் செய்வது போல நான் மறுக்கமாட்டேன். கண்டும் காணாமல் போவதும் என் வழக்கமல்ல. அன்றைக்கே சொன்னேன். பதற்றத்தில் உங்கள் மகள் அதைக் கவனிக்கவில்லை”

புன்னகைத்தார்.

நெகிழ்ந்தார்கள் சபேசனும் வானதியும்.

புகைப்படங்களை யோசனையுடன் நோக்கு வதைக் கவனித்தார்.

“நான் இராணுவத்தில் இருந்தேன். ஓரிரு வருடங்கள் முன்பு எனது விருப்பில் ஒய்வு பெற்றேன். என் மன அமைதிக்காக. மருத்து வக் காரணங்களும் சில இருந்ததால் ஒய்வு பெறுவதில் சிரமம் இருக்கவில்லை. போர் கொடி யது. மாமன்னன் அசோகர் போல எனக்கும்

ஒரு கலக்கம் மனதில் வந்தது. எனது உணர்வுகளின் உண்மையான பரிமாணத்தை விளக்க இயலாது. நாங்கள் ஆறு சகோதரர்கள். மூன்று பேர் இராணுவத்தில் இருந்தோம். மூவரும் இராணுவத்திற்கு செல்வது பெற்றோருக்கு விருப்பமில்லை. எனினும் தடுக்கவில்லை"

"அப்போ, மற்றவர்களும் ஓய்வு பெற்று விட்டார்களா?"

"இல்லை. மூத்த சகோதரர் ஒருவர் இராணுவ உயர் அதிகாரியாக இப்போதும் சேவையில் இருக்கிறார். முல்லைத்தீவில். இராணுவத்தில் இருந்த இளைய சகோதரர் அண்மையில் அதே போர்க்களத்தில் இறந்து விட்டார். நாங்கள் சகோதரர்கள்தான். எனினும் சிந்தனைகளால் வேறுபட்டவர்கள்"

முகத்தை இரு கைகளாலும் அழுத்தித் தேய்த்தபடி யோசனையில் ஆழ்ந்தார். மெல்லிய சோகம் கண்களில் இழையோடியது.

அது எமக்கான ஆறுதலைச் சொல்கிறதா? தனது சகோதரருக்கான அஞ்சலியைச் செலுத்துகிறதா?

தேநீரும் பிஸ்கட்டும் மனைவி கொண்டு வந்தார். மனது நிம்மதியடைந்த தருணத்தில் அது தேவாமிர்தமாகத் தோன்றியது.

"எப்போது பொலிசில் வாக்குமூலம் தர வேண்டும் என்று கூறுங்கள். லீவு போட வேண்டும். தற்போது நண்பர் நடத்தும் பிரபல கம்பனி ஒன்றில் மனேஜராக இருக்கிறேன்"

இதுவரை உரையாடல் ஆங்கிலத்தில் தொடர்ந்தது.

அவர் பற்றி வேறு விபரங்கள் எதுவும் அறிய முடியவில்லை.

"உங்கள் பெயரை அறியலாமா?" தயக்கத்துடன் சபேசன் கேட்டார்.

"நிச்சயமாக. என் பெயர் பவித்ர தேசப்பிரிய ஹெட்டியாராச்சி"

1983இல் தன் குடும்பத்தை எரிக்க வந்தவர்களிடம் இருந்து காப்பாற்றி உயிர் கொடுத்த மற்றுமோர் நிசங்கவின் ஞாபகம் வர சபேசனின் கண்கள் பனித்தன.

இந்தத் தேசத்தின் உண்மையான பிரியர்கள் பவித்திரமான மனம் கொண்டவர்களாக இனியும் வந்து பிறப்பார்கள்.

நம்பிக்கை இருக்கிறது.

வசந்தம் ஒருநாள் வரக்கூடும்.

○○○

## எல்லை கடக்கும் கனவுகள் — வில்வரசன்

நாளைய விடியலில்
என் குரல்
எல்லை கடந்திருக்கலாம்,
பனியுறும் நிலத்தில்
சப்பாத்துக்களைத் திணித்தபடி
பனிக்கட்டிகளை
அள்ளிக்கொண்டிருப்பேன்
உன் நினைவில்.

என் பகல்கள்
உன்னருகில் இரவுகளாய்
சபிக்கபட்ட நிலத்தில்
உன் வார்த்தைகளை சுவைக்க
தேடவேண்டியிருக்கும்
விடுமுறைகளை.

அடகு வைத்த
அம்மாவின் தாலிக்கொடி
அமுதாவுக்கென்றொரு ஸ்கூட்டி
வட்டிக்கு வாங்கிய ஒருகோடி
கட்டி முடிப்பதற்குள்
காணாமல் போயிருக்கக்கூடும்
இளமையின் தேடல்கள்.

அதுவரைக்கும்
பத்திரமாயிருக்கட்டும்
தெருமுனை வரைக்கும் நீளும்
மணல் வீதியில் பதிந்துகிடக்கும்
நம் காலடித்தடங்கள்.



# இசையின் உளவியல்



## பேராசிரியர் சபா ஜெயராசா

இசையின் உளவியல், ***'இசை உளவியல்'*** என்று குறிப்பிடப்படும். இசையியலிலும் உளவியலிலும் நவீன ஆய்வுப்புலமாக இது வளர்ச்சி கொள்ளத் தொடங்கியது.

உளவியல் என்ற நவீன அறிவுப்புலம் வளர்வதற்கு முன்னரே உளவியல் சார்ந்த நடத்தைகளும், இசைவாக்கமும், சிந்தனையும், தொன்மையான மனிதவாழ்வில் இடம்பெற்றிருந்தது.

உயிரினங்களின் படிமலர்ச்சிக் கோட்பாடு அல்லது கூர்ப்புக்கோட்பாட்டின் அடிப்படையாக இசையின் தோற்றத்தை ஆராய்வோர், மனிதர் தோன்றுவதற்கு முன்னரே இசை தோன்றிவிட்ட தென்று குறிப்பிடுவர்.

பறவைகளும் விலங்குகளும் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் சூழலுடன் இசைவாக்கம் செய்வதற்கும் இசையைப்பயன்படுத்தின. மனிதர் மொழியை உருவாக்குவதற்கு முந்திய மொழியாக *(PROTO LANGUAGE)*, இசை அமைந்தது. - என்றவாறான பதிவுகள் உள்ளன.

மொழியின் உருவாக்கத்திலும் அதன்படிமலர்ச்சியிலும் கலந்து நின்று மனித உணர்வுகளுக்கு இங்கிதம் தந்த செயற்பாட்டை இசை மேற்கொண்டது என்ற கருத்து இசை உளவியலிலே முன்வைக்கப்படுகிறது.

உளவியல் என்ற பெரும் அறிவுப் புலத்தின் உட்பிரிவுகளில் ஒன்றாக உளஒலிகையியல் *(PSYCHOACOUSTICS)* என்ற துறைவளர்ச்சியடைந்து வருகிறது. இத்துறையில், ஒலிப்புலக்காட்சி விரிவான ஆய்வுகளுடன் உட்படுத்தப்படுகிறது

ஒலியோடு தொடர்புடையதாக உடலில் ஏற்படும் துலங்கல், மனவெழுச்சியில் நிகழும் தெறிப்பெழுகை முதலியவை உள ஒலிகையியல் ஆய்வுகளில் ஆழ்ந்து நோக்கப்படுகின்றன. உள இயற்பியல் *(PSYCHOPHYSICS)* என்ற ஆய்வுத்துறையும் இந்த அறிபொருளில் ஆழ்ந்த கவனம் செலுத்துகின்றது.

***"இசைஅறிகை"*** *(MUSIC COGNITION)* என்ற கருத்து வடிவத்தை அறிகை உளவியலாளர் முன்வைக்கின்றனர். இசைநுகர்ச்சியால் உருவாக்கப்பட்ட அறிகைக் கட்டமைப்பு இசையைத் தன்மயமாக்கிக் கொள்வதற்கும் தன்னலமாக்கிக் கொள்வதற்கும் *(ASSIMILAION AND ACCOMMONDATION)* துணை செய்கின்றது.

உளவியலிலே பல சிந்தனைக்கூடங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. உளப்பகுப்பியல், நடத்தையியல், மானிட மாண்பியல், அறிகையியல், மார்க்சியவியல், பின்னைப்புதுமையியல் முதலாம் சிந்தனாகூடங்கள் தத்தமது கருத்தியல்தளத்தில் நின்று இசையை நோக்கினாலும் இசையின் பதிலீடில்லா முக்கியத்துவத்தை ஏற்றுக் கொள்கின்றன.

உளவியல், மனித நடத்தைகள் பற்றி ஆராயும் அறிவியலாக உள்ளது. அந்நிலையில் மனித உடற் செயற்பாடுகளில் இசை ஏற்படுத்தும் ஆக்க விளைவுகள் ஆழ்ந்து நோக்கப்படுன்றன. மூளையின் தொழிற்பாடுகள், சுவாசச் செயற்பாடு, குருதியோட்டம், தசைநார் இறுக்கம், முதலியவற்றில் ஆக்க விளைவுகளை இசை ஏற்படுத்தல் ஆய்வுகளின் வழியாக நிறுவப் பெற்றுள்ளது. *(HANCOX,2001).*

நோய் எதிர்ப்புவலுவை இசை விசை கொள்ளச் செய்கின்றது, ஏற்பட்ட நோய்களைக் குணமாக்குவதற்கு மருந்துகளோடு சேர்த்து இயங்குகின்றது.

இசைத்தலால் வாய்க்கும், நாவுக்கும், உதடுகளுக்கும், சுவாசநிலைகளுக்கும் கிடைக் கப்பெறும் பயிற்சி சொல்வழியான தொடர் பாடலுக்கு வலுவூட்டுகின்றது. மொழி அளிக் கைத் திறனை மேம்படச் செய்கின்றது.

தூக்கத்தை மேம்படச்செய்தல், உடலியக் கத்தைச் செம்மைப்படுத்தல் இயக்க விறைப்பை விடுவித்தல், நோவைத்தாங்கும் திறனை வலுவடையச் செய்தல், இருக்கைத்திறனைச் செம்மையுறச் செய்தல், இயக்கத்திறனை *(MOTO SKILL)* மேம்படுத்துதல் முதலாம் பல ஆக்க விளைவுகளுக்கு இசை துணை செய்கின்றது.

உளத்திறனை மேம்படுத்துவதில் இசையின் வகிபாகம் ஆழ்ந்து நோக்கப்படுகிறது. கவ னத்திறன், ஒலியைப்பிரித்தறியும் திறன், திரிபுக் காட்சிகளை பகுத்தறியும்திறன், ஒலிக்கும் நடத் தைகளுக்கும் உள்ள தொடர்புகளைக் கண் டறியும் முறைமை, முதலாம் அறிகை ஆற் றல்கள் இசையால் வளமூட்டப் பெறுகின்றன.

***'பன்முக நுண்மதி'*** ஆய்வில் இசை நுண்மதியும், ஒன்றாகக் கணிக்கப்படுகின்றது. இசை நுண் மதியை அளவீடு செய்யும் நுண் மதித் தேர்வுகளும் உருவாக்கப்படு கின்றன.

கற்பனையாற்றல், மதிப்பீட்டுத் திறன், தீர்மானிக்கும் திறன், புத்தாக்கத்திறன், அழகை நுகரும் திறன் முதலியவை இசையால் வளர்க்கப்படுகின்றன.

இசையைக் கூட்டுநனைவிலி யின் *(collective unconscious)* இயல் போடு தொடர்புபடுத்திப் பார்க்கும் உளப்பகுப்பு உளவியலாளரும் உளர். இசை மனிதரின் ஆழ் மனத்திலே உறைந்து உள் ளமைந்து தொன்மங்களோடு இணைந்தும் தலைமுறையாகக் கையளிப்புச் செய்யப்பட்டு, கூட்டான உணர் வினைக் கடத்தி வருகின்றது என்பர். அது மனிதத்தோடு இணைந்த இயல்பூக்கின்றது. என்பது விவாதத்துக்கு உரிய கருத்தாகின்றது.

அதனோடு தொடர்புடைய பிறிதொரு கருத்தும் உண்டு. இசையாற்றலும், இசை உளப்பாங்கும் ஒருவருக்கு அவரின் சந்ததி வழிப் பிறப்புரிமையால் கிடைக்கப்பெறுகிறது என்று வலியுறுத்வோரும் உளர். ஆனால் மார்க்சிய உளவியல் மரபுவழித்தேட்டத்தை நிராகரிக்கின்றது. மனிதரது உடலமைப்பு மரபுரி மையால் பெறப்பட்டாலும், மனித ஆற்றல், சூழலால் உருவாக்கப்படுவதாக மார்க்சிய உளவியல் குறிப்பிடும். சமூக சூழலால் கற்றலும் அறிவும் வளர்க்கப்படுதலை தமது ஆய்வுகளின்வழி மார்க்சிய உளவியலாளர் வைகோட்சி நிறுவினார்.

மனத்தை வளம்படுத்த சீர்மிய உளவியற் செயற்பாட்டில் இசையைப் பயன்படுத்தும் சிகிச்சை நுட்பம் வளர்ச்சிகொள்ளத் தொடங்கி யுள்ளது. ***'இசைச் சிகிச்சை'*** *(MUSIC THERAPY)* என்ற தொடர் வழக்கில்வந்துவிட்டது.

இதன் இருப்புத் தொடர்பான தன்னிலை உணர்வை ஏற்படுத்துவதற்கும், தற்கணிப்பு



Apollo: The Greek God of Music & Light

தன்னிலை எண்ணக்கரு, தற்படிமம், தொடர் பாடல்வழி மனவளம், ஆகியவற்றை வளர்ப்ப தற்கும் சிகிச்சையில் இசைபயன்படுத்தப்படு கிறது. ஆக்க மலர்ச்சியுடன் இணைந்த சீர்மியச் செயற்பாட்டை வளர்க்க இசை உதவுகின்றது.

இசையைச்சீர்மியச்செயலில்பயன்படுத்தல் தொன்மையான கிரேக்கத்திலும் தமிழகத்திலும் இடம்பெற்று வந்தது. மருத்துவத்துறைக்கான கிரேக்கரின் கடவுளான ***'அப்பலே'*** இசைக்குரிய கடவுளாகவும் கொள்ளப்பட்டார். இசையும் மருத்துவமும் ஒன்றித்தநிலை அதனால் புலப் பாடு கொள்கிறது.

தொன்மையான தமிழகத்தில் வாழ்ந்த பாணர், பண்ணுறப்பாடுதல், இசைக்கருவி இசைத்தல், கூத்து நிகழ்த்துதல் என்பவற்றோடு உளப்பிணி நீக்கும் செயற்பாட்டில் ஈடுபட்ட மைக்கும் சான்று உண்டு.

அகத்திணைப்பாடல்களில் தலைவியின் ஊடலைத் தீர்த்துவைக்கும் வாயில்களாக விளங்குவோரில் ஒருவராக பாணர் குறிப் பிடப்படுகின்றார்.

சமகாலச் சீர்மியச் செயற்பாட்டில் இசை யைப் பயன்படுத்துகையில் தன்னெழுச்சியுடன் பாடுதல், இசையைச் செவிமடுதல், இசைக் கருவிகளை வாசித்தல், ஒத்திசையும் துள்ளல் இசையும் கலந்த செயற்பாடுகளில் ஈடுபட வைத்தல், இசைப்பாடல்களை ஆக்கச் செய்தல், இசையுரையாடல்களில் ஈடுபட வைத்தல் முதலியவை மேற்கொள்ளப் படுகின்றன. சுகமளித்தல், மீட்டெடுத்தல் *(HALING AND RECOVERY)* ஆகியவற்றுக்கு இசை பயன்படுத்தப்படுகிறது.

உளவியலும், இசையியலும் மனவெழுச் சிக்கும் இசைக்கும் உள்ள தொடர்புகளை ஆராய்கின்றன. மனவெழுச்சிகளை வளர்த் தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல், தொழிற் பாடுகளோடு இசைய வைத்து விளைவைப் பெருக்குதல், முதலியவற்றுக்கு இசை பயன் படுத்தப்படுகிறது.

மனவெழுச்சி என்பது உளவெழுச்சி யென்றும் குறிப்பிடப்படும். அது உள்ளத்தில் நிகழும் சிக்கலான தொழிற்பாடு. நரம்புத் தொகுதியின் அருட்டலுடன் அது தொடர் புடையது

முடிவுகளை மேற்கொள்ளல், செயற்பாடு களில் ஈடுபடல், ஆற்றுகைகளை நிகழ்த்தல், கற்றல், போரிடுதல், ஓய்வெடுத்தல் முதலி யவை மனவெழுச்சிகளுடன் நேரடியான தொடர்புடையவை. மனவெழுச்சிகளுடன் இசை உருவாக்கம் பெற்றது என்றும் அவ்வாறு தோற்றம் பெற்ற இசை, மனவெழுச்சிகளை இயக்குவதிலும் பங்கு கொள்கின்றது என்பர்.

பொருத்தமான இசை அளிக்கைகளால் தொழில் நிலையங்களிற் பணிபுரிவோரின் வினைத்திறனை அதிகரித்தல் கண்டறியப் பட்டது. அங்காடிகளில் மக்களின் இடை வினைகளை நெகிழ்ச்சிப்படுத்துவதிலும் இசை யின் பயன்பாடு அறியப்பட்டுள்ளது.

உடற்பயிற்சியை நெறிப்பாட்டுடன் மேற் கொள்வதற்கும், தியானத்தை இங்கிதமாக மேற்கொள்வதற்கும் இசையின் பயன்பாடு துணை செய்கின்றது. மரபுவழிச் சடங்குகள் மட்டுமன்றி நவீன சடங்குகளிலும் களியாட்டங் களிலும் இசையின் வகிபாகம், பதிலீடின்றித் தொடர்ந்தவண்ணமுள்ளது.

பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் இங்கிதமான இசையைக்கேட்கச் செய்தல் நீண்டகால மரபாக இருந்துவருகிறது. கரு வுற்ற காலத்தில் முகிழ்ந்தெழும் பயம், கவலை, வெட்கம், வலி, முதலாம் எதிர் மனவெழுச்சிகளில் இருந்து விடுபடுதலுக்கும் அன்பு பாசம், மகிழ்ச்சி, பெருமை, ஆச்சரியம், முதலாம் நேர்மனவெழுச்சிகளை வளர்ப்பதற்கும் இசை துணை செய்யும்.

நாட்டுப்புற வழக்காற்றில் குழந்தை பிறப் போடு இணைந்த உளவியல் சுகத்தையும் பெருமிதத்தையும் மருத்துவிச்சி இசையோடு பாடுதல் உண்டு.

மஞ்சள் பொதியோடும் வந்தீரோ தம்பி
மஞ்சள் மலைநாடும் கண்டீரோ தம்பி
இஞ்சிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
இஞ்சிமலைநாடும் கண்டீரோ தம்பி

- என்றவாறு அந்த வாய் மொழிப்பாடல் வளர்ந்து செல்லும்.

இசையின் உளவியல் என்பது பரந்து ஆழ்ந்த ஓர் அறிவுப்புலம். வரலாற்று நிலை, கோட்பாட்டுநிலை, பரிசோதனை நிலை, முதலியவற்றை அடியொற்றி உளவியலிலும், இசையிலும் ஆய்வுகள் நிகழ்த்தப்படுகின்றன.

○○○



சிறுகதை

# யோகம்

முனைவர்
புதுவை மனுநீதி

இராவண தேசத்தின் தலைநகரம் கோணமலை. முன்பு போன்று கடல் அலைகள் அழித்திடாத உயரத்தே மலையில் பதி வீற்றிருந்தார். அங்கு ஆற அமர்ந்து பாசக்கார ஆன்மாக்களினை சரியான காலத்தில் தன்னகத்தே அழைத்து வருவதிலும், வர வைப்பதிலும் அவர் ஒரு விற்பன்னர். இயற்கையின் கொடையாகப் பின் நாட்களில் வர்ணிக்கப்பட்ட கடவுளின் சிருஷ்டிப்பே இந்நகர். ஆதலினால் கோவிலின் நாயகனின் கோபுரத்தை விட உயர்த்தியாக எந்தக் கட்டிடமும் அமைத்திடலாகாது என்பது வழக்காறு. நகர் சார் வனப்புக்களும், கலாசாரப் பண்புகளும் தலைத்தோங்கிய தமிழனின் தலைநகராம் இங்குதான் யோகநாயகி எனும் நாமம் கொண்ட யோகப் பெண் யோகநாதனுக்கு ஒரே மகளாக அவதரித்திருந்தார். தனது யோகம் மகளுக்கும் பெயராக வரவேண்டும் என்பதற்காகவே நாயகிக்கு தனது பெயரின் யோகம் தந்தையால் இணைத்துக் கொள்ளப்பட்டது, ஒரேயொரு மகள்மீது யோகநாதனுக்கு அத்தனை கொள்ளைப் பிரியம், அந்தப்பாவிற்கு யோகநாயகி உலகத்தில் ஒரு லோகநாயகி. தந்தை, மகள் பாசப்பிணைப்பில் இவரின் இத்தகு அணுகுமுறை மட்டும் விதிவிலக்கா என்ன?

யோகநாயகி பிறப்பில் தனித்தவள். பத்தாண்டு கால தவத்தின் பின்பு யோகன் எனும் யோகநாதனுக்கும், மதுரம் எனும் மதுரநாயகிக்கும் மகளாகப் பிறந்தவள். பல்வேறு மார்க்கங்களில் படைத்தவன் தொழிலைக் கூட வியாபாரமாக்கிய நவீன விஞ்ஞான முயற்சியால் யோகனுக்கும் மதுரத்திற்கும் பிள்ளைப்பேறு கிடைத்த போதும் யோகனுக்கு மதுரத்தைப் பணயம் வைத்தே யோகம் கிடைக்க வேண்டும் என்று விதி போலும். தாயின்றி யோகத்தினை தன் நாயகியாகத் தந்தை யோகன் வளர்த்துவந்தார். தாயாகவும், சேயாகவும், மனைவியின் மறுவுருவமாகவும் எனத் தனது மகள் யோகநாயகியைத் தனது முப்பெரும் தேவியராகக் காணும் யோகம் யோகனுக்குக் கிடைத்தது. இது கர்மவினைப் பயனா? அல்லது நவீன விஞ்ஞான முயற்சியின் மீதான அபரிதமான ஆசையினால் வந்த விபரீதமா? அலைகளினால் மோதுண்டு கடலடியே சென்றுவிட்ட கோணமலைப் பதியினைப் போன்று அவ்வப்போது இத்தகு உணர்வுகள் வெளியே எட்டிப் பார்த்தது. ஆனாலும், விடை கிடைக்கவில்லை. அலைகள் அடிக்க முடியாத உயரத்திற்கு பதிதான் போய் விட்டாரே? யோகத்தை விட்டு உயரப் போய் யோகனுக்கு விடை காணும் ஆவலும் இல்லை. பிறப்பினால் தாயினைப் பலி கொண்ட யோகக்காரி என்ற பெயர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் மறுபெயரில் பதிவிடும் அளவுக்கு அவளின் மனதில் பதிந்திருந்தது. ஆதலினால் யோகனுக்கு யோகத்தை விட்டொரு வாழ்வை எண்ணிட இயலவில்லை.

வளர்ந்து வந்த யோகநாயகி படிப்பில் கெட்டிக்காரி. சகபாடிகளுடன் அன்புடையவள்.

விளையாட்டில் அசாத்திய துணிச்சல் கொண்ட வள் எனப் பாடசாலைக் கல்வியினை சரிவர கற்று ஞானம் பெற்றவளானாள். பட்டதாரி யானாள். பட்டதாரிப்பயிலுனர் ஆனாள். தனது பிறப்பின் துரதிஸ்ட யோகத்தினை மறக்கும் அளவுக்கு அவள் உருவாக்கிய அவளது சூழல் மற்றும் அவளின் அயல் அவளுக்குச் சந்தோஷத்தினைக் கொடுத்தது. திருமண வயதும் வந்தது. தந்தையிடம் மகள் அன்பாய் கேட்டாள். “அப்பா, திருமணம் ஒருவருக்கு கட்டாயமாகத் தேவைதானா?”, “மணம் இல்லா வாழ்வு முறையில் தனித்து வாழ்கின்ற பெண்ணை சமூகம் யோகக் காரியாகக் கருதாதா?”, “அம்மாவுக்கு நடந் ததுவே எனக்கும் நடக்காது என்கின்ற உத்தரவாதத்தினை யார் தருவார்?” எனக் கேட்டாள். யோகநாயகி பெண்ணியம் பேச வில்லை. யதார்த்தத்தினை உரைத்தாள். உயிரின் உயிர்ப்பினை, அதன் இருப்பற்ற உயிர்மையினைத் தெளிவுற எடுத்தியம்பினாள். உயரத்தே சென்றுவிட்ட கோணமலைச் சிவன், காளியினை கீழே விட்டுச் சென்றதற்கு இதுதான் காரணம் போலும் என யோகநாதன் தன்னுள் உரைத்துக் கொண்டார். என்னுடன் கடவுள் பிறப்பெடுத்துச் சண்டை போடுதோ? எனத் தன்னுள் புளுங்கிக் கொண்டார். தனது இறுதி மூச்சு நிற்கும் முன்பு தனது இளைத்த மகளுக்கு யோகமான யோகராஜனைக் கொணர்ந்தார். அதிலும் யோகமே. மறுப் பின்று, யோகமான பிணைப்பினால் அதிக மறுப்பின்றி யோகமும் யோகராஜனை ஏற்றுக்கொண்டாள். தந்தையின் மந்திரப்படி யோகம் புதுக் குடும்பத்தின் நாயகி ஆனாள். யோகராஜனும் அன்பு மிக்கவன். தந்தை, தாய் பாசப்பிணைப்பில் வாழ்ந்த ஒரே ஆண் மகவு. யோகத்தினைத் தனது கனவு நாயகியாக ஏற்றுக்கொண்டது அனைவருக்கும் யோகந்தான். ஆனாலும், விதி விளையாடத் தவறவில்லை.

திருமணம் முடிந்து இரண்டாம் நாள் திடுப்பென வந்த அலுவல் காரணமாக தனது அலுவலகம் சென்று வருவதாக கூறிச் சென்ற யோகராஜன் வீட்டிற்கு மீளத்திரும்பவில்லை. காணாமல் போவதற்கு அவர் ஒன்றும் சிறுபிள்ளை இல்லை. காணாமல் ஆக்கப்பட் டிருந்தார். வலுக்கட்டாயமாகக் காணாமல் செய்யப்படுவதற்கு காரணங்கள் இல்லாத போதும் காணாமல் ஆக்கப்பட்டோர் வாழ் கின்ற பகுதியில் வாழ்ந்த காரணத்தினால் இவரையும், அவராக நினைத்து தூக்கியதாக பிற்காலத்தே தூக்கிச் சென்றவர்களில் ஒருவர் வந்து கூறியதை ஞாபகப்படுத்தினாள் யோகம். அவரது யோகம் அப்படி என்பதுவா? இவளது யோகம்தான் இப்படி ஆக்கியது என்பதுவா? யோகராஜன் காணாமலாக்கப்பட்டோரின் பட் டியலில் இன்றும் முதன்மையாக உள்ளார்.

கண்டுபிடிக்கக்கூடிய யோகம் உள்ளவர்கள் பதியருகே மேலே உள்ளபோது நான் எங்கும் அலைத்து திரிவதில் பயனில்லை என தந்தை யோகமும், மகள் யோகமும் பற்று இன்றி ஆனால் பற்று உறுதியுடன் தனது நம்பிக்கை யினை இறுகப்பற்றி இருந்தனர்.



காலங்கள் சென்றன. தனித்தே விழித்தே இருந்தாள். யுத்தம் முடிந்தது. யோகமும், மகள் யோகமும் பதியிடத்தே வேண்டியபடியே எவரும் புதிதாக் காணாமல் ஆக்கப்படவில்லை என்பது நிதர்சனமாயிற்று. புதிதாய் திருமணம் முடித்தவர்களுக்கு யோகந்தான் என அவரவர் யோகம் நினைத்துக் கொண்டது. இதனால் யோகத் திற்கும், மகள் யோகத்திற்கும் எரிச்சல் என்றில்லை.

நிம்மதியாகவே இருந்தது. இன்னோர் யோகம் இவ்வுலகத்தே இருக்க வாய்ப்பில்லை என்ப தில் யோகத்திற்கு மட்டற்ற சந்தோஷம்.

ஊர்த்திருவிழா ஆரம்பித்தது. யுத்தத்திற்கு பின்னரான அமைதிகாலம். கோணமலைக் காளியம்மன் திருவிழாவினைத் தரிசிக்க உள்ளூர்க்காரர்களுடன் வெளியூர்காரர்களாகிய எம்மூர்க் காரர்களும் வந்திருந்தனர். அவர்களின் வருகையினால் பிராமணர்களுக்கும், தர்ம கர்த்தாக்களுக்கும்தான் நல்ல யோகம் என ஒரே பேச்சு. யோகத்தின் அதிஸ்டம் போலவே இவர்களின் வருகை நாட்டின் பொருளாதாரத்தினையும் ஊக்குவித்ததாகக் கருதினர். இத்திருவிழாவிற்கு சிறுவயதில் கனடாவிற்குப் புலம்பெயர்ந்திருந்த யுகபுரு சனும் வந்திருந்தார். அழகிய தோற்றம் கொண்டவன். அவனது யோகமும் எம்மூர் யோகமும் ஒத்துப்போகும் அளவிற்கு இருவரது சாதக யோகமும் அப்படிப் பொருத்தம். யுகபுருசன் தாயினை விபத்தில் இழந்தவன். திருமணமாகிய நாளன்றே தனது முதல் மனைவி ஏதோ காரணத்தினால் கனடாவில் தூக்கு மாட்டிக் கொண்டுவிட யுகபுருசன் மாப்பிள்ளையாக மணவறையிலிருந்து சிறை யறைவரை சென்றவர். அவரது யோகம் விரைவில் நிரபராதியாக வெளியே வந்து தமிழ்ப்பட பாணியில் உள்ளூர் யோகத்தினை கோணமலைக் காளியம்மன் ஆலயத்தில் கண்டு ஆட்கொள்ள வைக்கப்பட்டார். தங் களுக்குள் சண்டையிட்டுக் கொண்ட இருவரது யோகங்களும் ஆலயத்திலும் சண்டையிட்டுக் கொண்டன. இது சரி வருமா? உத்தரித்தது போதாதா? புது யோகம் பழைய யோகத்தை மறக்குமா? மறைக்குமா? மறுக்குமா? புதுப் புருசன் யுகபுருசனாகவே எப்போதும் இருப் பானா? யோகத்தின் யோகம் புது வாழ்வால் மறைக்கப்படுமா? மீண்டும் கோணமலைப் பதிக்கும், கோணமலைப் பசுவிற்கும் இடை வெளி அதிகமாயிற்று. பதி மட்டும் இன்னமும் கீழே தனதருகே இருக்குமானால் சுனாமி அடித்துக் கொலை செய்யும் அளவுக்கு யோகம் கோணமலைப் பதி நாயகன் மேல் சீற்றம் கொண்டிருந்தாள். உயரத்தே இருந்தவர் தனது தூதாக காளியிடத்தே அனுப்பிய யுகபுருசனாகவே கண்ணுற்றாள்.

கோணமலைப் பதி நாயகன் தனது கால டியில் காட்டியவரை யோகமாக எண்ணி யோகம் கரம் பிடிக்க எண்ணினாள். தந்தை யோகநாதன் மௌனியானார். தான் ஏதே னும் கதைத்து அதன் விளைவாக யோகம் மதி கெட்டால் மீண்டும் தனது யோகம் தன்னைக் கோபித்துக்கொள்ளும் என்பதனால் அமைதியானார். மதுரநாயகி யோகக்காரி இதை எல்லாம் பார்க்காமல், என்னை மட்டும் பார்க்கச் சொல்லிச் சென்று விட்டாள் பதி யிடத்தே மேலே. தான் எடுக்காத, எவரோ என்னிடத்தே விட்டுச் சென்ற அதிஸ்ட லாபச் சீட்டில் ஆட்பரிசில் விழுந்திருந்ததாய் ஓர் உணர்வு.

ஒருவாறாக யுகபுருசன் யோகநாயகிக்கு நாயகன் ஆனார். இருவரும் யோகக்காரர்கள் என்று ஊரே பேசிற்று. அன்று யோகமற்ற வர்கள் இன்று அனைவருக்கும் சாப்பாடு போட்டு அழகுற உடுக்க வைத்ததனால் யோகக்காரர்கள் ஆனார்கள். ஊரவரின் மன தளவில் அல்லாத வெட்டிப் பேச்சு அது. யுகபுருசன் யோகத்தினை கனடாவிற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தான். கனடா மாப்பிள்ளை ஆதலினால் யோகநாத னுக்கும் யோகம். யோகநாதனுக்கு அப்படி ஒரு சந்தோசம். தனிமை - ஆனாலும் ஏற்றுக்கொண்டார். புதியதொரு ஞாலமாகக் கொண்டார். வெளியூர் செல்ல ஆயத்த மானார்கள் தம்பதிகள். அனைத்தும் ஆயத்த மாயிற்று. தனது முதலாவது கட்டிய கணவன் யோகராஜனின் விபரங்கள் அடங்கிய கோவையினை எடுத்துச் செல்வதா? என்பதில் தயக்கம். யோகத்தின் நாயகிக்கு யுகபுருசன் அழகாகக் காதருகே வந்து கூறினான். இருவரும் சேர்ந்தே தேடுவம். யோகம் கிடைத்தால் உனக்கு யோகம். கிடைக்காது போனால் யோகம் எனக்கு. யோகநாயகிக்கு கவலையிலும் சந்தோசம். யோகத்திற்கு இனிமேல் எல்லாம் யோகம்தான். இருவரை யும் கனடா அன்புடன் வரவேற்றது.

❍❍❍

# சின்னஞ்சிறு கவி வரிகள்

## காமம் இல்லாக் காதல்

தினம்தினம் தேய்கிறேன் - புவியே
உனையெண்ணி மாய்கிறேன்
நிலவென்னைப் பார்க்காமல்
நீ மறுபுறம் திரும்பினாலும்
இதுஎன்ன மாயம்
தினம்தினம் வளர்கிறேன்
தித்திப்பாய் சிரிக்கிறேன்
திகைப்பாயும் இருக்கிறது
காமம் இல்லாக் காதலென்பது
இதுதானோ

## வாழ்வே மாயம்

இழவுவீடு போய்ப்பார்
நிலையா வாழ்வு புரியும்
மகரகம போய்ப்பார்
மாயவாழ்க்கை தெரியும்
இதை அறிந்த பின்னும்
கோபதாபம் ஏன்?
பழிபாவம் ஏன்?
வாழ்வின் அநித்தியத்தை எண்ணு
அடுத்திந்த சத்தியத்தைப் பண்ணு
மாயவாழ்வு மகத்தாய் மாறும்
மானுடமே மலர்க்குவியலாகும்

## செயல் இழக்கும் செயற்கை

மண்குடிசை நிலத்தினிலே
திண்ணைக் குளிர்மையிலே
ஏகாந்தமாய் காற்றசைய
பூச்சி புழுப் பயமின்றி
கள்ளர் காடையர் திகிலின்றி
கொண்ட அந்த உறக்கம் இன்று
கோட்டையன்ன வீட்டிலே
கொண்ட மலர் மஞ்சத்தில்
நீட்டி நிமிர்ந்து படுத்தாலும்
நிச்சயமாய் வருகுதில்லை
இயற்கைக்கு முன்னால்
செயற்கை எல்லாம்
செயலிழக்கும் விதி இதுதான்.

## மரணக்கடல்

மரணக்கடல் மரகத மேடை
உப்புப் படுகை உன்னத மெத்தை
மல்லாந்து நீந்தும் உல்லாச உலகம்
ஜோர்தான் பள்ளத்தாக்கு
ஜோராய்க் கண்முன் விரியும்
கவின்காட்சி ஆட்சி செய்யும்
அதற்கு மரணக்கடல் பெயரெதற்கு
பல திக்கு ஆறுகளும் வந்தங்கு
மரணச் சங்கமம் அடைவதாலா?
மனிதனை மரணிக்கத் தெரியாத
மரணித்தகடல் (Dead Sea) என்பதாலா

## மூளைக்கலச் சிதைவு

கபாலத்துள் கணினியொன்று
கணிநீ என்று ஆணையிட்டால்
கணிக்கும் கணக்கும் போடும் - எப்
பணிக்கும் அதுதான் ஆதாரம்

கணக்குப் பிழைக்குமென்றால்
கடலேரி வற்றிவிடும்
இணக்கக் குறைபாடும்
இசைந்தே வந்துவிடும்

நினைவுக் கலங்களெல்லாம்
நீர்த்துப்போய் விடவே
சேர்த்து வைத்த உறவைக்கூட
மறந்து போகும் நிலையொன்று

## மழை

சூல் கொண்ட மேகங்கள்
சுழன்றடிக்கும் காற்றோடு
போராடிப் போராடித்
தோற்றுவிட்ட ஆற்றாமை
கண்ணீர்த் தாரையாய் கொட்டியது!

-செல்லையா சுப்ரமணியம்-



# நாட்டார் நிகழ்த்துக் கலைகளைப் பாதுகாப்போம்

நிகழ்த்துக்கலை என்பது அரங்கொன்றில் கலைஞர் ஒருவர் அல்லது பலர் தமது முகம், உடல் அல்லது இருப்புக் கொண்டு நிகழ்த்துவதற்குரியதானக் கலை வடிவமாகும். இது பல்வேறு துறைகளை உள்ளடக்கிய தாயினும் பார்வையாளர்கள் முன்னிலையில் நேரடியாக நிகழ்த்திக்காட்டும் கலை வடி வையே குறிக்கும். ஆரம்பக் காலத்தில் வழிபாட்டு முறைகளுடனும் சடங்கு சம் பிரதாயங்களுடனும் நாட்டார் கலைகள் செல்வாக்கு பெற்று காணப்பட்டது. பின்னர் மனிதன் நாகரீகமடைய ஆரம்பிப்பதற்கு முன்னரே கலைச்செயற்பாடுகளில் ஈடுபட்டான் என்பதனை வரலாற்றுத் தடயங்களிருந்தும் ஆய்வாளர்களது ஆய்வுகளில் இருந்தும் கண்டுகொள்ளலாம்.

“பழையன கழிதலும் புதியன புகுதலும்” இன்றைய நவீன உலகின் மகுடமாய் இருக்க நாட்டாரியல் வழக்கிற்கு என்றுமே ஒரு இடமுண்டு. அதிலும் குறிப்பாக தமிழர்கள் தமது பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் பல கலை கலாசார விடயங்களை தம்மோடு வைத்து தலைமுறை தலைமுறையாகக் கலைகளை தம் பரம்பரைக்கு கையளித்தும் கலைகளுடனே கைகோர்த்தபடியும் அதனை பாதுகாக்கின்றனர்.

தமிழும் தமிழ் பண்பாடும் தழைத்தெழச் செய்வதில் தமிழர்களின் பங்கு அளப்பரியது.




**சொக்கலிங்கம் லோஜினி**
(ஊடக கற்கைகள் துறை
மூன்றாம் வருட மாணவி
யாழ். பல்கலைக்கழகம்)


அந்த வகையில் நாட்டார் கலை என்பது நாட்டுப்புற கலாசாரத்தின் சூழலில் உருவாக் கப்பட்ட அனைத்து வகையான காட்சிகளையும் உணர்வுகளையும் உள்ளடக்கியதாகும்.

இந்நிகழ்த்து கலைகளின் நோக்கமாக அறக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதும் பயன் தரத்தக்க தகவல்களை எடுத்துக் கூறுவதும் வாழ்க்கைக்கான விழுமிய விட யங்களை விளக்குவதுமாகும்.

இந்த நாட்டாரிடையே வழக்கில் வந்த பழமொழிகள், உபகதைகள், பாடல்கள், விடுகதைகள், நாடகம், கூத்து போன்றன பங்களித்தன. ஒரு மனிதன் சமூகத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை யும் அவனது சொந்த வாழ்விலும் சமூகத்திலும் ஒரு உறுப்பினராக எவ்வகையான பணிகளை ஆற்றவேண்டும் என்பதையும், தன் உறவு களை எவ்வாறு பேணவேண்டும், பண் பாட்டை பழக்க வழக்கங்களை எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்பதெல்லாவற்றையும் நாட்டார் இலக்கியங்களும் வழக்காறுகளும் அறிவுறுத்துகின்றன.

நாட்டார் வழக்காறுகள் அதிகமாக வாய் மொழிமூலம் தலைமுறை தலைமுறையாக கடத்தப்படுகின்றன. இது ஒரு பாரம்பரிய தன்மை வாய்ந்ததாகவும் வட்டாரத்திற்கு ஏற்ப இடத்துக்கிடம் வித்தியாசப்பட்டும் இக்கலைகள் மக்களது பண்பாட்டை பிரதிபலிப்பதாகவும் அமைகின்றன. இந்நிகழ்த்து கலைகள் எளிமையாலும் இனிமையாலும் யாவரையும் தன்பால் ஈர்க்கும் இயல்புடையெனவாகவும் காணப்படுகின்றது.

இக்கலைகள் பொதுவாக கிராமப்புறங் களில் ஒரு சமூகமாக மாறக்கூடிய மக்களை கூறலாம் இலங்கையில் காணப்படும் எல்லாப் பகுதியினரதும் வாழ்க்கையை எடுத்துக்

கொண்டால் ஒவ்வொரு பகுதியினரும் வெவ் வேறு விதமான வாழ்க்கை முறை, உணவு முறை, பண்பாட்டு பழக்கவழக்கங்கள் போன்ற வற்றைக் கொண்டும் காணப்படுகின்றனர்.

இந்நிகழ்த்துக் கலைகளின் சிறப்பம்சமாக பார்வையாளர்கள் பங்கேற்பாளர்களாகவும் பங்கேற்பாளர்கள் பார்வையாளராகவும் மாறுவர் இக்கலைகளை மக்கள் இரசித்துப் பார்த்து மகிழ்வார்கள். மனித உளவியல் கதையும் பாடல்களும் ஆட்டங்களும் கொண்டிருக்கும். இயல்பான மகிழ்ச்சியும் ஆர்வமும் அவற்றை விரும்பி கேட்கும் பொழுதுபோக்கு வெளிக்கு மக்களை கொண்டு செல்லும்.

நாட்டாரியல் நிகழ்த்துக் கலைகளின் வெளியும் காலமும் மக்களின் பங்கேற்பும் தொடர்பாடலை மக்களுக்கு நெருக்கமான தாகவும், நம்பிக்கையானதாகவும் அவற்றின் வழியே வலிமையானதாகவும் உருவாக் கிக் கொள்ள துணையாகின்றன. படைப் பாக்கம் அழகியலாக மாத்திரமில்லாத தொடர் பாடலையும் இன்ன பிற பரிமாணங்ளையும் உள்வாங்கிக் கொள்கிறது.

இந்நாட்டார் கலைகள் மக்களுடன் ஆண்டாண்டு காலமாக மரபார்ந்த பிணைப்பை உடையவை. தொடர்பாடலின் வளர்ச்சி தொடர்பில் பேசும்போது இந்த மரபார்ந்த இணைப்பை தவிர்த்துவிட முடியாது. மனித இனத்தின் தோற்றத்திலிருந்து நாட்டார் கலைகளின் தோற்றமும் ஆரம்பித்து விட்ட தாக நம்பப்படுகின்றது. **ஜோனஸ் பாலிஷ்** என்னும் அறிஞரின் கருத்தின்படி மனித இனம் தோன்றிய நாளையே நாட்டார் வழக்கியலின் தொடக்க நாளாக குறிப்பிடுகின்றனர்.

மக்கள் மத்தியில் இன்று பின்பற்றப்பட்டு வருகின்ற பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் அனைத்துமே எமது முன்னோர்களால் பின் பற்றப்பட்டு வந்தவையாகும். அந்தவகை யில் முன்னோர்களால் பின்பற்றப்பட்டு வந்த அனைத்து பண்பாட்டுக் கூறுகளையும் நாட்டாரி யல் என்ற வகைக்குள் உள்ளடக்க முடியும்.

இந்நாட்டார் ஊடகங்களின் வழியாக தலைமுறை தலைமுறையாக அடுத்தடுத்த சந்ததிகளுக்கு பாரம்பரிய அறிவும், பண்பாட்டுச் செய்திகளும் கடத்தப்பட்டு வருகின்றன. நாட்டார் ஊடகங்கள் பொதுமக்களுடைய உள்ளத்துக்கு மாத்திரமல்லாது இதயத்திற்கும் மிக நெருக்கமாய் இருக்கின்றது. இந்த வகையில் நாட்டார் ஊடகங்கள் ஏற்படுத்து கின்ற தாக்கமானது உள்ளார்ந்து வரும் தொடர்பாடலின் முக்கிய வலிமையாக காணப்படுகின்றது.

அந்த வகையில் இந்நாட்டார் கலைகள் எமது மூதாதையார் விட்டுச்சென்ற பண்பாடுகளின் பழக்கவழக்கங்களின் எச்சங்களாக மட்டுமின்றி அவற்றின் சாட்சியங்களாகவும் உள்ளன. அவை எமது எதிர்கால சந்ததியினருக்கு எமது பாரம்பரியத்தை கையளிப்பதற்கான சிறந்த ஊடகங்களாகவும் அமைகின்றன. எமது பாரம்பரியம் இவ்வாறானது என்பதை மார்தட்டி தமது சந்ததியினருக்கும் ஏனைய மக்களுக்கும் சொல்வதற்காகவும் ஒவ்வொரு தலைமுறையாக இவை கடத்தப்பட்டும் வர வேண்டும்.

❍❍❍

# பகல் கனவு

சமுதாயச் சகதியில்
வாய்மூடி மௌனிகளாய் அமர்ந்திருக்கும்
ஆந்தைகள் மன்றத்தில்
வரலாற்றுப் பதிவுகளின் பன்முகப் பார்வை
கற்றதனால் ஆன பயன்
பொய்யுரைக்கும்
சனாதனம் பேரெழுச்சி கொள்ளும்!

திருநாளைப் போவார் மீதான காழ்ப்புணர்ச்சி
வன்புணர்வுக்கு அறைகூவல் விடுக்க
ஞானசம்பந்தன் தேவாரம்
ஏடு திறக்கும் ஆசானாய்
அரியணை அமர்கிறது!

அதோ...
வேலி ஓரத்தில் பருத்து வளர்ந்த
முருங்கை மரம்
அதன் கிளையின் மறைவில் தன்னை
அடக்கிக் கிடக்கிறது கூட்டுப்புழு
திருட்டுப் பூனையின் கனவில்
மீன்கள் செத்துக் கிடக்கின்றன!


கடலில் குதித்து புதிதாய் எழுகிறது
நீர்க் காகம்
அன்னாசிப் பூக்கள் ஒன்று திரண்ட
முரட்டுத் தோலமர்ந்து
சிறு பறவை எழுப்புகிறது நிதர்சனக் குரல்!


வானம் வெளுக்கிறது மெல்ல மெல்ல...!?

▲ கனகசபாபதி செல்வநேசன்



# வெளிர் நீலப் புள்ளி
# PALE BLUE DOT







- ஞானம் பாலச்சந்திரன்

"அந்தப் புள்ளியை
மீண்டுமொருமுறை
நோக்குங்கள்...
அதுதான் இங்கே...
அதுதான் எங்கள் வீடு...
அதுதான் நாம்...
அதிலேதான் நீங்கள்
அன்பு கொண்டுள்ள
அனைவரும் உள்ளனர்.
அதிலேதான் உங்களுக்குத் தெரிந்த
அனைவரும் உள்ளனர்.
அதிலேதான் நீங்கள் கேள்விப்பட்ட
அனைவரும் உள்ளனர்.
அதிலேதான் மனித குலத்தின்
அனைத்து மனிதர்களும்
வாழ்கின்றனர்;
வாழ்ந்து மறைந்துள்ளனர்."


## 1. அறிமுகம்




*1977ஆம் வருடம் நாசா நிறுவனத்தினால் விண்ணியல் ஆய்வுக்காக ஏவப்பெற்ற* **இரட்டைப் பயணிகள்** *(Twin Voyagers) எனும் விண்கலங்கள் கடந்த 47 வருடங்களையும் தாண்டி இன்றும் விண்வெளியில் இயங்கிவருகின்றன. இவை எமக்கு எடுத்துச் சொல்லும் செய்திகள்,* ***பிரபஞ்சப் பெருவெளியில் துணிக்கையிலும் மிகச் சிறிய மனித இனத்தின் புறக்கணிக்கத்தக்க இருப்பை*** *எமக்கு தொடர்ந்தும் மீளமீள வலியுறுத்தி வருகின்றன.* **வொயாஜெர்ஸ்** *விண்கலங்களின் பின்னணி என்ன? அவை எமக்குச் சொல்லும் அடிப்படைச் செய்திகள் எவை? வாருங்கள் அறிந்து கொள்வோம்.*

## 2. பின்னணி – பெரும் பயணத் திட்டம்


*1964ஆம் வருடம், Gary Flandro என்பவர் எமது சூரிய குடும்பத்தில்* ***வியாழன், சனி, யுரேனெஸ், நெப்டியூன்*** *ஆகிய கிரகங்கள்* ***ஒரே நேர்கோட்டில்*** *வர இருப்பதை எடுத்துக் காட்டினார். 1970களில் கிரகங்களுக்கு இடையில் காணப்பெற்ற இந்த நேர்கோட்டு ஒழுங்கு ஒவ்வொரு 175 வருடங்களுக்கும் ஒருமுறையே ஏற்படக்கூடியது. 84 வருடங்களுக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றிவரும் யுரேனெஸ் கிரகமும் 165 வருடங்களுக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றிவரும் நெப்டியூன் கிரகமும் வியாழன் மற்றும் சனி கிரகங்களுடன் ஒரே நேர்கோட்டில் வரும் நிகழ்வு பத்து தலைமுறைகளுக்கு ஒருமுறை நடைபெறக்கூடியது. இந்தச் சந்தப்பத்தை நழுவவிட்டால் 2150களில்தான் மீண்டும் இந்தச் சந்தர்ப்பம் ஏற்படும்.*



**Gary Flandro**

*இந்த கிரகங்களின் நேர்கோட்டு ஒழுங்கைக் கருத்தில்கொண்ட நாசா நிறுவனம், இரண்டு விண்கலங்களை ஆய்வுக்கு அனுப்புவதற்கான திட்டத்தை வகுத்தது. ஒன்றில் சிக்கல் ஏற்படில் மற்றையது உதவும் என்கிற அடிப்படையில் இரண்டு விண்கலங்கள் தயாரிக்கப்பட்டன.*


*இதன் பின்னணியில் 1977ஆம் வருடம் ஆகஸ்ட் - செப்டெம்பர் மாதங்களில் இருகிழமை இடைவெளியில் வொயாஜெர் - 1 மற்றும் வொயாஜெர் - 2 ஆகிய இரண்டு விண்கலங்களும் தமது பெரும் பயணத்தை ஆரம்பித்தன.*



## 3. பயணம்

*1977ஆம் வருடம் பயணத்தைத் தொடங்கிய* **பயணிகள் விண்கலங்கள்** *இரண்டு வருடங்களின் பின்னர், பூமியிலிருந்து 0.7 பில்லியன் கி.மீ. தொலைவிலுள்ள* **வியாழன்** *கிரகத்தை 1979ஆம் வருடம் அணமித்தன.*

*இலங்கையில் இருந்து புறப்பட்டு, பூமியை மத்திய தரைக்கோட்டின் வழியே சுற்றி, இலங்கையை மீண்டும் வந்தடைய*



40,000 கி.மீ. தூரம் பயணித்தால் போதுமானது. இவ்வாறு 17,500 முறைகள் வலம்வரும் தொலைவில் (0.7 பில்லியன் கி.மீ) பூமியிலிருந்து வியாழன் உண்டு. வியாழனை அண்மைத் தொலைவிலிருந்து பல படங்களை இந்த விண்கலங்கள் எடுத்தன. வியாழனுக்குரிய பல சந்திரன்களை இவ்விண்கலங்கள் முதன்முறையாகக் கண்டு கொண்டன.

அதன் பின்னர் 1.3 பில்லியன் கி.மீ. தொலைவிலுள்ள ***சனி*** கிரகத்தை 1980-81களில் அண்மித்து இவை ஆய்வுகளை ஆரம்பித்தன. இவற்றின் வாயிலாக சனி கிரகத்தின் வலயங்கள் சார்ந்த புதிய விடயங்கள் மனித இனத்துக்கு கிடைக்கப்பெற்றன.

பயணி விண்கலம் எடுத்த வியாழன் மற்றும் சனி கிரகங்களின் படங்கள்



இவற்றைத் தொடர்ந்து 1986ஆம் வருடம் 2.8 பில்லியன் கி.மீ. தொலைவிலுள்ள **யுரேனெஸ்** கிரகத்தையும் 1989ஆம் வருடம் 4.3 பில்லியன் கி.மீ. தொலைவிலுள்ள **நெப்டியூன்** கிரகத்தையும் இவை அண்மித்தன.

இவற்றின் வாயிலாக மனித வரலாற்றில் முதன்முறையாக இக்கிரகங்களை மிக அருகிலிருந்து எடுத்த படங்கள் எமக்குக் கிடைக்கப்பெற்றன.

பயண நேர்கோட்டில் **புளூட்டோ** கிரகம், அப்போது இல்லாத காரணத்தால் இவ்விண்கலங்கள் புளூட்டோவை அண்மிக்கவில்லை. அந்த நோக்கம் திட்டத்திலும் இல்லை.

இவற்றின் பின்னரும் பயணிகள் விண்கலங்கள் நன்கு செயற்படக்கூடிய நிலையில் இருந்ததால், இந்த விண்கலங்களை சூரிய மண்டலத்துக்கு வெளியே செலுத்தும் ஒரு புதிய - இரண்டாம் திட்டம் உருவாகியது. ஆரம்பத் திட்டத்தில் இந்நோக்கம் வலுவாக இருக்கவில்லை. ஆரம்பத் திட்டத்தின்படி சில ஆண்டுகளுக்கு மாத்திரமே இவ்விண்கலங்கள் இயங்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

தற்போது (2024) சூரியனின் ஈர்ப்பு தாக்கமுள்ள ***சூரிய மண்டலத்தைத் தாண்டி***, சூரிய மண்டத்திலிருந்து விலகி, ஏறத்தாழ 25 பில்லியன் கி.மீ. தொலைவில், இவ்விண்கலங்கள் பயணித்தவண்ணம் உள்ளன.



யுரேனெஸ்

சூரிய மண்டலத்தைவிட்டு முதலாவதாக வெளியேறிய அல்லது மனிதனால் உருவாக்கப்பட்டு அதிதொலைவிலுள்ள முதலாவது உபகரணம் - பொருள் எனும் பெருமையை இவை தமதாக்கிக்கொண்டன.



நெப்டியூன்

இன்று இவற்றுக்கு ஒரு செய்தியை மின் காந்த அலைகளினால் அனுப்பினால் அச்செய்தி பயணிகள் விண்கலத்தைச் சென்றடைய ஏறத்தாழ ஒருநாள் எடுக்கும். விண்கலம் கொடுக்கும் மறுமொழியானது பூமியை வந்தடைய மேலும் ஒருநாள் எடுக்கும்.

இவ்வாறாக தலைமுறைகள் தாண்டி, பயணிகள் விண்கலங்களுடன் இன்றும் விஞ்ஞானிகள் தொடர்பில் உள்ளார்கள்.




## PALE BLUE DOT

Look again at that dot.
That's here. That's home.
That's us. On it everyone you love,
everyone you know, everyone you
ever heard of, every human being
who ever was, lived out their lives.
The aggregate of our joy and
suffering, thousands of confident
religions, ideologies,
and economic doctrines,
every hunter and forager,
every hero and coward,
every creator and destroyer of
civilization, every king and
peasant, every young couple in
love, every mother and father,
hopeful child, inventor and
explorer, every teacher of morals,
every corrupt politician, every
"superstar," every
"supreme leader," every saint
and sinner in the history of
our species lived there
- on a mote of dust
suspended in a sunbeam.

*— Carl Sagan, Pale Blue Dot, 1994*





## 4. வெளிர் நீலப் புள்ளி

*1990களில் நெப்டியூன் கிரகத்தில் ஆய்வுகளை முடித்துக்கொண்ட விண்கலங்கள், **பிரபஞ்ச பெருவெளிக்கான தமது பயணத்துக்கு ஆயத்தமாகின.** இவ்விண்கலங்களில் புகைப் படக்கருவி உட்பட ஏறத்தாழ பத்து ஆய்வு உபகரணங்கள் உள்ளன. இவை, 1970களின் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட பண்டைய உபகரணங்கள். விண்கலத்தில் மொத்த இலத்திரனியல் சேமிப்பு அளவு (Storage Memory) 70 கிலோபைற் (70KB). இன்னொரு விதத்தில் கூறுவதாயின், பயணிகள் விண்கலத்தில் உள்ளடக்கப்பட்ட சேமிப்பு அளவைப் போன்று 20 இலட்சம் மடங்கு சேமிப்புக் கொள்ளளவானது தற்பொழுதுள்ள சாதாரண கையடக்கத் தொலைபேசியில் (128GB) காணப்பெறுகிறது.*

*இந்நிலையில், சக்தியை சேமித்து, நீண்ட பயணத்தை மேற்கொள்ளும் நோக்குடன், இனிவரும் ஆய்வுகளுக்குத் தேவைப்படாத உபகரணங்கள் நிறுத்தப்பட்டு, அடிப்படையான உபகரணங்களை மாத்திரம் இயக்கநிலையில் வைத்திருக்க விஞ்ஞானிகள் தீர்மானித்தார்கள். இந்த தீர்மானத்தின் அடிப்படையில் அதிக சக்தியை எடுக்கும் புகைப்படக் கருவியையும் நிறுத்தத் தீர்மானித்தார்கள்.*

*ஆனால், விஞ்ஞானிகளுக்கு ஓர் ஆசை துளிர் கொண்டது. புகைப்படக் கருவியை நிறுத்தமுன்னர், ஏறத்தாழ 6.4 பில்லியன் கி.மீ. தொலைவிலிருந்து **இறுதியாக பூமியை ஒரு புகைப்படம் எடுக்கத் தீர்மானித்தார்கள்.***

*1990ஆம் வருடம் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி (காதலர் தினமன்று) பயணி - 1, தான் இயங்கிக்கொண்டிருந்த திசையிலிருந்து திரும்பி, பூமியை நோக்கித் தன்னை திசைப்படுத்திக்கொண்டது. தன்னுடைய புகைப் படக் கருவியை நிறுத்துவதற்கு முன்னதாக நாம் வாழும் பூமியை படம் எடுத்தது. இந்தப் படம் பூமிக்கு, இரண்டரை மாதங்களின் பின்னர், 1990ஆம் வருடம் மே மாதம் 1ஆம் திகதி முழுமையாக வந்தடைந்தது.*

*வொயர்ஜர் - 1இனால் காதலர் தினத்தன்று எடுக்கப்பட்ட பூமியின் புகைப்படத்தின்மீது உலகத்து விஞ்ஞானிகள் காதல்கொண்டனர்.*

*இந்தத் திட்டத்தில் முக்கிய பணியாற்றிய Carl Sagan எனும் விஞ்ஞானி, 1994ஆம் வருடம், இந்தப் படத்திலுள்ள பூமியை, Pale Blue Dot - **வெளிர் நீலப் புள்ளி** என்று பெயர் சூட்டி, புகழ்பெற்ற குறிப்பொன்றை எழுதியுள்ளார்.*


*அவரின் குறிப்பை அடிப்படையாக வைத்து சற்று மெருகூட்டி, பின்வரும் தமிழ் மொழிபெயர்ப்பு இங்கு தரப்பெற்றுள்ளது.*




“அந்தப் புள்ளியை மீண்டுமொருமுறை நோக்குங்கள்... அதுதான் இங்கே... அதுதான் எங்கள் வீடு... அதுதான் நாம்... அதிலேதான் நீங்கள் அன்பு கொண்டுள்ள அனைவரும் உள்ளனர். அதிலேதான் உங்களுக்குத் தெரிந்த அனைவரும் உள்ளனர். அதிலேதான் நீங்கள் கேள்விப்பட்ட அனைவரும் உள்ளனர். அதிலேதான் மனித குலத்தின் அனைத்து மனிதர்களும் வாழ்கின்றனர்; வாழ்ந்து மறைந்துள்ளனர்.

அதிலேதான், நமது மனித இனத்தின் அனைத்து, மகிழ்ச்சி மற்றும் துன்ப உணர்வுகளின் தொகுப்பும், ஆயிரக்கணக்கான மதங்களின் சமய நம்பிக்கைகளும், தத்துவக் கொள்கைகளும், பொருளாதாரகோட்பாடுகளும் இருக்கின்றன; இருந்துள்ளன.


அதிலேதான் நமது மனித இனத்தின் ஒவ்வொரு, வேட்டைக்காரனும், உணவுதேடுபவனும்,



கோழையும், ஆக்ககர்த்தாவும், நாகரீகத்தை உருவாக்கி அழிப்பவனும், ராஜாவும், விவசாயியும், இளம் காதல்ஜோடியும், தாயும், தந்தையும், நம்பிக்கையுள்ள குழந்தையும், கண்டுபிடிப்பாளனும், தேடல் ஆர்வம் கொண்டவனும், ஒழுக்க நெறியுள்ள ஆசிரியரும், ஊழல் அரசியல்வாதியும், சூப்பர் ஸ்டாரும், உச்ச தலைவனும், துறவியும், பாவியும் – நம் மனித இன வரலாற்றின் ஒவ்வொருவரும் அங்கேதான் வாழ்கின்றனர்; வாழ்ந்தனர்.

அது சூரிய ஒளிக்கதிர் ஒன்றின்மீது பதிக்கப்பட்ட தூசியிலும் தூசி.

அந்தப் புள்ளியை மீண்டுமொருமுறை நோக்குங்கள்.. அதுதான் இங்கே... அதுதான் எங்கள் வீடு... அதுதான் நாம்...”



இந்த வரிகளை ஆழ்ந்து, உணர்ந்து வாசிக்கும்போது ஒரு விறைப்புத்தன்மை ஏற்படுவது இயல்பு. அந்த வெளிர் நீலப் புள்ளிக்குள்ளேதான், வள்ளுவனும், இளங்கோவும், கம்பனும், ஔவையும், பாரதியும் வீச்சுடன் உயரிய சிந்தனைகளைப் பரப்பியுள்ளனர். அந்த வெளிர் நீலப் புள்ளிக்குள்ளேதான் கோடிக்கணக்கான கவிதைகளும், பல இலட்சக்கணக்கான நூல்களும், நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கும் இந்தக் கட்டுரை உட்பட கோடான கோடி வரிகளும் எழுதப்பெற்று உறைந்துள்ளன.

இந்தப் பூமியைத் தாண்டி அருகிலுள்ள சந்திரனின் மண்ணிலேதான் இதுவரை பன்னிரு மனிதர்கள் காலடி வைத்துள்ளனர். அதற்குமேல் மனிதனின் சுவடு இந்தப் பிரபஞ்ச வெளியில் எங்குமே பதிந்ததில்லை. மனிதன் வேறு எங்குமே சென்றதில்லை; உலாவியதுமில்லை.


உலக வரலாறு அனைத்துமே பயணி விண்கலம் படம் எடுத்துக் காட்டிய அந்த வெளிர் நீலத் தூசியிலும் தூசிப் புள்ளியிலேதான் நடந்தேறியுள்ளன; நடந்துகொண்டுள்ளன.


## 5. பிரபஞ்சப் பெருவெளி

மனிதர்கள் அல்லது மனிதர்களிலும் உயரிய அறிவுகொண்ட உயிரினங்கள் எமது சூரியமண்டலத்தில் இல்லை எனத் திட்டவட்டமாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஒரு வேளை கூர்ப்பின் ஆரம்ப நிலையிலுள்ள சிறிய நுண்ணுயிர்கள் செவ்வாயிலோ, அல்லது சந்திரனிலோ கண்டுபிடிக்கப்படலாம்.

அவ்வாறெனில் மற்றைய நட்சத்திரங்களில் ஒருவேளை மனிதனுக்கு நிகரான உயிரினங்கள் இருக்கலாமோ?! வானில் பல்லாயிரக்கணக்கான நட்சத்திரங்கள் எமது வெறும் கண்களுக்குத் தெரிகின்றன.

எமது நட்சத்திரமான சூரியனின் ஈர்ப்பைவிட்டு, வெளியேறிப் பயணித்துக் கொண்டிருக்கும் பயணிகள் விண்கலங்கள், ஏதாவது நட்சத்திரத்தை சென்றடையுமா? பிற உயிரினங்கள் ஏதாவது இவ்விண்கலங்களைக் கண்டுகொள்ளுமா? யாராவது எம்முடன் தொடர்பு கொள்வார்களா? என்பவை ஏக்கத்துடன்கூடிய சுவாரசியமான வினாக்கள்.






பயணிகள் விண்கலங்கள் மணிக்கு ஏறத்தாழ 62, 000 கி.மீ. வேகத்தில் பயணிக்கின்றன. 40 நிமிடங்களில் மத்திய தரைக் கோட்டின் வழியே பூமியைச் சுற்றிவரத்தக்க வேகம் இது.

**எமக்கு மிக அண்மையில் இருக்கும் நட்சத்திரம் புரொக்ஸிமா சென்சூரி** (Proxima Centauri) ஆகும். சூரியனின் எட்டிலொரு பங்கு அளவான புரொக்ஸிமா சென்சூரி நட்சத்திரமானது வெறும் கண்களுக்குத் தெரியமாட்டாது. கருவிகளின் துணைகொண்டுதான் காணமுடியும். அதியுச்ச வேகத்தில் பயணிக்கும் பயணிகள் விண்கலம், எமக்கு அருகிலுள்ள புரொக்ஸிமா சென்சூரி நட்சத்திரத்தை சென்றடைய எழுபத்தையாயிரம் (75,000) வருடங்கள் (4.2 ஒளியாண்டுகள்) எடுக்கும் எனக் கணித்துள்ளார்கள்!

எமக்கு இன்று இந்த வெளிர் நீலப் புள்ளியில் எழுத்தில்கிடைக்கும் அனைத்து மொழி இலக்கண இலக்கியங்களும் பத்தாயிரம் வருடங்களைத் தாண்டுமா? என்பதே சந்தேகம்! அவ்வாறிருக்க 75,000 வருடங்கள் எனும்போது எமது மொழி வரலாறுகள் காணாத நீண்ட காலம். அத்துணை விரிந்தது; அத்துணை பண்டையது இந்தப் பிரபஞ்சப் பெருவெளி.

பிரபஞ்ச பெருவெளியை **கருவிகளால் அறியக்கூடிய பிரபஞ்சம்** (Observable Universe), **அதற்கும் புறத்தேயுள்ள பிரபஞ்சம்** என விஞ்ஞானிகள் இரண்டாகப் பிரிக்கின்றனர். கருவிகளால் அறியக்கூடிய பிரபஞ்சத்தில் உள்ள கோடிக்கணக்கான பால்வீதிகளில் (Galaxies like Milky way) கோடானகோடி நட்சத்திரங்கள் உள்ளன. இதன் விட்டம் ஏறத்தாழ 92 பில்லியன் ஒளியாண்டுகள் (92 billion light-years = 88 sextillion kilometres). இதற்குப் புறத்தேயுள்ள கருவிகளால் அறியமுடியாத பிரபஞ்சத்தின் விரிவு எத்துணை என்பது **மொழிக்கும் சிந்தைக்கும் எட்டாதது.**

திருவாசகத்தில், ***சொற்பதம் கடந்த தொல்லோன், சித்தமும் செல்லா சேட்சியன்,*** என மணிவாசகர் குறிக்கும் வரிகளை இங்கு ஞாபகத்தில் கொள்ளலாம்.


எல்லையற்று விரிந்துசெல்லும் பிரபஞ்சத்தில், பால்வீதி என்பது புறக்கணிக்கத்தக்க ஒரு தூசி. பால்வீதியிலுள்ள சூரியகுடும்பமோ தூசியிலும் தூசி. பூமியோ அதிலும் தூசி. இப்புறக் கணித்தக்க பூமியில் எங்கோ ஒரு மூலையிலிருந்தவாறு ‘தான்தான் பெரியவன், தனக்குத்தான் எல்லாம் தெரியும்’ எனும் அகங்கார எண்ணவலைகள் கொண்ட ‘எம்மை’ என்னவென்பது!

## 6. தனிமை


கோடானகோடி நட்சத்திரங்களும் அவற்றைச் சுற்றும் எண்ணிலடங்கா கிரகங்களும் உள்ள இந்தப் பெரிய பிரபஞ்ச வெளியில் மனிதர்கள் மாத்திரமா தனித்து உள்ளோம்? ***மனிதர்கள் உருவாகியது ஒரு விபத்தா?*** இந்தக் கேள்விகளுக்கான விடைகள், என்றாவது மனித இனத்துக்குக் கிடைக்குமோ? அல்லது மனித வரலாற்றில் என்றுமே விடை கிட்டாத வினாக் களாகவே இவை இருந்துவிடுமா?

தன் வாழ்நாளில் பெரும்பகுதியை இலங்கையில் வாழ்ந்த ***ஆதர் சி கிளார்க்*** (Arthur C Clarke) அவர்கள், இதுபற்றி பின்வருமாறு கூறியுள்ளார்.

“இரண்டு சாத்தியக்கூறுகள் உள்ளன. இந்தப் பிரபஞ்சப் பெருவெளியில் மனிதர்கள் தனித்து உள்ளோம். அல்லது நாங்கள் தனித்து இல்லை. இவ்விரு சாத்தியக் கூறுகளுமே அதிபயங்கரமான திகிலூட்டுபவை.”




“இரண்டு சாத்தியக்கூறுகள் உள்ளன. இந்தப் பிரபஞ்சப் பெருவெளியில் மனிதர்கள் தனித்து உள்ளோம். அல்லது நாங்கள் தனித்து இல்லை.
இவ்விரு சாத்தியக் கூறுகளுமே அதிபயங்கரமான திகிலூட்டுபவை.”
– **ஆதர் சி கிளார்க்**




ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கையில் மனித உயிரின் தனிமை திகிலூட்டுவதாயுள்ளது.

நாங்கள் மட்டுமா இந்தப் பெரும் பிரபஞ்சத்தில் தனித்து உள்ளோம்..?! ஏன் நாங்கள் மட்டும் உள்ளோம்...?! நாங்கள் மட்டும் ஏன் உருவாகி இருக்கவேண்டும்...!

ஆனால், எமது சூரிய மண்டலம் போன்றே பல நட்சத்திரங்களும் அவற்றைச் சுற்றிவரும் கிரகங்களும் இந்தப் பெரும் பிரபஞ்சத்தில் உள்ளதால் வேறு உயிரினங்கள், வேறு ஏதாவது கிரகங்களில் இருக்கவேண்டும் என்னும் **தர்க்க அனுமானம்** விஞ்ஞானிகளிடம் உண்டு. அவை மனித உருவத்தில் இருக்கவேண்டும் என்னும் நியதி இல்லை. அதற்காக அவை திரைப்படங்களில் காட்டுவதைப் போன்று ஒற்றைக் காலுடன், ஒற்றைக் கண்ணுடன், மூன்று விரல்கள் கொண்ட ஏழு கரங்களுடன் பச்சைநிற இரத்தம் கொண்டு இருக்கவேண்டும் என்றும் இல்லை.

எமது சூரிய மண்டலத்தில் சூரியனிலிருந்து அளவான தூரத்தில் பூமி உள்ளது. எமக்கு அருகிலுள்ள **வெள்ளி** கிரகமானது சூரியனுக்கு மிக அருகிலுள்ளதால் வெப்பம் அதிகம்கொண்டு உயிரினங்கள் வாழமுடியாதுள்ளது. அதே போன்று **செவ்வாய்** கிரகம், சற்று அதிக தூரத்தில் உள்ளதால் உயிரினம் வாழமுடியாத அதிகுளிர் வெப்பநிலை செவ்வாயில் காணப்பெறுகிறது.

எமது பூமியானது சூரியனிலிருந்து உயிரினம் வாழக் கூடிய உகந்த (Habitable Zone) பரப்பிலுள்ளது. இதுதான் உயிர்கள் தோன்றி வாழக்கூடிய உகந்த இடம்.

இம்மாதிரியாக நட்சத்திரத்திலிருந்து அதிக அருகிலும் இல்லாமல் அதிக தொலைவிலும் இல்லாமல் பூமியைப் போன்று உகந்த தூரத்தில் அமைந்து தம் நட்சத்திரங்களைச் சுற்றிவருகின்ற, **பூமியையொத்த பல்லாயிரம் கிரகங்களை** விஞ்ஞானிகள் இன்று அடையாளம் கண்டுள்ளனர்.

இக்கிரகங்களில் ஒருவேளை உயிர்கள் வாழலாம் எனும் நம்பிக்கை விஞ்ஞானிகளுக்கு உண்டு. ஆனால், பயணிகள் விண்கலங்களில் பயணித்தால்கூட இக்கிரகங்களை சென்றடைய பல இலட்சம் வருடங்கள் எடுக்கும்.

**பூமியைப் போன்று உகந்த இடத்திலிருந்து தமது நட்சத்திரத்தைச் சுற்றும் சில கிரகங்கள்**





பயணிகள் விண்கலத்தில் உள்ளடக்கப்பெற்ற பொன் செய்தித் தட்டுடன் Carl Sagan

## 7. பயணிகள் விண்கலம் கொண்டு செல்லும் பொன் செய்தித் தட்டு

1977ஆம் வருடம் புறப்பட்ட பயணிகள் விண்கலங்களில் இந்த பிரபஞ்சத்தில் மனிதர்களை விடுத்து வேறு யாராவது - ஏதாவது உயர் அறிவுள்ள உயிரினங்கள் இருக்குமாயின் அவர்களுக்கான நட்புச் செய்திகள் அனுப்பி வைக்கப்பெற்றுள்ளன.

55 மொழிகளில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட வணக்கச் செய்திகள், பூமி மற்றும் மனிதர்கள் - விலங்குகள் சார்ந்த படங்கள், வரைபடங்கள், சங்கீதப் பாடல்கள், இயற்கை ஒலிகள், கணிதச் சமன்பாடுகள், செய்திக் குறிப்புக்கள் என்பவற்றை ஒரு பொன் தட்டில் பொறிக்கப்பட்டு அதை எவ்வாறு இயக்கி பொறிக்கப்பட்ட செய்திகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்னும் விளக்கப் படமும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தி, நேபாளம், தெலுங்கு உட்பட பன்னிரு தென் ஆசிய மொழிகளிலும் ஒலிப்பதிவு செய்யப்பட்ட செய்திகள் இப்பொன் தட்டிலே உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றிலே **சிங்கள** மொழியும் ஒன்று. ஆனால், **தமிழ் மொழி உள்ளடக்கப்படவில்லை.** நேர கட்டுப்பாடு காரணமாகவும், வளவாளர்கள் கிடைக்காத காரணமாகவும் சில மொழிகள் கைவிடப்பெற்றுள்ளதான குறிப்பைக் காணமுடிகிறது.



**பஞ்சாபி** மொழியில், "எங்கள் வீட்டுக்கு வாருங்கள், தங்களை வரவேற்பது எமக்கு பெருமகிழ்ச்சிக்குரியது" எனவும், **குஜராத்தி** மொழியில், "பூமியிலிருந்து மனித இனத்தின் வணக்கங்கள். தயவுகூர்ந்து எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்" எனவும், **சிங்கள** மொழியில், "ஆயுபோவான்" எனவும் அமைந்துள்ள வணக்கச் செய்திகள் சில உதாரணங்களாகும்.

இவற்றை உள்ளடக்கியவாறு பயணிகள் விண்கலங்கள் சூரியமண்டலத்தைத் தாண்டி தற்போது (2024) பயணித்த வண்ணம் உள்ளன.

ஐந்நூறு, ஆயிரம், பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தப் பொன் தட்டு யாரிடமாவது

சென்றடையுமா? யாராவது தொலைவிலிருந்து பூமியுடன் தொடர்பு கொள்வார்களா? அல்லது பூமியைக் கண்டுபிடித்து இங்கு வந்து எம்மிடம் தொடர்பு கொள்வார்களா? அவர்கள் என்ன மொழியில் தொடர்பாடல் செய்வார்கள்? அவ்வாறு பல்லாயிரம் ஆண்டுகளின் பின்னர் யாராவது இங்கு வரும்போது பூமி அழியாது இருக்குமா? மனிதன் கூர்ப்படைந்து பிறவுருவத்தை எடுத்திருப்பானா?

இப்போதுள்ள மொழிகள் அப்போதும் இருக்குமா? அல்லது அந்தப் பொன் தட்டிலுள்ள விபரங்களை புரிந்துகொள்வதற்கு அதனை உருவாக்கிய மனிதனே அக்காலத்தில் சிரமப் படுவானா? இரண்டாயிர வருட சங்கப் பாடல்களையே உரையில்லாமல் புரிவதில் தற்காலத்தில் சிரமப்படுகிறோம். பிரபஞ்ச காலச்சக்கரத்தில் ஐயாயிரம் - பத்தாயிரம் வருடங்களெல்லாம் எம்மாத்திரம்!

அல்லது எதிர்வரும் பில்லியன் கணக்கான வருடங்களாகப் பயணிகள் விண்கலங்கள் கொண்டுசெல்லும் பொன் தட்டுகள், யாரிடமும் கிட்டாது, பிரபஞ்ச வெளி எல்லையை நோக்கி தொடர்ந்தும் பயணித்தவண்ணமே இருக்குமா?

அல்லது அந்த விண்கலங்கள் ஏதாவது கிரகங்களுடன் முட்டிமோதி எரிந்து அழிந்து விடுமா?

இவையனைத்தும் ஏக்கத்துடன் காத்திருக்கவைக்கும் வினாக்கள். எம்தலைமுறையில் விடை கிடைக்கப்போகாத வினாக்கள் என்றும் கூறலாம்.

## 8. தொழில்நுட்பக் கோளாறுகள்


இன்னும் மூன்று (2027) வருடங்களில் ஐம்பது வருட பயணத்தை எட்டவிருக்கும் பயணிகள் விண்கலங்களில் கடந்த சில வருடங்களாக அடுத்தடுத்து தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்பட்டவண்ணம் உள்ளன.

இதில் முக்கியமானது 2023ஆம் வருடம் டிசம்பர் மாதம், பயணி - 1 விண்கலம் திடீரென பொருளற்ற செய்திகளைப் பரிமாறத் தொடங்கியது. இந் நிலை ஏற்பட்டவுடன் சாதாரண மக்களிடம் பரபரப்பு ஏற்பட்டது. பயணி-1 விண்கலத்தை யாரோ கைப்பற்றிவிட்டதாகவும் அதிலிருந்து வேறு யாரோ செய்திகளை எமக்கு அனுப்ப முயல்வதாகவும் சாதாரண மக்கள் செய்திகளைப் பரப்பி கலவரப்படுத்தினார்கள்.




**பொன் செய்தித் தட்டில் உள்ளடக்கப்பெற்ற சில படங்கள்...**



ஆனால், பலமாத உழைப்பின்பின்னர் இந்நிலை இலத்திரனியல் கோளாறால் ஏற்பட்டது எனவும் அதை தற்போது நாசா சரிசெய்துள்ளது எனவும் உறுதி செய்யப்பட்டது. மீண்டும் பயணி-1 விண்கலம் எம்முடன் முன்னர் போன்று தொடர்பாடத் தொடங்கியுள்ளது.

சூரிய மண்டலத்திற்கு வெளியே, பூமியிலிருந்து 25 பில்லியன் கி.மீ. தொலைவிலுள்ள, 50 வருட பழைய கருவியை பூமியிலிருந்தவண்ணம் பழுது பார்ப்பது என்பது மகா பிரயத்தனம். இந்த திட்டத்தில் பணிபுரிந்த பலர் தற்போது உயிருடனும் இல்லை.



பயணி விண்கலம்


## 9. நிறைவாக..

சேடம் இழுத்துக்கொண்டுள்ள பயணிகள் விண்கலம் இன்னும் எத்தனை காலம் எம்முடன் தொடர்பில் இருக்கும் என்று உறுதியாகக் கூறமுடியாதுள்ளது. 50 வருடத்தைத் தொடவேண்டும் (2027) என் விண்ணியல் ஆய்வாளர்கள் ஆசைப்படுகிறார்கள்.

ஒருவேளை எம்முடனான தொடர்பாடல் துண்டிக்கப்பெற்றாலும் பயணிகள் விண் கலங்கள் பிரபஞ்சப் பெருவெளியில் தமது தனித்த பயணத்தைத் தொடரும் என நம்பப் படுகிறது.

இதுவரைகாலம் தனக்கு வழங்கப்பட்ட பணிகளுக்கும் மேலான பணிகளைச் செய்து, பிரபஞ்சம் பற்றிய மனித இனத்தின் புரிதல்களை விரிவாக்கியுள்ள பயணிகள் விண்கலங்கள் தொடர்ந்தும் பயணிக்கவேண்டும். அவற்றுடன் நாம் தொடர்ந்தும் தொடர்பில் இருக்க வேண்டும் என்று விருப்பம் கொள்வோமாக!

○○○




பயணி விண்கலத்திலுள்ள கருவிகள்



# சிறுகதை

# இறுதி முத்தம்



இராஜேஸ்வரி
பாலசுப்பிரமணியம்

குமார் அவன் கையில் கொடுக்கப்பட்ட மாத்திரையைப் பார்த்தான். அதே நேரத்தில் அவனுக்கு முன்னால் இருந்த “பாதுகாப்பு அதிகாரி“ கவனமாக அவனைக் கவனித்தார். அந்த அதிகாரி இதுவரை அவனுடன் பேசிய தோரணையிலிருந்து, அவர் விரும்பியதை குமார் செய்ய வேண்டும் என்று குமாருக்குத் தெரியும். அவனது இன்றைய வேலையும், எதிர்காலமும் அவனது குடும்பத்தின் எதிர்காலமும் அதைச் சார்ந்திருந்தது. குறிப்பாக திருமண சந்தையில் இருந்த அவனது இரண்டு சகோதரிகள் தங்களுக்கு பொருத்தமான கணவர்களைத் தேடுவதற்காக தங்கள் கனவுகளை நிரப்ப வரதட்சணை கொடுக்க அவனது வருமானத்திற்காக காத்திருந்தனர். மிகவும் வயதான தந்தையும் அவனது பலவீனமான தாயும் குமார் இல்லாமல் தங்கள் மகள்களுக்கு அதிகம் செய்ய முடியாது.

அவனது சகோதரிகள் மிகவும் அழகானவர்கள். பெற்றோர்கள் அவர்களுக்கு விரைவில் திருமணம் செய்து வைக்க விரும்புகிறார்கள். ஏழைகளின் அழகு இப்போதெல்லாம் பிரச்சினைகளைக் கொண்டு வருகிறது.

“உனது சகோதரிகள் மிக அழகானவர்கள் என்று கேள்விப்பட்டேன்.” இவன் கையில் அந்த மாத்திரையைக் கொடுத்த அதிகாரி மிகவும் தெளிவாகச் சொன்னார். அவர் பார்வையும் தொனியும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனின் குடும்பம் பற்றி அவர்கள் பலவிடயங்கள் தெரிந்து வைத்திருப்பது அவனுக்குப் புரியத் தொடங்கியது.

“கவலைப்படாதே, அந்த மாத்திரை உனது காதலி அமராவைக் கொல்லாது” அதிகாரியின் குரல் அமைதியாக ஆனால் பயமுறுத்துவதாக இருந்தது.

குமார் ஒன்றும் சொல்லாமல் மீண்டும் அவரைப் பார்த்தான்.

தன் காதலி அமராவின் உயிரைப் பற்றிய தேவையற்ற பயம் அவன் மனதில் படர்ந்திருப்பதை அவனால் உணர முடிந்தது. அமரா என்ற பெயருக்கு “நித்தியம்“ என்று பொருள்!.

இப்போது அவன் இரண்டு, முன்பின் தெரியாத போலீஸ் அதிகாரிகளுடன் இருந்தான் - அவர்களே தங்களை அவனுக்கு அறிமுகப்படுத்தினர். அனல் காற்று ஜன்னல் வழியாக வீசுகிறது. அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. அது வெளியே நிலவிய வெயில் காரணமாக மட்டும் அல்ல என்று அவனுக்குத் தெரியும்.

பிற்பகல் வெயில் பிரகாசமாகவும் வெப்பமாகவும் இருந்தது. அவர்கள் “தானா” என்ற ஆடம்பரமான “கிளப்பில்” உள்ள “குடும்ப அறையில்” இருந்தனர். இந்த கிளப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு காலனித்துவ எஜமானர்களால் அவர்களின் “நண்பர்கள்” மற்றும் குடும்பத்தினரை சந்திப்பதற்கான சிறப்பு இடத்திற்காக கட்டப்பட்டது. நவீன அலங்காரங்களுடன் பழைய அழகு அந்த இடம் அற்புதமாக காட்சியளித்தது. “தானா” என்பது அந்த நகரத்தின் பெயர். தானம் கொடுப்பதில் பெயர் போன இடமாக இருந்ததாம். இந்தக் கிளப்பை, “தானா கிளப்” என்று சொல்வார்கள். அதாவது. அந்த பிரமாண்டமான, அன்பளிப்புக்குப் புகழ்பெற்ற நகரின் அழகிய கிளப்...

இந்த இடத்தில் இன்று அவனிடம் எதைத் தானமாகக் கேட்கிறார்கள்?

அதிலிருந்து சற்று தள்ளி, கிளப்பை பிரதான சாலையிலிருந்தும் நிஜ உலகத்தை இந்த “மறைவிடத்திலிருந்தும்” பிரிக்கும் ஒரு சிறிய கால்வாய் ஓடிக்கொண்டிருந்தது. அவன் பார்வை சாடையாக அங்கு சென்றது.

“உன்னுடைய காதலி அமரா சிறிது காலம் ஒன்றும் எழுதாமல் அமைதியாக இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்” என்றார் அந்த அதிகாரி. அவன் அதிகாரியின் பக்கம் திரும்பினான். அவர் தொடர்ந்தார்.

அந்த அதிகாரி அவன் மூலம் சிறிது நேரம் அல்லது கொஞ்ச காலம் அமராவை ஒன்றும் எழுதாமல் அடக்கி வைக்க விரும்பியது குரலில் தெரிந்தது.!

அமராவை அடக்கவா?

“அவளைக் கொஞ்ச காலம் மவுனமாக இருக்கப் பண்ணவேண்டும்.” அதிகாரியின் கண்கள் மாத்திரையின மீதே இருந்தன.

“இதை அவள் வாயிற் போட்டதும் மயக்க மடைவாள் அதைத் தொடர்ந்து சில மாதங்களுக்கு அவள் குழப்பத்தில் இருக்க லாம். அவளால் நிறைய எழுத முடியாமல் போகலாம் அவள் மருத்துவரிடம் சென்றால் அவர் வெறும் சோர்வு காரணம் என்று சொல்வார்”.

அவர்கள் அவனை இன்று காலையில் தொலைபேசியில் அழைத்து அவனுக்கு ஆர்வமுள்ள “ஒரு செய்தி” பற்றியும் அவனது வாழ்க்கையையும் அதிர்ஷ்டத்தையும் மாற்று வதைப் பற்றியும் பேச இங்கே வந்து தன்னைச் சந்திக்க வேண்டும் என்று அழைத்த போது அவன் இப்போது இருக்கும் சூழ்நிலை யுடன் பயந்து தவித்துப் போவான் என்று எதிர்பார்த்து வரவில்லை. குமார் இப்போது மிகவும் பயத்துடனருக்கிறான்.

சில மணி நேரங்களுக்கு முன்புதான் குமார் பிரதான வாயிலில் இருந்து கிளப்பிற்கு நடந்து சென்றான். பல்வேறு உயரமான மரங்கள் மற்றும் தாவரங்களைக் கடந்து சென்றான். பெரும்பாலான செடிகளும் மரங்களும் அவனுக்கு அறிமுகமில்லாதவை. அயல் நாட்டார் ஆண்ட காலத்தின் அடையாளங்கள் அவை. பசுமையும் நறுமணமும் அவனை மகிழ்வித்தன. ஆச்சரியப்படுத்தின. அவன் உண்மையிலேயே தாய் நாட்டில்தான் இருக் கிறானா என்று யோசிக்க வைத்தது.”

கிளப்பை அடைந்தபோது, உயரமான, புத்திசாலித்தனமான தோற்றமுடைய இரண்டு அதிகார நபர்களைக் கண்டு அவன் குழப்ப மடைந்தான். ஒருவர் வரவேற்கும் புன்னகை யுடனும் மற்றொருவர் முகத்திலோ அல்லது முகபாவத்திலோ அதிக உணர்ச்சி இல்லாத புன்னகையுடனும் இருந்தார். மிகவும் சக்தி வாய்ந்த தொடர்புகளைக் கொண்ட பிரபல மான “நிறுவனத்தின்” பாதுகாப்பு அதிகாரிகள் என்று தங்களை அறிமுகப்படுத்திக் கொள் கிறார்கள்!.

அவனுடன் அவரது வேலை பற்றியும், அவன் எழுதிய பத்திரிகைச் செய்திகள் பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். “நாங்கள் உனது எழுத்துக்களால் மிகவும் ஈர்க்கப் பட்டோம்” என்று அவர்களில் ஒருவர் அவருடன் விலையுயர்ந்த உணவை சாப்பிட்டபோது கூறினார்.

ஆனால் இப்போது? சில மணி நேரங்களில் அவரது வாழ்க்கை தலைகீழாக மாறுகிறது. அவனால் என்றுமே எழுத முடியாத செய்தியாக ஒரு விடயத்தை அவர்கள் சொல்கிறார்கள்.. கற்பனைக்கு எட்டாத கதை ஒன்று அவன் கண்முன்னே விரிந்து கொண்டிருந்தது.

அவனது அழகான, புத்திசாலியான, கனிவான மற்றும் அதிசயிக்கத்தக்க காதல் தரும் அவனது காதலி அமராவை செயலிழக்கச் செய்ய ஏதாவது செய்ய வேண்டும் என்று அவர்கள் அவனிடம் கேட்கிறார்கள்?

“என் அன்பான. என் மனதில் குடியிருக் கும் எனது அமராவை இவர்கள் தந்திருக்கும் மாத்திரையைக் கொடுத்து அவள் சிந்தனையை மழுங்கடிக்கவா?”

“அமராவைக் குழப்ப இந்த விஷப் பொருளைப் பயன்படுத்துவதா? அவர்கள் அவளை பைத்தியமாக்கப் போகிறார்களா? அவளது அழகிய முகத்திலிருந்து பிரகாச மான புன்னகையைத் துடைப்பதற்காக, அவ ளுடைய சக்திவாய்ந்த கண்களை மங்கச் செய்வதா? அவளது கிசுகிசுப்பையும், அவளது இனிய உதடுகளிலிருந்து அவனது உதடு களுக்கு வரும் இனிய முத்தங்களையும் அழித்துவிடவா?.

அவனுக்குத் தெரிந்த வரையில் அமரா ஒரு இலக்கியப் படைப்பாளியாக வரவேண்டும் என்று தன்னைப்பற்றிச் சொல்கிறாள். இதுவரை அவள் விசேடமாக ஒன்றும் எழுதவில்லை.

ஆனால், அவன் அருமைக் காதலி அமரா பற்றி குமார் கற்பனைகூட செய்யாத விஷயங்களை அவர்கள் சொல்கிறார்கள். அவளைப் பற்றி அவனுக்கு சில தகவல்களைக் கொட்டிக் கொண்டிருந்தார்கள், அவனும் அவளை நினைத்து அவன் மனதுள் இப்போது பயப் படுகிறான்.

அவர்கள் விரும்பியதை அவன் செய்ய வேண்டும், இல்லையென்றால்? மேற்கொண்டு அவனால் யோசிக்க முடியவில்லை..

மாத்திரையின் விளைவுகளை விரிவாக அறிய அவன் விரும்பினான். ஆனால், இப் போது அவனுக்கு எந்த பதிலும் கிடைக் காது என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். ஒருவேளை அந்த அதிகாரி பதில் சொன்னாலும் அது நேர்மையானதாக இருக்குமா?

“கேஸ் முடியற வரைக்கும் நாங்க உன்னை அவதானித்துக் கொண்டிருப்போம்”

“இதை பழச்சாறு அல்லது தண்ணீரில் கலக்கவும், அவள் எதையும் வித்தியாசமாகச் சுவைக்க மாட்டாள் பழச்சாறு ருசிதான் இருக்கும். இது உங்கள் கண்களுக்கு முன்னால் வேகமாக வேலை செய்யும். தாமதிக்காமல் இன்றே சிகிச்சையைத் தொடங்குங்கள்”

இரண்டாவது அதிகாரி அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தார். அல்லது அவசரமான தொனியில் அவருக்கு உத்தரவிட்டார்.

இன்று? உடனே? ஏன்?

அவர்களிடம் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் தன் சட்டைப் பையில் ஒரு மாத்திரையுடன் கனத்த இதயத்துடன் வெளியே வந்தான். சில மணி நேரங்களுக்கு முன் இந்த கிளப்பில் நுழைந்த குமார், இப்போது வெளியேறும் குமார் இருவரும் வேறு மனிதர்கள் என்பது தெரிந்தபோது அவன் மனச் சாட்சி அவனையிடித்தது. தான், தற்போது, வேறு வழி தெரியாத, ஒரு புலனாய்வுச் சதிவேலையின் சேவகன் என்பதை உணர்ந்தான்.

அவர்கள் விரும்பியதைச் செய்ய குமார் தயங்கினால், அதன் தாக்கங்கள் மிகப் பெரியதாக இருக்கும்.

“இந்தக் கொடியவர்கள் அமராவைப் பார்த்துப் பயப்படுகிறார்கள். அவள் எழுதிய அல்லது எழுதிக் கொண்டிருக்கும் ஏதோ ஒன்று அவளைப் பலியெடுக்கப் போகிறது. அவர்கள், இவனுக்குச் சொன்ன விடயத்தை இவன் நிறைவேற்றாவிட்டால் இவர்கள் அமராவுக்கு ஒரு விபத்து ஏற்பாடு செய்யலாம். அவளை ஊனமாக்கலாம். அவளைச் சிதிலமாக்கிச் சிந்தனையைக் குழப்பலாம். மூளைச் சாவு அடையச் செய்யலாம் அல்லது அவளைச் சீரழித்துக் கொலை செய்து என்றுமே யாராலும் தேடமுடியாத விதத்தில் அழித்து விடலாம். குமார் ஒரு பெரிய செய்தியாளனாக வளர்ந்து கொண்டிருக்கிறான். அமராவுக்கு ஏதும் நடந்தால் அதை அவன் விசாரிக்கக் கூடாது என்பதால் அவனையே அமராவின் அழிவுக்குப் பாவிக்கிறார்களா..!

அவனது பாதி உயிரான அவனின் அன்பு அமரா அவனை நம்பி இந்தத் தலைநகருக்கு வந்தவள். நாட்டின் மிகப் பெரிய பகுதியின் தலைநகரான இந்த வலிமையான “தனா” நகரத்தில் அவளைப் பாதுகாக்க எதையும் செய்யத் தயாராக இருப்பதாக அவன் அவளுக்கு வாக்குறுதி அளித்திருந்தான்.

வாழ்க்கையில் சட்டென்று பல மாற் றங்கள் வருவது எல்லோர் வாழ்விலும் ஏதோ ஒரு தடவையென்றாலும் வரும் என்பதைத் தெரிந்தவன் அவன். அமராவைச் சந்தித்ததும், அவளின், அறிவு, சமுதாயம் பற்றிய ஆழமான தேடல்கள் மூலம் அவளையுணரத் தொடங்கி அவன் தன்னையறியாமல் அவளை நினைத்து நித்திரையற்றுத் தவித்ததும் அவன் எதிர்பாராத மாற்றங்களில் ஒன்றுதான்.

பல்கலைக்கழகத்திலும் வேலை பார்க்கும் இடங்களிலும் அவனது திறமையையும், கவர்ச்சியையும் மதித்து அவனையணுக முனைந்த பெண்கள் அதிகம். அமரா அவர்



களில் ஒருத்தியல்ல.தனித்துவமானவள் தனது அக, புற அழகைப் பறைசாற்றாதவள்.செயல் களில் அவளின் திறமையைக் காட்டுபவள். முடிந்தவரைக்கும் தன்னுடன் பழகுபவர்களைக் கௌரவமாகவும் கனிவாகவும் இணைத்துக் கொள்பவள்.

அமராவும் குமாரும் தாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய வாழ்க்கையைப் பற்றி,அவர்கள் பல்கலைக்கழகத்தில் ஒன்றாய்ப் படிக்கும்போது ஒருபோதும் நினைத்துப் பார்க்கவில்லை, ஏனெனில் அவளுக்கு ஒரு கல்லூரியில் விரிவுரையாளராக வேண்டும் என்ற கனவு இருந்தது.

அவன், மேற்படிப்புப் படித்து ஒரு வழக்கறிஞராக வரவேண்டும் என்று விரும் பினான். ஆனால் ஒரு பத்திரிகையாளனாக வந்து விட்டான். அவன் வழக்கறிஞராக வருவதை அமரா விரும்பவில்லை என்பது அவனுக்குத் தெரியும். "தங்கள் வருவாய்க்காக நேர்மையறவர்களைக் குற்றமற்ற நல்லவர் என்று வாதாடுவதும் வழக்கறிஞர்கள்தானே" என்று கிண்டலடித்தாள்.

பத்திரிகையாளனாக வந்தபோது.. பத்திரி கைத்துறை, மக்கள் வாழ்வில் மிகப் பலம் வாய்ந்த இடத்தை எடுத்திருக்கிறது. ஒரு சமயக் கருத்துப் பரப்பாத வேலையை, ஒரு அரச சக்தியால், ஒரு பண சக்தியால் செய்ய முடியாத பல பிரமிப்பான வேலையை ஒரு எழுத்தாளனால் அல்லது ஒரு பத்திரிகை யாளனாற் செய்ய முடியும்" என்று அவனுக்குச் சொன்னாள்.

ஆனால், திடீரென்று, சுமார் ஒரு வரு டத்திற்கு முன்பு, அவள் அவனுக்கு போன் செய்து, அவள் "தானா" நகரத்திற்கு செல்ல வேண்டும் என்று சொன்னாள். குறிப்பாக அவள் இலக்கியப் படைப்புகள் செய்ய விரும்பினாள்.

அக்கால கட்டத்தில் குமாரின் எழுத்து பலரையடைந்து கொண்டிருந்தது.பிரபல ஊட கம் ஒன்றில் அவனுக்கு நல்ல பதவி வழங் கப்பட்டதால் அவனும் "தானா" நகருக்கு வந்தான். அவன் அவள் அருகில் வந்தான். "தானா" நகருக்கு ஏன் திடீர் மாற்றம்?" என்று கேட்டான்... "ம் நான் எழுத்தாளியாகப் போகிறேன்," என்றாள் அமரா.

"எழுத்தாளியா?"அவன் ஆச்சரியப் பட்டான். ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி கொடுக்கும் வேலையைச் செய்யவேண்டுமென்று ஆசைப் பட்டவள் இன்று இலக்கியவாதியாக ஆசைப் படுவதை அவன் எதிர்பார்க்கவில்லை.

"ஆமாம், ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள்? நான், பெண்களும் சமுதாயமும் சம்பந்தப் பட்ட சில விடயங்களையிட்டுக் கொஞ்சம் ஆராய்ச்சி செய்கிறேன். அவை பற்றி எழுதப் போகிறேன்" என்றாள். அவன் அவளிடம் மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை.

அவர்களின் பல்கலைக்கழக மூன்று வருட நல்ல நட்பு "தானா" நகரில் இருவரும் இணைந்தபோது அழகான காதல் கதையாக மாறியது. அவர்களின் காதல் உறவு கோடை மலர்களாக மலர்ந்தது. "ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒருத்தரில் ஒருத்தருக்கு உண்டாகும் ஈர்ப்பு பாலியல் சம்பந்தமானது மட்டுமல்ல, அந்த உறவின் இணைவில் மூலம் உலக மனிதர்களின் சிக்கலான சிந்த னையையே எங்கள் இருவரிலும் தேடலாம்" என்று சொன்னாள்.

அவன் அமரா சொல்வது புரியாது அவளைப் பார்த்தபோது "ஒன்றாக உடலுறவில் இணையும் ஆண் பெண் உறவு வெறும் இனவிருத்தி குடும்ப நலன், சமுதாயக் கோட்பாடுகளைக் கடைப் பிடித்தல் அத்துடன் சமய நம்பிக்கைகளைத் தொடருதலாக மட்டுமிருக்க முடியாது. ஒன்றாய்ச் சேரும் இரு மனிதர்கள் காலக்கிரமத்தில் பல அனுபவங்கள், அறிவுத் தெளிவுகள், அசாதாரண காரணிகள் காரணமாக மாறலாம். உலகில் பலரும் அப்படித்தான். நாங்களும் ஒருகாலத்தில் அன்னியர்களாக மாறலாம். சிலவேளைகளில் சில மனிதர்கள் இதயம் நிறைந்த காதலுடன் கலவி செய்து விட்டுக் காலனாகவும் மாறலாம்" அவளின் விளக்கங் களுக்கு அவன் சிரித்தான். அவளின் ஆழ் மனதின் தீர்க்க தரிசன சக்தியை அவன் அப்போது புரிந்து கொள்ளவில்லை.

அவளுடன் காதல் புரிவது அசாதாரண உணர்வை அவனுள் நிறைத்தன என்பதை அவன் உணர்ந்ததைப் புரிந்துகொண்ட அவள், "காதல் புரியும்போது உடல், உள தேவைகளைப் பூர்த்தி செய்கிறோம் என்று மட்டுமில்லை. எங்களுக்குள் இருக்கும், எங்களாலேயே அடையாளம் காணப்பட்டிராத அரிய உணர்வுகளின் விளிப்புகளையும் உணர்ந்து கொள்கிறோம்" என்றாள் ஒருநாள்.

அவளுடன் இருக்கும்போது குமார், ஒரு அழகான வேறு உலகத்திலிருப்பதாக உணர்வான். ஆனால் அண்மையில் அவள் மிகவும் பிஸியாக இருக்கிறாள். சில சமயம் வெளியூர் போயிருப்பாள். அவனால் அவளின் அண்மைக்கால மாற்றங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

சமீப காலமாக அவளை அவ்வளவாகப் பார்க்கவில்லை.

இரண்டு வாரங்களுக்கு முன்பு அவர்கள் அதைப் பற்றி விவாதித்தனர்.

"தயவு செய்து என்னைக் கட்டுப்படுத்த முயற்சிக்காதீர்கள்" என்று சொன்னவள் கலக்கத்துடன் இருந்தாள்.

"இப்ப எதுக்கு என்னைப் பிரிந்து அடிக்கடி வெளியே செல்கிறாய்? இன்றைக்கு சாயங்காலம் உன்னைப் பார்க்க வரலாமா?" என்று தாங்க முடியாத காதல் தாபத்தில் இன்று அதிகாலையில் கேட்டான். அவனையே மறந்து ஆழமாக அவள் ஈடுபடும் விடயம் என்னவாக இருக்கும் என்று, அவளைப் பற்றி கவலைப்பட்டவன், இன்று கிளப்புக்கு வரு வதற்கு முன் அவளுக்கு போன் செய்த போது. "தயவு செய்து எனக்காகக் கொஞ்சம் நேரம் ஒதுக்கமாட்டாயா" என்று கெஞ்சினான்.

"என் அன்பே, நான் என் நாவலை கிட்டத்தட்ட முடிக்கிறேன். நான் இப்போது தனியாக இருக்க விரும்பினேன், இன்று உன்னைப் பார்க்க விரும்பவில்லை"

என்றாள் சோகமான குரலில்.

அவனை அந்த அதிகாரிகள் இன்று மதியம் அழைக்கும் வரைக்கும் அவள் எழுத்துக்கள் பற்றி அவன் பெரிதாக யோசிக்கவில்லை.

"ஒரு நாவல்?" அவன் சிந்தித்தான். அவள் இதுவரை இன்னும் பெரிதாக எதுவும் வெளி யிடவில்லை. ஆனால் ஒரு நாவலா? அது ஒரு நாவலாக அலலது அவளது எதிர்காலத்தை அழிக்கக்கூடிய ஆபத்தான அறிக்கையாக இருக்க முடியாதா?

அவன் பாக்கெட்டில் மாத்திரைகள், கொஞ்சம் கொஞ்சமாக அவள் நாவலின் அர்த்தத்தையும் அது இப்போது என்னவென்று புரிய ஆரம்பித்தான். அவளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அதிகாரிகள் ஏன் நினைக்கிறார்கள் என்பது இப்போது அவனுக்குப் புரியத் தொடங்கியது!

கொஞ்ச நேரம் தயங்கிநின்றான்

"அவள் "தானா" நகருக்கு வந்த சில முக்கிய நபர்களை விசாரிப்புக்குள் இழுத்தால், பெரிய குழப்பம் ஏற்படும்" என்று அதிகாரிகள் இன்று அவரிடம் தெரிவித்தனர். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"அவளால் ஆரம்பிக்கப்படவிருக்கும் விசாரணை மிகவும் ஆபத்தானது. அதை நிறுத்த வேண்டும் அல்லது அவள் சிக்கலில் மாட்டிக் கொள்வாள் என்றும் அவர்கள் அவரிடம் கூறினர். அவளது விசாரணையின் கீழ் இருந்தவர்கள் அரசுக்கு நெருக்கமான மிகவும் சக்திவாய்ந்த நபர்கள். அவள் தனது வேலையில் தவறான திசையில் அடியெடுத்து வைத்தால் அவளின் எதிர்காலமே பாதிக்கப் படலாம். எனவே, ஒரு நல்ல குடிமகனாக, குமார் உங்கள் வேலையைச் செய்ய வேண்டும். இது நீங்கள் எங்கள் தாய் நாட்டுச் செய்யும் கடமை"

அதிகாரிகள் சொன்ன சில விஷயங்கள் அவன் மனதில் பயத்தை உண்டாக்கத் தொடங்கின.

குமார் மாத்திரையைத் தொட்டான். அமராவை ஒட்டு மொத்தமாக அகற்ற வேண் டும் என்று அவர்கள் விரும்புகிறார்களா?

டாக்ஸியில் ஏறியதும் அவன் மனம் சுழன்று கொண்டிருந்தது. சுற்றியுள்ள கோயில்களில் மாலை நேர பூஜைகள் மணியோசையுடன் தொடங்கியிருந்தன. மக்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள். தெருக்களின் துர்நாற்றம் வீசியது.

அவள் இப்போது என்ன செய்வாள் என்று அவனுக்குத் தெரியும். அவள் அடிக்கடி பால்கனியில் உட்கார்ந்து ஒரு அழகான மாலை நேரத்தில் தனது பால்கனியின் கீழ் தெருவில் பன்முக மக்களால் நிறைந்த ஒரு பரந்தஉலகம் நகர்ந்து செல்வதைப் பார்ப்பாள்.

"அவர்களின் ஆடைகளின் நிறம், குரல், செயல்பாடுகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று மிகவும் வேறுபட்டவை. அவர்கள் ஏழையாக இருக்கலாம் அல்லது பணக்காரராக இருக் கலாம். அசிங்கமாக இருக்கலாம் அல்லது அழகாக இருக்கலாம். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் அவர்கள் நேசிக்கும் ஒருவருக்கு சிறப்பு வாய்ந்தவர்கள். அதுதான் மனிதகுலத்தின் மகத்துவம்" என்று அவள் அடிக்கடி மக்களின் அன்பு மற்றும் கருணை பற்றி பேசுகிறாள்.

இன்று அவன் அவளையும் அவளது எண்ணங்களையும் செயலிழக்கச் செய்யப் போகிறானா? அவனால் உண்மையில் அப்படி செய்ய முடியுமா? அவன் எண்ணங்கள் மனதில் வெள்ளமாக ஓடிக் கொண்டிருந்தன.

டாக்ஸியிலிருந்து இறங்கினான். கொஞ்சம் உணவு மற்றும் அவளுக்கு பிடித்த அன்னாசிப் பழம் வாங்கினான் .


அன்னாசி பழச்சாறு! அவளைப் பார்க்கப் போகும் போதெல்லாம் கொண்டு செல்வான். அவன் அவளுக்குப் பிடித்தவற்றைத் தயக்க மின்றி அப்படித்தான் செய்வான்.அமராவுக்கு அன்னாசிப் பழச்சாறு பிடிக்கும்.

அவள் இருக்கும் மாடிவீட்டின் லிப்டுக்காக காத்திருக்கப் பொறுமையில்லாமல், அவன் முன்னால் படிகளில் ஏறிக் கொண்டிருந்தான். ஒவ்வொரு படிகளும் அவன் காலடியால் அமராவின் முடிவை நிர்ணயிக்கப் போகிறதா?

அவள் வீட்டு வாசலில் அவனைப் பார்த்ததும் அவள் ஆச்சரியப்பட்டாள் என்பதை அவனால் உணர முடிந்தது. மேலும் அவளின் கதவு சாவி தன்னிடம் இருப்பதால்,அவன் தன்பாட்டுக்குத் திறந்து வராமல் அவளின் கதவைத் தட்டியதால் அவள் குழப்பத்தில் இருக்கிறாள் என்பதை அவள் முகபாவனை எடுத்துக் காட்டியது.

---

# முச்சந்தி ஆலமரம்



சாலப் பரந்து – முச்
சந்தியிலோர் ஆலமரம்
சாய்ந்து இளைப்பாறும்
சந்ததி பல கண்டமரம்
காலக் கணக்கின்றிக்
கனதியாம் உழைப்பினிலே
காப்பாய் நின்ற
தோப்பான தொருவிருட்சம்

ஒற்றைத் தருவாகி
ஊருக்கே நிழல்கொடுக்கும்
பற்றைத் துறந்தவரும்
படுத்துறங்கு மில்லமாகும்
வெயிலுக்குக் குடையாகி
விழுமழைக்குக் கருவாகி
தொழுகின்ற கடவுளரும்
உறைகின்ற கோவிலாகும்

மூத்தோர் சபைகூடும்
மூலமாம் நீதிமன்றாய்
காப்பாகிக் காதலையும்
கருணையாய் அணைத்திருக்கும்
விழுதிலே ஊஞ்சல்கட்டி
விளையாடும் சின்னவரும்
விருப்புடன் குதிக்கின்ற
விநயமான ஆடுகளம்

பல்லுக்குக் குச்சியென
சொல்லுக்குக் உறுதியுடன்
அல்லைவை போக்கிட
அருமருந் தென்றாகிடுமே
குளுகுளு தென்றலையும்
தழுவிடத் தந்திருந்து
குருவி காக்கைக்கும்
காப்பரண் கூடாகும்

இத்தனை இன்பமும்
இணைவாய்த் தந்த
முத்தான தோப்பென்னும்
சொத்தான ஆலமரம்
விஸ்தாரக் கட்டிடங்கள்
விண்முட்ட எழுப்பவென
கொத்தாகப் பறித்துவிடச்
சுற்றமாய் அணைந்தவைகள்
சோகமாய் அலைந்திடவே

சூழ்ந்திருந்த உறவெலாம்
ஆழ வேதனையாய்
ஆலதன் பெருமையை
ஆராதனை செய்கின்றார்!

**– கீத்தா பரமானந்தன் –**
(ஜேர்மனி)

"என்னை உள்ளே கூப்பிடத் தயக்கமா?. என்று அவளிடம் கேட்டான். தனக்குப் பிடித்த பானத்துடனும் அன்பான புன்னகையுடனும் அவர் நிற்பதைப் பார்த்தது அவள் கண்களில் காதல் பொங்கியதை அவன் அவதானித்தான்.!

"அட கடவுளே, இரண்டு வாரமா அவளை மிஸ் பண்ணிட்டேன்" என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது

அவளைக் காணாமல் போனதைப் பற்றியும், அவளுடன் காதல் செய்வதைப் பற்றியும், அவளுடைய கிசுகிசுப்பைக் கேட்பதைப் பற்றியும், அவளுடைய மென்மையான முத்தங்களையும், இனிய உணர்வை காதல் அலையாக்கும் தொடுதலைப் பற்றியும் அவன் நினைத்தான். அவள் தன் வேலையில் மும்முரமாக இருந்தபோது தன்னைப் பற்றி அவ்வளவாக நினைத்ததில்லை என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் இன்று அவள் சுதந்திரமாக இருக்கிறாள். ஆமாம் அவளும் அவனைப் பார்க்காமல் தவித்திருக்கிறாள் என்பதை அவனால் சொல்ல முடியும்.

"ரொம்ப கவலையா இருப்பதுபோல் தெரிகிறதே" என்று அவனை அன்புடன் பார்த்தாள். அவள் குரல் கனிவாக இருந்தது. அவள் தனியாக ஓய்வெடுக்க திட்டமிட்டிருந்த போது கதவைத் தட்டியதற்காக அவள் அவனை மன்னித்தாள் என்பது அவளின் தொனியிற் பிரதிபலித்தது.

அவன் அவளை உற்றுப் பார்த்தான். "அவள் மிகவும் அழகாகவும் அன்பாகவும் அக்கறையுடனும் இருக்கிறாள்"

"இன்றைக்கு நீங்க ரொம்ப சந்தோஷமா இருக்கிறாய் அமரா" அவன் அப்படிச் சொல்லிக் கொண்டு அவளது அப்பாவித்தனமான முக பாவத்தை கவனித்தான்.

"நானா?" என்று சிரித்தாள்.

எப்படியோ அவனுக்குத் தெரியும் என்று நினைத்து அவள் எழுத்தைப் பற்றி கேள்வி கேட்கலாம். கடந்த சில வாரங்களாக அவள் ஏன் பிஸியாகவும் சுறுசுறுப்பாகவும், கவலையுடனும் மனநிலையுடனும் இருந் தாள்! ஆனால் அவனும் அவளுக்குப் பிடி கொடுத்துப் பேசாமல் அவனுக்குக் கொடுத்த உத்தரவை நிறைவேற்றுவது என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அவன், தன்னையழைத்த அதிகாரிகளுடன் ஒரு பெரிய மதிய உணவை சாப்பிட்டதால் அவனுக்கு பசி இல்லை. உணவு விஷயத்தில் அவள் மிகவும் கவனமாக இருப்பவள் என்பது அவனுக்குத் தெரியும். அவன், தான் கொண்டு வந்த உணவு மற்றும் பானத்தையும் சமையலறையில் வைத்தான். அவளது இருப்பிடம் அசுத்தமாக இருப்பதைக் கவனித் தான். இது அசாதாரணமானது அமரா. அவள் எவ்வளவு மிகவும் பிஸியாக இருந்தாள் என்பதை அது அவனுக்கு உணர்த்தியது.

அவன் வந்து அவளை அணைத்துக் கொண்டு உட்கார்ந்தான். கீழே தெருவில் சத்தம் தாங்க முடியாததால் அவள் எழுந்து சென்று ஜன்னலை லேசாக மூடினாள். அவர் தனது பாக்கெட்டில் இருந்த மாத்திரையைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான்.

அவன் அதை தனது அழகான காதலியின் அதிர்ச்சியான வாழ்க்கை மாற்றத்திற்காகப் பயன்படுத்துவானா? அவன் பயந்து போனான்.

இந்த அழகை சிறிது நேரம் அல்லது சில நாட்கள் செயலிழக்கப் பண்ணுவதுஎப்படி? இந்த மாத்திரை உண்மையில் அவளைக் கொஞ்ச காலம் சாதாரண வாழ்க்கையிலிருந்து முடக்குமா அல்லது?

அவன் அதைப் பற்றி சிந்திக்க விரும்ப வில்லை. அவன் "அதிகாரிகளை" நம்பி கொஞ்ச காலம் அமராவின் பாதுகாப்பிற்கும் அவனது எதிர்காலத்திற்கும் சிறந்த வேலை யைச் செய்ய வேண்டும்!.

அவள் தன் வேலையைப் பற்றிக் கேட்கக்கூடும் என்று அவன் உணர்ந்தான். தான் வேலை பார்க்கும் மீடியா கம்பெனியை அவளுக்குப் பிடிக்காது என்பது அவனுக்குத் தெரியும். அதிகாரத்தில் இருந்து, ஊழல் செய்த அன்பற்ற மதம் மற்றும் பேராசை பிடித்த வணிகர்களுடன் தொடர்புடைய ஒழுக் கக்கேடான மற்றும் சட்டவிரோதமான ஒரு கும்பலால் நடத்தப்படும் பத்திரிகை அது என்று அவள் அவனைத் திட்டியிருக்கிறாள்.

"உனது நாவலை எழுதி முடித்து விட்டாயா டார்லிங்?" என்று தன் பதட்டத்தை மிகவும் கவனமாக மறைத்துக் கொண்டு அன்பாக குரலில் கேட்டான். அவள் பதி லாக புன்னகைத்தாள். ஆம் அவள் அதைச் செய்திருந்தாள் என்பது அவளின் மலர்ச்சி யான முகத்தில் தெரிந்தது. அவர்கள் சொன்னது சரிதான். அவள் எதையோ யோசித்துக் கொண்டிருந்தாள். ரொம்ப சீரிய

ஸான விஷயம். நிலைமையை நினைத்து அசௌகரியமாக உணர்ந்தான்.

திடீரென்று அவர்களுக்கிடையே ஆழ்ந்த மௌனம் நிலவியது.

"உன் நாவல் எதைப் பற்றியது?" என்று அவளிடம் கேட்டான்.

"நிஜமாவே தெரிந்து கொள்ள வேண்டுமென ஆசைப்பட்டீர்களா?" அவள் சற்றே தயங்கினாள். அவளது கூர்மையான பார்வை அவன் இருதயத்தைத் துளைத்தது.

"ஏன் முடியாது?"

"இது ஒரு வேதனையான கதை" அவள் பெருமூச்சு விட்டாள்.

"சோகமா?" முடிந்தவரை குரலை மென்மையாக வைத்திருந்தான்.

அவள் அவனைப் பார்த்தாள்.

அவள் தொடரட்டும் என்று காத்திருந்தான்.

"பத்திரிகைகளில் அடிக்கடி வரும் திடுக்கிடும் கதைகள் போல" அவள் சொன்னாள். குரல் கரகரத்தது.

அவன் இன்னும் அவளுக்காக காத்திருந்தான்.

"கதைக்களம் யாரைப் பற்றியது என்று தெரிந்தால் அதை நான் வெளியிடும்போது ஒரு சிலர் என்னைக் கொல்லவும் முயற்சிக்கலாம்." அவளுடைய புன்னகை இப்போது அவள் முகத்திலிருந்து முற்றிலுமாக மறைந்து விட்டது.

"பணம், மதப் பின்னணி மற்றும் அதிகாரத்தைக் கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல் எழுப்பவும் அவர்களுக்கு நீதி கேட்கவும் பலர் இல்லாததால் பல வீனமானவர்களை பாலியல் பலாத்காரம் செய்யலாம், அவமானப்படுத்தலாம். கொலை செய்யலாம் என்று சிலர் நினைக்கிறார்கள்..." அமராவின் கோபம் அவள் குரலில் பிரதிபலித்தது.

"சட்டம், ஒழுங்கு, நீதி ஆகியவற்றை நம்பும் ஒருவர் எப்படி உண்மையை விட்டு அமைதியாக இருக்க முடியும்?" அவள் முகத்தை நேரடியாகப் பார்த்துக் கேட்டாள்.

அவன் மரத்துப் போனான். அவள் ஏற்கனவே அதைச் செய்திருந்தாள் என்பது புரிந்தது ஆனாலும் அவர்கள் சொன்னதை அவன் செய்யவில்லை என்றால் என்ன செய்வது?

"நான் ஏதும் குடிக்கப் போறேன், உனக்கு ஜூஸ் வேணுமா? அவன் குரல் லேசாக நடுங்கியது. ஆனால் அவள் அதை கவனிக்கும் மனநிலையில் இல்லை. அவள் அழுது கொண்டிருந்தாள். அவள் கன்னத்தில் கண்ணீர் விழுந்தது. "குடிப்பதற்காக ஏதும் வேணுமா" என்று அவன் கேட்டபோது "ஆம்" என்று தலையை அசைத்தாள்!

சமையலறைக்குச் சென்றான். அவன் பழரசத்துடன் திரும்பி வர சில நிமிடங்கள் ஆனது. அவன் ஹாலுக்கு திரும்பியபோது அவள் லேப்டாப்பில் ஏதோ செய்து கொண்டிருந்தாள்

அவள் இப்போது என்ன செய்து கொண்டிருந்தாள்? அரசியல், சமூக பூகம்பத்தை உருவாக்கக்கூடிய ஆதாரங்களுக்கு அடிப்படையான "நாவலை" உரிய இடங்களுக்கு அனுப்பியிருப்பாளா?

அவள் லேப்டாப்பை மூடிவிட்டு சோபாவில் போய் உட்கார்ந்தாள். "இப்போதைக்கு என் உணர்வை விவரிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை. மக்களைப் பல காரணங்களால் பிரித்து அவர்களை ஒன்றுபட விடாமல் செய்த ஒரு சில அரசியல்வாதிகளின் பேராசையால் உலகம் குழப்பமும் அமைதியின்மையும் வறுமையும் பல பக்கமும் நிறைந்திருப்பதைப பாருங்கள்" அவள் அவனுக்கு விரிவுரையாற்றும் மனநிலையில் இருந்தாள் என்பது அவனுக்குப் புரிந்தது .

அவன் கைகள் விஷபானத்தைப் பிடித்திருந்தது. நடுங்கிக் கொண்டிருந்தது. முகம் வெளிறிப் போயிருந்தது. அவள் ஒரு சோகமான புன்னகையுடன் அவனை நேரடியாகப் பார்த்தாள். "வெளியில் பயமுறுத்தும் உலகத்திலிருந்து நாம் விலகி இருப்பதால் நான் உங்களுடன் இருக்கும் போது நான் பாதுகாப்பாக உணர்கிறேன்" அவளுடைய குரல் சோகமாக இருந்தது. ஆனால் அவள் என்றுமில்லாத விதிவிலக்காக அழகாக இருந்தாள்.

பானக் கோப்பைகளை காபி மேசையில் வைத்துவிட்டு அவளுடன் அமர்ந்தான். அவள் தன் தலையை அவன் தோளில் சாய்த்து மென்மையாக முத்தமிட்டாள்.

அவள் நெருக்கம் அவனைப் படாதபாடு படுத்தியது. அவள் முத்தங்கள் அவனை நிலை மறக்கச் செய்தது. இருவரும் ஒருத்

தரில் ஒருத்தர் இணைந்து, அயல் உலகத்தை மறந்து அந்தி நேர வேளையில் காதல் புரிந்தார்கள். வெளியில் உலகம் இருள முதல் மக்கள் கூட்டம் தங்கள் குடியிருப்பை அடையும் ஒலிகள், வாகன சந்தடிகள், வியாபார ஓலங்கள், கோயில் மணியோசை அத்தனையும் அவர்களின் இணைவு நிலையைப் பாதிக்கவில்லை. இரு கிழமைப் பிரிவு அவர்களின் இணைவில் மிகவும் அன்னியோன்யத்தை எட்டியது..

சட்டென்று எங்கோயோ இரு வாகனங்கள் மோதிக் கொண்ட பயங்கர தொனி இருவரையும் உலுக்கியது. அவள் அவனை இறுக்கி அணைத்துக் கொண்டாள்.

“இந்த நிமிடம் என்றென்றும் தொடர விரும்புகிறேன்”. என்று அவனை முத்தமிட்டபடி முணுமுணுத்தாள். அவனுக்கு நெஞ்சு வலித்தது. மனம் நடுங்கியது.

முகம் வெளிறிப் போயிருந்தது. எதுவும் அவளை அவனிடமிருந்து பிரிக்க முடியாது என்பதால் அவன் அவளை முடிந்தவரை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான். அவள் முன்னால் இருந்த விஷ பானத்தை வெறித்துப் பார்த்தான்.

“டார்லிங், மக்கள் இந்த உலகத்திற்கு வந்தவுடன் ஏதோ ஒரு வழியில் இறந்துதான் போகிறார்கள். இப்போது உங்களை என் இதயத்தில் நிறைந்த காதலுடன் தழுவுகிறேன். என் முத்தங்கள் உன்னிடமுள்ள எனது காதலின் அடையாளங்கள்.. இந்த நிமிடம் நான் இவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்குப்பேர்து இறந்தால் நல்லது. நான் இப்போது உனக்குத் தந்த முத்தம் எனது இறுதி முத்தமாக இருக்கலாம். ஆனால் என் நண்பரின் சகோதரி பிரேமாவைப் போன்ற ஏழைப் பெண்களை கற்பனை செய்து பாருங்கள். அவள் மற்றவர்களின் காமவெறி மகிழ்ச்சிக்காக மட்டுமே தனது வாழ்க்கையை இழந்தாள்” அமரா அழுதபடி தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

“என் நாவலில் நான் மிகவும் மோசமான செயல்களைச் செய்யும் சக்திவாய்ந்த மனிதர்களைப் பற்றி பல உண்மைகளை எழுதியிருக்கிறேன்” அமரா தொடர்ந்தாள்.

“அதாவது, சமூகத்தின் மேல் மட்டத்தில் உள்ள அதிகாரம் படைத்த மனிதர்களைப் பற்றி உண்மையை எழுதிவிட்டாயா?” என்று அவன் தன் தடுமாற்றத்தை மறைத்துக் கொண்டு மென்மையான குரலில் அவளிடம் வினவினான். அவள் சில நொடிகள் பதில் சொல்லாமல் அவன் மார்பில் காதலுடன் துவண்டு, அவன் முகத்தை வருடியபடி தன் பேச்சைத் தொடர்ந்தாள்.

“இளம் பெண்களை வேட்டையாடும் மிருகத்தனமான பாலியல் வேட்டைக்காரர்களின் கும்பலிடம் தனது பதினான்கு வயது அழகான மகளை இழந்த எனது சிநேகிதி பிரேமாவின் தந்தையாக உங்களை கற்பனை செய்து பாருங்கள்”.

தன் தோழி பிரேமாவின் குடும்பத்திற்கு நீதி கேட்கும் அவள் பேச்சைக் கேட்டு அவன் பேசாமலிருந்தான். அவள் சொல்லும் விடயம் பலரின் இருதயத்தை உலுக்கிய ஒரு கொடிய விடயம். வலிமையற்றவர்களுக்கு நடக்கும் கொடுமை கண்டு மவுனமாகவிருக்கும் கோழைகளின் மனச்சாட்சிக்கு விழுந்த சாட்டையடி அந்தச் செய்தி.

“எனது கதாபாத்திரங்கள்..” அமரா தொடர்ந்தாள்.

குமார் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. “உங்கள் காதலி அமரா, உங்களால் கனவிலும் நினைத்துப் பார்க்காத சிலருடைய விடயங்களைத் தோண்டிக் கொண்டிருக்கிறாள்” என்ற அதிகாரியின் வார்த்தைகள் அவன் மனதில் ஒலித்தன.

“தனது அழகான மகள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, சிதைக்கப்பட்டு, பாதி எரிக்கப்பட்ட உடல் காட்டில் மிருகத்தால் இழுத்துச் செல்லப்பட்டதைப் பார்த்து தற்கொலை செய்து கொண்ட என் தோழியின் தாயைப் பார்த்தபோது நான் எப்படி அமைதியாக இருக்க முடியும்?”

அமரா அழுது கொண்டிருந்தாள். தன் காதல் நண்பன் குமார் ஆசையுடன்அவளுக்காக வாங்கி வந்த பானத்தை எடுத்துக்கொண்டாள். அவன் அவளைத் தடுக்கவில்லை. ஜன்னல் வழியே பார்த்தான். அவன் கொண்டு வந்து வைத்த நச்சுப் பானத்தை அவள் அருந்துவதை அவன் கண்கள் பார்க்க மறுத்தன.

“நான் என்ன செய்ய முடியும்? என்னால் அமைதியாக இருந்து இந்த விஷயங்களை புறக்கணிக்க முடியவில்லை. அதிகார வர்க்கத்தின் பாசாங்குத்தனத்தை பரந்த உலகிற்கு சொல்ல சில கற்பனை கதா பாத்திரங்கள்

வழியாக இந்த விஷயங்களை என் நாவலில் எழுத வேண்டும் என்று தோன்றியது"

அவளுடைய குரல் திட்டவட்டமாகவும் கனமாகவும் இருந்தது.

அவர்கள் சில நிமிடங்கள் மௌனமாக இருந்தார்கள. அவர்கள் ஒருவரையொருவர் மிகவும் இறுக்கமாகவும் அன்பாகவும் அணைத்துக் கொண்டனர்.

அவளது இதயத் துடிப்பு குறைந்து வருவதை அவன் அறிந்திருந்தான். மேலும் அவள் மூச்சு வித்தியாசமாகிக் கொண்டு வருவதையும் அவன் உணர்ந்தான்.

"ஐ லவ் யூ" என்று அவளிடம் கிசுகிசுத் தான். அவள் அவனைப் பார்த்தாள். அவன் அழுது கொண்டிருந்தான்.

"ஏன் அழுகிறாய் குமார்" என்று கேட்டாள். அவள் குரல் மெதுவாக இருப்பதையும், வார்த்தைகள் சிதறுவதையும் அவள் உணர வில்லை. அவள் கண்கள் அவன் முகத் திலேயே நிலைத்திருந்தன.

ஒரு சொற்ப நேரத்தில் அவள் தன் மடியில் மயங்கிவிழுவதைப் பார்த்தான். "அவை வேகமாக வேலை செய்யும்" என்று தனக்கு மாத்திரை கொடுத்த அதிகாரியின் வார்த்தைகளை நினைவுகூர்ந்தபடி அவன் அங்கு அமர்ந்திருந்தான்.

அவளுடைய சுவாசம் ஆழமற்றதாக இருந்தது. கண்கள் மூடியிருந்தன. அவன் அவளை அன்புடன் முத்தமிட்டு, அவளை மெதுவாக தன்னிடமிருந்து விலக்கினான்.

சில நிமிடங்கள் அங்கேயே நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். பல்கலைக்கழகத்தில் சந்தித்த முதல் நாளி லிருந்தே அவன் அவளைக் காதலித்தான். அவன் அழகானவன். பேச்சாற்றல் மிக்கவன். ஒழுக்கமானவன். எல்லாவற்றிற்கும் மேலாக மிகவும் அன்பானவன் என்று பல பெண்கள். பொறுமையாக அமராவினால் நேசிக்கப் படுவதற்காக நீண்ட நேரம் காத்திருந்தான்!.

"எனது உயிர் இருக்கும்வரை உன்னுடன் நானிருப்பேன்" எனறு அவளுக்கு ஒரு காலத்தில் வாக்குக் கொடுத்தவன் இன்று உயிரற்றுக் கிடந்த தன் நித்தியக் காதல் அமராவிடமிருந்து குமார் விலகிச் சென்றான். மாத்திரையின் விளைவு ஒரு பாரிய தாக் கத்தையுண்டாக்காது என்ற அதிகாரியின் வார்த்தையை இப்போதுகூட அவன் நம்புகிறானா?

இல்லை, ஆளும் சக்திகளுக்கு ஒரு கருவியாக இருந்த அதிகாரியை அவன் நம்பவில்லை. அவர்களது வார்த்தையை நம்பவில்லை. குமார் அவர்கள் சொன்னதைச் செய்ய மறுத்திருந்தால். அவர்கள் வேறு வழியைக் கண்டுபிடித்து, தனது அழகான அமராவை அகற்றியிருப்பார்கள். அவர்கள் ஏதோ ஒரு விதத்தில் அவனை இப்போதும் கண்காணித்துக் கொண்டிருப்பார்கள் என்று மனம் சொன்னது. அமராவின் வீட்டில்,அவளைக் கண்காணிக்க எப்போதோ அவர்கள் இரகசிய கமராக்களைப் பூட்டியிருக்கலாம். தங்களின் கட்டளையை நிறைவேற்றியிருக்காவிட்டால் குமாரின் உடலும் எங்கேயோ கண்டெடுக்கப் பட்டிருக்கும். அவனின் தங்கைகளின் வாழ்க்கை அழிந்திருக்கும்.

குமார் அமராவைப் பார்த்தபடி நின்றான். இவன் இவ்விடம் வந்ததை யாரும் பார்க்கவில்லை. அமரா இறந்து கிடப்பதை பக்கத்து பிளாட்டில் இருப்பவர்கள் யாரோ கண்டு போலிசாருக்கு அறிவிக்கலாம். அவளது மரணம் பற்றிய அறிக்கை யாரால் தயார் செய்யப்படும் என்றும் அவனுக்குத் தெரியும். அமரா, இதுவரையும் மருத்துவர்களால் கண்டறியப்படாத இதய நோயால் இயற்கை மரணம் அடைந்து விட்டதாக அறிவிக்கப் படும்? அல்லது மாத்திரையில் என்ன இருந்தது என்பது மரண விசாரணையில் மறைக்கப்பட வேலைகள் இரகசியமாக நடக்கும். அல்லது பிரேத பரிசோதனை செய்பவர்களால் காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொல்லப் படலாம்.. யாருக்குத் தெரியும் பிரேத பரிசோதனை அதிகாரியே இவனை ஏவிவிட்ட அதிகாரிகளின் நண்பனாக இருக்கலாம்.

குமார் நடந்தான். அமராவின் இறுதி முத்தங்கள் அவனின் நினைவில் எரிந்தன.. அமரா அவன் மனதில் நித்தியமாகி விட்டாள். அவன் அவளுக்குக் கொடுத்த நச்சுப் பானத்தின் குற்ற உணர்வு அவன் நினை விலும் இரண்டறக் கலந்துவிட்டதுபோல் உணர்ந்தான்.. இக்கணத்திலிருந்து அவனை அந்த நஞ்சு நினைவு அணு அணுவாக அழித்துக் கொண்டிருக்கும். அவன் கண்களில் நீர் வழிய நடைப்பிணமாக நடக்கிறான்.

❍❍❍




சிறுவர்கள் நடித்து, சிறுவர்களுக்கான தமிழ்த்திரைப்படங்கள் வெளிவந்து பல்லாண்டுகள் ஆகிவிட்டன. இந்த வருடம் (2024) ஏப்ரல் மாதம் இயக்குனர் – நடிகர் **பார்த்திபனின்** இயக்கத்தில் **டீன்ஸ்** திரைப்படம் வெளிவந்தமை வரவேற்கத்தக்கது. வெட்டு, குத்து, கொலை, கொள்ளை, இரத்தம் என்று இல்லாமல் குடும்பத்துடன் பார்க்கத்தக்கதாக இந்தத் திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

**பதின்மூன்று சிறுவர்களைச் சூழ்ந்து கதை நடக்கின்றது.** தாங்கள் பதின்மூன்று வயதை அடைந்து விட்டதால் இனிமேலும் சிறுபிள்ளைகள் இல்லை என்ற எண்ணம்கொண்டு, வீரதீரச் செயலொன்றைச் செய்ய அவர்கள் திட்டமிடுகிறார்கள். பாடசாலையிலிருந்து ஆசிரியரை ஏமாற்றி, அங்கிருந்து வெளியேறி. அக் குழுவிலிருந்த சிறுமி ஒருத்தியின் பாட்டி வசிக்கின்ற கிராமத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்படுகிறார்கள்.

கிராமத்துக்குச் செல்லும் வழியில் பட்டப்பகலில் ஒவ்வொரு சிறுவர்களாக மறைந்து போகிறார்கள். வெட்டவெளியில் நடந்து செல்பவர்கள் எவ்வாறு மறைந்து போகின்றார்கள்? என மீதமிருப்பவர்களுக்குத் தெரியவில்லை; படம் பார்க்கின்ற பார்வையாளர்களுக்கும் புரியவில்லை. இதற்கிடையில், தான் பாட்டியிட மிருந்து தெரிந்துகொண்ட அக்கிராமத்துடன் தொடர்புடைய பேய், பில்லி, சூனியம் போன்ற செய்திகளையும் அச்சிறுமி கூறி, பயத்தினை ஏற்படுத்திவிடுகிறாள். இதற்கிடையில் அவர்கள் தங்கி இளைப்பாறிய பெரிய மரமொன்றும் காணாமல் மறைந்து போகிறது! திகிலுடனும் குழப்பங்களுடனும் பாதிவரை படம் நகர்கின்றது.

பாதி படத்தின் பின்னர், கதை வேறுதிசை நோக்கி நகரத் தொடங்குகிறது. வேற்றுக் கிரகவாசிகள் பூமிக்கு வந்து, தமது ஆய்வுக்குத் தேவைக்கான மாதிரிகளை பூமியிலிருந்து எடுத்துச்செல்ல முயல்கின்றார்கள். மரம், ஆடு, மாடு, கோழி, மனிதன் என அனைத்தினதும் மாதிரிகளைக் கொண்டுசெல்ல முனைகிறார்கள். அவ்வேற்றுக்கிரகவாசிகளின் உயர் தொழிநுட்பம் காரணமாகப் பொருள்களை மிகச்சிறிய வடிவமாகச் சுருக்கி எடுத்துச் செல்கிறார்கள்! இதன் காரணமாகவே வெட்டவெளியில் சிறுவர்களைச் சிறியதாக்கியதுடன் அவர்கள் மறைந்துபோனது போன்ற கலவர நிலையினை முதற்பாதி திரைப்படம் எடுத்துக்காட்டியது.

வேற்றுக்கிரகவாசிகளின் வரவை ஆண்டாண்டு காலமாக எதிர்பார்த்திருந்த விஞ்ஞானி பார்த்திபன், வேற்றுக்கிரகவாசிகளின் வருகையை கருவிகளின்மூலம் அறிந்து கொள்கிறார். அவர் அங்கு வந்து வேற்றுக் கிரகவாசிகளுடன் ஒருவாறு தொடர்புகொண்டு ஒரு சிறுவனை மாத்திரம் அவர்களுடன் அனுப்ப ஒத்துக்கொண்டு மற்றச் சிறுவர்களை விடுதலை செய்கிறார். தாய், தந்தையற்று உதவியாளரின் துணையுடன் வளரும் அந்தச் சிறுவன் தானாக வேற்றுக்கிரகத்துக்குச் செல்வதற்கு முன்வருகிறான். அத்துடன் படம் முடிகிறது.

பல விடயங்களைச் சொல்ல முயன்றதால் படம் பார்வையாளர்களுடன் ஒட்டாத ஓர் உணர்வு ஏற்படுகிறது. இருப்பினும் சிறுவர்களை நடிக்க வைத்து சிறுவர்களுக்கான ஒரு திரைப்படம் பல காலத்திற்குப் பின்னர் தமிழ்த் திரையுலகில் எடுத்திருப்பது பாராட்டலுக்குரியது.

❍❍❍

**அக்டோபர் மாத ஆசிரிய தினத்தை முன்னிட்டு..**

# காலம் சொன்ன பதில்



**சிறுகதை**



**நிலவூர்ச் சித்திரவேல்**

வசந்தன் தனது கல்வியை ஓரளவுக்கு முடித்துக்கொண்டு கௌரவமாக ஒரு வேலையையும் தேடிக்கொண்டான். குடும்பப் பொறுப்பெண்றிருந்த சகோதரிகள் இருவரையும் கரைசேர்க்கத் தாய் தகப்பன் எடுத்த முயற்சிகளுக்கு வீட்டுக்கு ஒரே ஆண்பிள்ளை என்ற வகையில் உறுதுணையாக இருந்து அதற்கான பொருளாதார உதவிகளையும் தானே பங்களிப்புச் செய்து இனிதே அவர்களது திருமணங்களை நிறைவேற்றிவைத்ததில் அவனுக்கும் அவனது பெற்றோருக்கும் பெரு மகிழ்ச்சியும் திருப்தியும்.

இனி அடுத்த கட்டம். பொறுப்புள்ள ஆண்பிள்ளையாக தங்களுக்குச் சகல வழிகளிலும் ஒத்துழைப்புச் செய்து கொண்டிருக்கும் வசந்தனுக்குக் கைம்மாறாக அவனையும் நல்லதொரு இடத்தில் திருமணம் செய்து கொடுக்கவேண்டும் என்ற பெற்றோரின் கடப்பாட்டில் அவர்கள் இருவரும் ஒருநாள் இரவுச்சாப்பாட்டை முடித்தபின் வீட்டு முன்மண்டபத்தில் இருந்து பேசிக்கொண்டார்கள். தாம் தாம் ஏற்கனவே கோயில் திருவிழாக்களிலும் பிறரது கல்யாண வைபவங்களிலும் "குறிவைத்த" சில குமர்களைப் பரஸ்பரம் தெரிவித்து வசந்தனுக்கு அந்தப் பிள்ளையைச் செய்தால் என்ன, இந்தப் பிள்ளையைக் கேட்டுப்பார்த்தால் என்ன, என்று தத்தம் ஆசைப்பாடுகளைத் தெரிவித்து ஒருவரை ஒருவர் அபிப்பிராயம் கேட்டுக்கொண்டு இருந்தனர்.

தனது அறையில் இருந்த வசந்தனின் காதில் இந்தப் பேச்சுக்கள் அரையும் குறையுமாக விழுந்தாலும் அம்மா அப்பா தனக்குப் பெண்பார்க்கும் படலத்தில் இறங்கி விட்டார்கள் என்பதைப் புரிந்துகொண்டு சற்றுப் பதற்றம் அடைந்துவிட்டான். இவ்வளவு நாளும் தான் மூடிவைத்த விடயத்தை எப்படி அவர்களிடம் நேரடியாகத் தெரிவிப்பதென்று சங்கடப்பட்டுக்கொண்டான். ஆனால் தான் விரும்பிய பெண் யார் என்று அவர்கள் அறிந்தாலும் அவர்கள் இருவரும் அதை நிராகரிப்பதற்கு எக்காரணமும் இல்லை என்பதும் அவர்களே "இந்தப் பிள்ளையை நாங்கள் இவ்வளவு நாளும் யோசிக்கவில்லையே" என்று அவர்களும் ஆசைப்பட்டுப் பச்சைக்கொடி காட்டுவார்கள் என்பதும் அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் சிக்கல் என்னவென்றால் அவர்கள் அவசரப்படுகிறார்கள். இவனுக்கோ "அவள்" தனது மேற்படிப்பை முடித்து அவள் ஆசைப்பட்டபடி நல்லதொரு பதவியையும் தேடிக்கொள்ளும்வரை தான் காத்திருக்கத் தயார் என்ற நிலைப்பாடு.

வசந்தனின் தங்கை மல்லிகாவும் சந்திராவும் கீழ்வகுப்பிலிருந்து ஒன்றாகப் படித்து வந்த காலத்திலிருந்தே சந்திராவுடன் பகிடி, கிண்டல் மற்றும் பாடங்களில் சந்தேக நிவர்த்தி என்று பல கோணங்களில் வசந்தன் சந்திராவுடன் கதைபேச்சு வைத்துக்கொண்டான். அப்போதெல்லாம் வசந்தனின் பெற்றோரோ, சந்திராவின் பெற்றோரோ ஏன் மல்லிகாகூட அந்த ஈடுபாட்டுக்குக் "காதல்" என்று பெயர் சூட்டிக்கொள்ளவில்லை. ஆனால் வசந்தனும் சந்திராவும் தனித்துச் சந்தித்த

சந்தர்ப்பங்களில் பேசிய பேச்சுக்களாலும் வீசிய கண்ஜாடைகளாலும் உலுப்பல் சிலுப் பல்களாலும் அவர்கள் இருவருக்கு மட்டும் அந்தக் கவர்ச்சி உறவுக்கு "அதுதான்" பெயர் என்று பரஸ்பரம் புரிந்துகொண்டும் அதைக் காட்டிக் கொள்ளாமல் நடந்துகொண்டார்கள்.

சந்திராவின் தந்தை தம்பிராசாப் போடியார் தனக்கு ஊரிலிருக்கும் செல்வாக்குக்கும் செல்வச் செழிப்புக்கும் சோடை போகாதவாறு மகளுக்குப் பிற ஊரிலுள்ள கல்லூரியொன்றில் உயர்தர வகுப்பில் அனுமதி பெற்றுக் கல் லூரி விடுதியிலேயே தங்கவைத்துவிட்டதால் சித்திரை, ஆவணி மற்றும் மார்கழி விடு முறைகளில் மட்டும் சந்திரா ஊருக்கு வந்து பெற்றோருடன் தங்கிக்கொள்வாள். ஒவ்வொரு விடுமுறைக்காலத்திலும் மறக் காமல் மாலைவேளைகளில் மல்லிகா வீட்டுக்கு வந்து போவாள். சந்திரா நீண்ட இடைவெளிக்குப் பின் மல்லிகா வீட்டுக்கு வருவதால் வரவேற்பு, சுகம் விசாரிப்பு, உபசரிப்பு எல்லாம் தடல்புடல். மல்லிகாவின் அப்பா அம்மாகூட வந்திருந்து கதைப்பார்கள். தேநீர் தயாரிப்பதற்கிடையில் வசந்தன் முச்சந்திக் கடைக்குப்போய் றோள்ஸ், பற்றீஸ், வடை வாழைப்பழம் எல்லாம் தாராளமாக வாங்கிவந்து சந்திராமுன் தட்டில் வைத்துவிடுவான். "எதுக்கு இதெல்லாம்" என்று சிணுங்குவாள். "ஹொஸ்ரலில் கிடந்து காயிறனீங்கதானே ஆசைக்குச் சாப்பிடுங்கோ" என்பான். வசந்தனின் இந்த வெளிப்பாட்டைக்கூட யாரும் "அப்படி" அர்த்தம் கொள்வதில்லை.

பெற்றோர் தனது திருமணத்துக்கு அவசரப்படுவதை மேலும் பொறுத்திருக்க முடியாதென்பதை உணர்ந்த வசந்தன் அவர்களுக்கு நேரடியாக தனது காதலைத் தெரிவிக்கத் தயங்கி தனது மூத்த சகோதரிக்கு விடயத்தைக் கூற அவளும் "இந்தப் பூனையும் பால் குடிக்குமா" என்று மனதுக்ககுள் எண்ணியவளாய், "அது சரி அவள் இப்பதான் ஏ.எல். இரண்டாம் வருடத்தில் படிக்கிறாள் அவள் இனி கம்பஸ் போய் மூன்று வருசத்தால உத்தியோகம் தேடி அதற்குப் பிறகு....... அதுவரைக்கும் நீ கலியாணம் கட்டாமல் இருக்கப்போறியாடா. பேசாமல் அப்பா அம்மா சொல்ற பெண்ணைக் கட்டிக்கொண்டு வாழ்க்கையைத் தொடங்குடா" என்று புத்தி சொன்னாள். "இல்லக்கா உங்களுக்கு ஒண்ணுந் தெரியாது. அவள் என்னை உயிருக்கு உயிராய் விரும்புறாள் அக்கா. அவள் படிப்பு முடித்து வர எவ்வளவு காலம் சென்றாலும் நான் அவளுக்காகக் காத்திருப்பன் அக்கா. நீ அப்பா அம்மாட்ட இதைச்சொல்லி அவர்களை அவசரப்படாமல் இருக்கச் சொல்" என்று சொல்லிக் கெஞ்சி மன்றாடினான்.

தம்பியாரின் தவிப்பை உணர்ந்த அக்கா அவனுக்காகப் பரிந்து எதற்கும் தான் நேரடியாகச் சந்திராவுடனும் பேசி அவளுடைய உத்தரவாதத்தையும் அறிந்து வந்து பெற் றோருடன் பேசலாம் என்று எண்ணிச் சித்திரை லீவுக்குச் சந்திரா தன் வீட்டுக்கு வந்து நின்றபோது அங்கு போனாள். "வாங்கோ அக்கா உள்ள வாங்கோ, அம்மா இங்க வந்து பாருங்க ஆர் வந்திருக்கிறதென்று" இப்படிப் பெரும் அமோகமாக வரவேற்ற சந்திராவை வசந்தனின் அக்கா உடனடியாக அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை. அவள்ற ஜீன்ஸ் என்ன! ரீ சேட் என்ன!! தானோ வசந்தனோ இவ்வளவு நாளும் பார்த்த கிராமத்துப் பெண் போல இல்லாமல் பட்டணத்துப் படிப்பாளியாகத் தெரிந்ததால் உடன் மட்டுக்கட்டவில்லை. மனதுக்குள் பெருமைப்பட்டுக்கொண்டாள்.

சந்திரா, தாய் மற்றும் வசந்தனின் அக்கா மூவரும் பலதும் பத்தும் பேசிக்கொண்டனர். தான் வந்த விசயத்தை எப்படித் தனியாகக் கதைப்பது என்று தடுமாறிக்கொண்டிருக்க, தாய், "இருந்து கதையுங்க போய் ரீ எடுத்து வாறன்" என்று எழுந்து போன சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு தான் வந்த விசயத்துக்கு நேரடியாக வந்துவிட்டாள்.

சந்திரா, அம்மா வரமுதல் நான் ஒரு முக்கியமான விசயம் உம்முடன் கதைக்கவேணும். அதனால நேரடியாகவே கதைக்கப்போறன். வசந்தனுக்கு அம்மா அப்பா கலியாணம் பேசுறாங்க. பல இடத்தாலயும் கேட்டுவந்திருக்கு. ஆனால் வசந்தன் எல்லாத்தையும் ஒவ்வொரு சாட்டுச் சொல்லி மறுத்துவருகிறான். நேற்றுத்தான் அவன் என்னட்ட உள்ளதச் சொன்னான். அதுதான் உம்மட நிலப்பாட்டயும் அறிஞ்சு அம்மா

அப்பாவிடம் நானும் கதைத்து வசந்தனதும் உம்மடதும் காதலை நான் நிறைவேற்றிக் கலியாணத்தையும் நடத்திவைப்பன்".

"என்னக்கா கதைக்கிறீங்க, நான் இப்ப ஏ.எல் படிக்கிறன். பரீட்சை எழுதிப் பாஸ் பண்ணி யூனிவசிற்றி என்ர பண்ணி மூன்று வருசத்தில டிக்கிறி முடிச்சு அதற்குப் பிறகு நான் இலங்கை நிர்வாக சபை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதற்குப் பிறகு........" என்று சந்திரா தனது படிப்பு, இலட்சியம் என்பவற்றை நீட்டிக் கொண்டே போகப் போகப் பொறுமையிழந்த வசந்தனின் அக்கா, ரீ போடப்போன தாய் வர முதல் தான் வந்த விடயத்தில் முந்திவிடவேண்டும் என்று எண்ணி, "சந்திரா, அதுதான் அவன் என்னிடம் சொல்லி அனுப்பினவன். உன் மேல் தான் வைத்திருக்கிற காதலுக்காகத் தான் எத்தனை வருடங்களானாலும் உனக்காகக் காத்திருந்து உன்னை ஏமாற்றாமல் அம்மா அப்பா பார்க்கிற பெண் எவளையும் கட்டாமல் உனக்குத் துரோகம் செய்யாமல் தான் எத்தனை காலம் சென்றாலும் உன் கழுத்தில் தாலிகட்டி உன்னை மனைவியாக ஏற்று உன்னோடுதான் வாழ்வேன் என்பதைச் சொல்லிவைக்கத்தான் என்னை இன்று உன்னிடம் அனுப்பி வைத்தான்"

"அக்கா, நான் என்ன சொல்ல வாறன் நீங்க ஏதோ குறுக்க பிரசங்கம் வைக்கிறீங்க. நான் வருங்கால எஸ்.எல்.ஏ.எஸ். காரி. இதுகூட உங்களுக்கு விளங்குதோ தெரியாது. அதாவது நான் இலங்கையின் நிர்வாக சேவையில் சேர்ந்து ஓர் உயர் அதிகாரியாகக் கடமையாற்றப்போகிறேன். உங்கட தம்பி ஓ.எல். மட்டத்தோட ஒரு சாதாரண ஆசிரியர்தானே. போயும் போயும் ஒரு வாத்தியாரைக் கலியாணம் செய்தால் என்ர படிப்புக்கும் பதவிக்கும் பார்த்தவங்க என்னை எப்படிப் பழிப்பாங்க". அக்காவுக்குத் தலை சுற்றியது. பதிலுக்குச் சொல்லம்பு தொடுக்க முதல் சந்திராவின் அம்மா சுடு தேநீரோடு வந்து அங்கு ஒரு போலிக் குளிர்மையை ஏற்படுத்திவிட்டார். அக்கா மட மட வென்று தேநீரைக் குடித்துவிட்டு சந்திராவின் முகத்தையே பார்க்க மனம் வெறுத்துத் தாய்க்கு மட்டும் சொல்லிவிட்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டுவிட்டார்.

தன் வீடு போய்ச் சேருமட்டும் வசந்தனுக்கு என்ன சொல்வது. அவன் இந்த அதிர்ச்சியை எப்படித் தாங்குவான். சந்திராவுடன் தனியப் பேசமுடியாமற் போய்விட்டது. அடுத்த கிழமை பார்ப்பம் என்று ஒரு பொய்யைச் சொல்லி அவனுக்கு அந்தச் சண்டாளி சொன்னது எதையும் இப்போதைக்குச் சொல்லாமல் மெல்ல மெல்லப் புத்தி சொல்லி அவளை எதிர்பார்த்துக் காவல் இருப்பதில் அவனது இளமை வீணே கழிந்து வாழ்க்கை சுவாரஸ்யம் அற்றுப் போய்விடும் என்று கூறுவதோடு அம்மா அப்பாவும் தங்கட முதுமை வர

# நீயெங்கே

**– காருண்யன்**

முற்றத்து மலர்கள் உற்று நோக்கும்
முகம் மலர்ந்து எனைப்பார்க்கும்
ஒவ்வொரு பூக்களிலும் உன்முகம் ஒளிரும்
வற்றாத அன்பின் வாசைன வீசும்.

நிலத்தைக் கிண்டிப் பாத்திகள் கட்டிப்
பூங்கன்றுகள் நாட்டித் தண்ணீர் இறைத்து
தளிர்களைத் தடவி பூக்களை முகர்ந்து
வீட்டைச் சூழ வாசனை பரப்பினாய்
நீயெங்கே நிலவே மறைந்தாய்!

பூக்களின் வாசனையைக் காற்று
காவி வந்து வீசுகிறது
ஏக்கங்கலந்து பெருமூச்சு
என்னுளிருந்து வெளியே வருகிறது
பாக்கள் பாடும் பாக்கியமேயன்றி
பார்த்துச் சிரித்துப் பேச
ஆர்வமாயுள்ளேன்.

அன்பே,
நீ இங்கேயே உலவுகிறாய்
பூக்களில் தெரிகிறாய் - அதன்
வாசனையில் சிரிக்கிறாய்
வா,
ஒன்றாய் பேசுவோம் இணைந்து.
ஒன்றாய் பேசுவோம் இணைந்து.

முதல் உனக்கொரு கலியாணத்தைச் செய்து வைத்து உன்ர வழிப் பேரப் பிள்ளை களையும் பார்த்துவிட வேண்டும் என்று ஆசைப்படுறாங்க என்று மெல்ல மெல்ல வாழைப்பழத்தில் ஊசி ஏத்துறமாதிரி இவனை வழிக்குக் கொண்டுவரவேண்டும் என்று முடிவெடுத்துக்கொண்டார்.

நினைத்ததைச் சாதித்துவிட்டாள் அக்கா. வசந்தனும் பெற்றோர் வழிக்குச் சம்மதித்து விட்டான். வசந்தனின் திருமணம் பெற்றோர் எண்ணப்படி இனிதே நிறைவேறிவிட்டது. என்றாலும் அக்கா சந்திராவின் உண்மை நிலைப்பாட்டைச் சொல்லாததால் வசந்தனுக் குத் தான் சந்திராவுக்குத் துரோகம் செய்து விட்டதாக உள்ளத்தில் தேவையில்லாத ஒரு கவலை.

சில நாட்களின் பின் வசந்தனின் இந்த அடிமனதுக் கவலையைப் போக்க எண்ணிய வசந்தனின் அக்கா அன்று சந்திரா தன்னுடன் பேசிய வீறாப்பு வார்த்தைகளை அவனுக்குப் புட்டுப் புட்டு வைத்ததன் மூலம் அவன் மனதுக்குள் சந்திராமீது வெறுப்பேற்பட்டதுடன் மனதிலே ஒரு வைராக்கியம் ஏற்பட்டுவிட்டது. காலம் உருண்டோடியது. வசந்தனுக்கு எந்தவிதத்திலும் குறை சொல்லமுடியாத வகையில் இறைவன் மனைவி அமைத்துக் கொடுத்துவிட்டான். குடும்பத்தில் குதூகலம் நிலவியது.

சந்திரா "பால்குடம் தலையில் சுமந்து கடும் கற்பனையில் கை வீசி நடந்துபோன பவளக்கொடிப் பெண்" போலானாள். யூனிவசிற்றியும் இல்லை. எஸ்.எல்.ஏ.எஸ். உம் இல்லை. வாலைச்சுருட்டிக்கொண்டு தன் கிராமத்துக்குத் திரும்பி வந்துவிட்டாள். பாவம் தம்பிராசாப் போடியார். பிற ஊரில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலையில் உயர் வகுப்புக்கு அனுமதி பெற்றுப் படிக்கவைத்து இந்தக் கிராமமே போற்றிப் புகழும் நல்லதொரு பதவியில் அவளை அமர்த்திப் பார்க்க ஆவலாயிருந்தார். இப்படிக் "கோட்டைவிட்டிட்டு" வருவாள் என அவர் எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் போடியாரின் பணச் செல்வாக்கினால் மகளுக்கு ஓர் ஆசிரியர் வேலையை ஊரிலேயே பெற்றுக் கொடுத்துவிட்டுத் திருப்திப் பட்டுக்கொண்டார். ஏ.எல். வகுப்பில் கலைப்பிரிவுப் பாடங்கள் படித்திருந்ததால் ஆரம்பக்கல்வி வகுப்பில்தான் கற்பித்தல் கடமை கிடைத்துள்ளது. இரண்டு மூன்று வருடங்கள் கழிந்துவிட்டன. "பாவியார் போன இடம் பள்ளமும் திட்டியும்" என்ற பழமொழிப்படி சந்திரா கடமையாற்றும் திரு கோணமலைக் கல்வி வலயத்தில் ஆரம்பக் கல்விப் பாட நியமனம் பெற்றவர்களின் எண்ணிக்கை தேவைக்கு அதிகமாகிவிட்டது என்றும் அதனால் இறுதியில் நியமனம் பெற்ற ஆரம்பப் பாடநெறி ஆசிரியர்களை வெற்றிடங்கள் அதிகம் உள்ள அயல் வலயமான மூதூர் வலயத்துக்கு இடமாற்றம் செய்வதற்கான முடிவு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் எடுக்கப்பட்டது.


இம் முடிவினால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் பலரும் ஆசிரிய சங்கப் பிரிதி நிதிகளுடன் மாகாணக் கல்வி அமைச்சுக்குப் படையெடுத்தனர். விடயத்தை ஆராய்ந்த அமைச்சின் செயலாளர் திருகோணமலைக் கல்வி வலயத்தில் இடைநிலை வகுப்பு களில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் களுக்குத் தட்டுப்பாடு உள்ளதாகவும் வெளி யேற்றவேண்டிய ஆரம்பக் கல்வி ஆசிரி யர்களுக்கு அத்தகைய வகுப்புகளில் ஆங்கிலம் படிப்பிக்கும் தகைமையுடன் முன்வருவார்களாயின் வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சின்பேரில் அவர்களைத் தற்காலிகமாக அப்பணிக்கு அமர்த்தலாம் என்ற முன்மொழிவைத் தற்றுணிவின்பேரில் அமுல்படுத்தும்படி பணிப்புரை வழங்கினார்.

இரண்டொரு தினங்களுக்கு முன்னர் தான் திருகோணமலை வலயத்துக்குப் புதிய பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருந்த தால் ஆசிரியர்கள் பலருக்கும் அவரைச் சந்தித்திருக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்க வில்லை. அதனால் வெளியேற்றப்படவேண்டிய ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் ஆங்கிலம் கற்பிக்கும் தமது தகைமைய உறுதிப்படுத்திச் சலுகை கேட்கத் தயங்கிக்கொண்டிருந்தனர். சந்திரா முதலாளாகத் துணிந்து வலயக் கல்விப் பணிப்பாளர் அலவலகத்துக்குச்சென்று தனது ஆங்கிலத் தகைமைய நிரூபிக்கும் சான்றிதழுடன் ஆங்கிலம் கற்பிக்க விரும்பும் சம்மதக் கடிதத்தையுயம் அங்குள்ள பிரதம முகாமைத்துவ சேவை அலுவலரிடம்

கையளிக்க நீட்டினாள். ஆனால் அவரோ தான் ஆவணங்களைப் பொறுப்பேற்காமல் பணிப்பாளரின் அறையைக்காட்டி அவரிடமே நேரில் கையளித்துக் கதைக்கும்படி கூறி விட்டார்.

சந்திரா உள்ளே சென்று “எக்ஸ்கியூஸ் மீ ஸேர்” என்று அவரின் கவனத்தை ஈர்த்தாள். குனிந்தபடி கோவைகளில் அவதானம் செலுத்திக்கொண்டிருந்தவர் “யேஸ் கம் இன்” என்றபடி நிமிர்ந்து தன் மூக்குக்கண்ணாடியைச் சற்றே கீழே பதித்தபடி வந்து நின்ற நபரை நன்கு அடையாளம் கண்ட வசந்தன், “நீங்கள் இப்போ எந்த அலுவலகத்தில் எஸ்.எல்.ஏ.எஸ் உயர் அதிகாரியாகப் பணியாற்றுகிறீர்கள்?” என்றதும் சாதாரண வாத்தியாராக இருந்த வசந்தன் வெளிவாரியாகப் பட்டப்படிப்பை முடித்து பதவி உயர்வுகளுக்கான பரீட்சைகளிலும் சித்திபெற்று இன்று கல்வி நிர்வாக சேவையில் சித்தி பெற்று வலயக் கல்விப் பணிப்பாளராக வீற்றிருப்பதைச் சற்றும் எதிர்பார்த்திராத சந்திரா, “பிச்சை வேண்டாம் நாயைப் பிடி” என்ற தோரணையில் கொண்டுபோன ஆவணங்களுடன் சுவரில் எறிபட்ட பந்துபோல வெளியேறிவிட்டாள். அவளது ஆணவப் பேச்சுக்கும் அக்காவிடம் அன்று கேட்ட கேள்விக்கும் காலம் நல்ல பதிலைச் சொல்லிவிட்டது.

❍❍❍



# வெம்மையின் வெப்புசாரம்

**Dr. ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர்

வரண்ட நிலத்தில்
மழை விழுந்ததும்
கொதித்து ஆவியாகும் குமிழிகள்
போல உள்ளம்
கொதித்துப் போய் அழுகிறது
வெம்மையின் வெப்புசாரம்
அங்கே

ஆன்மாவினை ஆட்டிப்படைக்கிறது
உள்ளத்தின் ஆழத்தில்
ஒதுங்கி ஒளிந்திருக்கும்
உன் வார்த்தைகள்

தூக்கி வீசப்பட்டதா
துக்கித்து வீசப்பட்டதா
தூரத்தில் நம் நேசத்தின் அழுகுரல்
என்ன செய்யும் அது
அழுவதைத்தவிர

எங்கெங்கு காணினும்
அங்கங்கே கழுவித்துடைக்கவியலாது
படிந்த கறையாய் அது...
தேடியலையலாம் தற்போது நம்மை

பசப்பினைப் போர்த்தியதா
பாசத்தினை அப்பியதா
பாசாங்கினைக் கொண்டதா
பேரன்பில் பிணைந்ததா
நானறியேன்
பரிதவிப்பில் நிதம் கொந்தளிக்கும் இதயம்

திரும்பிய வரவிலும்
திடீர் மாற்றத்திலும்
தேனொத்த நேசத்திலும்
ஸ்தம்பித்த வேகத்திலும்
என்னென்ன நினைக்க
ஏங்கி நானும் திகைக்க

படாரெனத் திறந்து கொண்டது
சலனக்கதவு
சிறகுகள் முறிந்து சிறைப்பட்ட வலி ஆதியின்
தொனியால்
வீறிட....
யாதொன்றுமில்லை இனி...
மொழிகளின் ஆசிர்வாதம் போதுமாகும்

அன்பு செய்தால் அளந்து செய்யாதீர்கள்
விட்டு விட்டு விசிறி
வீண் செய்யாதீர்கள்
மரணம் என்பது வாழ்வில் மட்டுமல்ல
மறுக்கப்பட்ட நேசத்திலும் நிகழும்

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்

பேராசிரியர் துரை மனோகரன்



## புதிய எதிர்காலம் வேண்டும்

நாட்டில் தேர்தல் திருவிழா முடிவடைந்து, புதிய ஆட்சியாளரும் தெரிவு செய்யப்பட்டுவிட்டார். பழையவர், தமது வெற்றிவாய்ப்பைப் பலமாக எதிர்பார்த்திருந்தார். முன்னாள் மூளைத்தரம் குறைந்த ஆட்சியாளரால் நாட்டில் ஏற்பட்டிருந்த மோசமான நிலையை மாற்றி, இன்றைய நிலைக்கு அதனைக் கொண்டுவந்த திறமை பழைய ஆட்சியாளருக்கு உண்டு. தமது செயல்பாடுகள் தமக்கு வெற்றியை ஈட்டித்தரும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. குறைகள் இருந்தபோதிலும், மக்கள் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருந்தமையை மறுக்கமுடியாது. ஆனாலும், அவர் பக்கத்திலும் பல குறைபாடுகள் இருந்தன. ராஜகுடும்பத்தினால் தமக்கு வழங்கப்பட்ட அதிர்ஷ்டப் பதவிக்காக, அவர் அக்குடும்பத்தின்மீது நன்றியுணர்வை அபரிமிதமாகக் கொண்டிருந்தார். அதனால், அக்குடும்பத்தோடு சம்பந்தப்பட்ட எக் குறைகள், குற்றங்களையும் அவர் கண்டுகொள்ளாதவராகவே இருந்தார். கிறிஸ்தவத் தேவாலயங்களிலும், பிற இடங்களிலும் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக எந்தவித நடவடிக்கையையும் அவர் எடுக்கவில்லை. அமைதியான முறையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்திய மக்கள், மாணவர்கள்மீது கொடுமையான முறையில் அடக்குமுறைகளைப் பயன்படுத்தி, ஒரு சர்வாதிகாரியாகவே நடந்துகொண்டார். சட்டம் தெரிந்தவராக இருந்தும், நீதித்துறை தொடர்பான விடயங்களை அநாகரிகமான முறையில் நிராகரித்து நடந்துகொண்டார். வாக்குறுதிகளை நிறைவேற்றாத வல்லமை கொண்டவராக அவர் விளங்கினார். அவர் காலத்தில் வர்த்தகர்கள் கொள்ளை இலாபம் அடித்து, தமது மனமகிழ்ச்சியை வளர்த்துக் கொண்டார்கள். அவரது தன்னிச்சையான போக்கு, பலரை அவரிடம் இருந்து பிரித்துவிட்டது. எதிர்காலத்தில் அவர் பெரும்பாலும் ஓர் ஓய்வுபெற்ற அரசியல்வாதியாகவே இருக்கப்போகிறாரா என்பதைக் காலமே கணிக்கும்.

புதிய ஆட்சியாளர் ஐந்து வருடங்களுள் தம்மையும், தமது கட்சியையும் மிகத் திறமையாக வளர்த்துக்கொண்டமை வியப்பளிக்கிறது. முன்னைய ஆட்சிகளில் வெறுப்பும், சலிப்பும் அடைந்த பெரும்பான்மை மக்கள், ஒரு புதிய மாற்றத்தை நாடியிருக்கிறார்கள். அக்கட்சியின் சிவப்புச் சாயம் மக்களைக் கவர்ந்திருக்கிறது. ஆனால், தமிழ்மக்கள், அதன் இதுவரைகாலச் சுயரூபத்தை நன்கு அறிவார்கள். அதனாலேயே தமிழ்ப்பகுதிகளில் அவருக்குத் தேர்தல் திருவிழாவில் போதிய வரவேற்பு கிடைக்கவில்லை. இதுவரை காலமும் அக்கட்சி, உள்ளடக்கத்தில் பேரினவாதத்தையும், வெளிப்பூச்சாகச் சிவப்புச் சாயத்தையும் கொண்டிருக்கிறது. இத்தகைய வேஷத்துக்குப் பதிலாக, இனிமேலாவது அது உண்மையிலேயே இடதுசாரிக் கொள்கைகளைக் கைக்கொள்ளுமாயின், அது வரவேற்கத்தக்கதாக இருக்கும். உண்மையான இடதுசாரிகளுக்கும், பேரினவாதத்துக்கும் வெகு தூரம். நாட்டின் நலன் கருதியும், தமது எதிர்கால நலன் கருதியும் அக்கட்சி இடதுசாரிக் கொள்கைகளைக் கடைப்பிடிக்குமாயின், தமிழ்மக்களும் அவர்களுக்குப் பூப்போட்டுக் கும்பிடுவார்கள். இதுவரை அவர்கள் காட்டி வந்த சிவப்புச்சாய வேஷத்தைக் களைந்து, உண்மையான இடதுசாரிகளாக நாட்டைக் கொண்டுசெல்ல வேண்டும். புதிய அரசு, இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதயசுத்தியுடன் முன்வரவேண்டும். தேர்தல் காலத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சி தொடர்பாகப்

புதிய அரசு, பழைய ஆட்சியாளர் விட்ட இடத்தில் இருந்து தொடரவேண்டும். ஏதோ புதிதாகச் செய்யப்போகிறோம் என்று சொல்லி, உள்ளதையும் கெடுத்துவிடக்கூடாது. இது வரை காலமும் நாட்டைக் கொள்ளையடித்த ஊழல்வாதிகள் சட்டத்தின் முன்நிறுத்தப் படவேண்டும். கிறிஸ்தவ தேவாலயங்களிலும், பிற இடங்களிலும் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களோடு சம்பந்தப்பட்ட வர்கள் விசாரிக்கப்பட்டுத் தண்டனை வழங்கப் படவேண்டும். நீண்டகாலத்தின்பின் நமது நாட்டில் பெண் பிரதமர் ஒருவர் இடம்பெறுகிறார் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தி.

தேர்தல் திருவிழாவில் இரண்டாம் இடத்தைப் பெற்ற எதிர்க்கட்சி முக்கியஸ்தரின் மானம் மரியாதையைக் காப்பாற்றியவர்கள் தமிழ், முஸ்லிம் மக்களே என்ற உண்மையை அவர் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இனி மேலாவது ஆயிரம் விகாரைகள் கட்டுவது போன்ற விபரீதமான திட்டங்களை அவர் கைவிடவேண்டும். முன்னரை விட ஓரளவு அவர் திருந்தியிருப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

ராஜவம்சத்தைச் சேர்ந்த இளவரசர், எதிர்பார்க்கப்பட்டது போலவே தேர்தல் திருவிழாவில் பின்னடைவைச் சந்தித்திருக் கிறார். பழைய ராஜாவும், அவரது மகனான இளவரசரும் தேர்தல் திருவிழாவில் பேரின வாதத்தைக் கக்க முயற்சித்திருக்கிறார்கள். ஆனால், “அந்தப் பருப்பு இனி வேகாது” என்பதைப் பெரும்பான்மை இனமக்களே தேர்தல் திருவிழாவில் நிரூபித்திருக்கிறார்கள் ராஜவம்சத்தின் விசுவாசிகள் மாத்திரமே இளவரசருக்கு ஆதரவு வழங்கியிருக்கிறார்கள். அவர், தமது சொந்தத் தொகுதியிலேயே தோற்கடிக்கப்பட்டது, ராஜவம்சத்துக்குக் கிடைத்த ஒரு பலத்த அடி. தேர்தல் திரு விழாவில் முன்னைய மூவருக்கும் அள்ளிப் போட்ட மக்கள், இவருக்குக் கிள்ளிப் போட்டிருக்கிறாகள். தமிழ்மக்கள் வடித்த கண்ணீர், அவர்களுக்கு முன்னாலேயே ராஜ வம்சத்தைச் சீரழித்துக்கொண்டிருக்கின்றது. “முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.” ராஜவம்சம், நாட்டின் அரசியலில் இருந்து ஒதுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

தேர்தல் திருவிழாவில் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாகச் சாதக, பாதகக் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. ஆயினும், போட்டியிட்ட 38 பேரில் முதல் ஐந்து பேரில் ஒருவராக அவர் வந்தமை வரவேற்புக்கு உரிய ஒன்று. எப்போதும் தன்வழி தனிவழி என்று தமிழ்மக்களுக்குக் காட்ட முனையும் தமிழ்த் தேசியக் கட்சி ஒன்று, தேர்தல் திருவிழாவைப் புறக்கணிக்கவேண்டும் என்று விடுத்த கோரிக்கையைப் புறம்தள்ளி, தமிழ்ப் பிரதேசங்களில் கணிசமான தமிழ்மக்கள் வாக்கெடுப்பில் கலந்துகொண்டமை வரவேற் கத்தக்கது. தமிழ் அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை, எதிர்காலத்தில் ஆளுக் காள் மல்லுக்கட்டிக்கொண்டு விளையாட்டுப் பிள்ளைகள் போல் நடந்துகொள்ளாமல், தமக் குள் ஒற்றுமையை (!) ஏற்படுத்திக்கொண்டு, தமிழ்மக்களின் நலன் கருதி முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இந்திய அரசுடன் இறுக்கமான நட்புறவைப் பேணி, புதிய அரசு தமிழ்மக்கள் விடயத்தில் அக்கறையுடன் செயல்பட ஆவன செய்யவேண்டும். உலக நாடுகள் தமிழ்மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மேலும் அக்கறையுடன் செயல் படத் தமிழ் அரசியல்வாதிகள் அழுத்தங் களைக் கொடுக்கவேண்டும். புதிய அரசு தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்று எதிர்பார்க்கமுடியாது. ஆனாலும், தமிழ் அரசியல்வாதிகள் சும்மா புலம்பிக் கொண்டிராமல், உப்புச்சப்பற்ற 13ஆவது திருத் தத்தையாவது அரசு முழுமையாக நடை முறைப்படுத்த அழுத்தங்களைக் கொடுத் துக்கொண்டே இருக்கவேண்டும். “அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.” தமிழ் அரசியல்வாதிகள் நேர்மறைச் சிந்தனை யுடன் செயல்படவேண்டும். இந்திய அரசும், தன்னோடு சம்பந்தப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாகப் புதிய அரசு நடைமுறைப்படுத்த, வேண்டிய அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும். “எனக்கென்ன, அவர்கள் பட்ட பாடு” என்று ஏமாளித்தனமாக அது இருந்துவிடக்கூடாது.

தேர்தல் திருவிழாவின்போது, சொந்த நலன்களுக்காக அங்கும் இங்கும் ஓடி அலைந்த ஓட்டப்பந்தயக்காரர்கள் இனி என்ன செய்யப்போகிறார்கள் என்று தெரியவில்லை. ஆளுக்காள் தலையில் கையை வைத்துக்கொண்டு விதியை நொந்துகொண்

டிருப்பார்கள். "யாரும் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டால் எல்லாம் சௌக்கியமே."

நாட்டில் ஒரு மாற்றம் வேண்டும் என மக்களில் பலர் விரும்பியதற்கேற்ப, ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. வெளிப்படையாகப் பேரினவாதம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், உள்ளடக்கத்தில் அது இன்னமும் இருக்கத்தான் செய்கிறது. பேரினவாதம் நாட்டின் ஒரு சாபக்கேடு என்பதை ஆட்சியாளர்கள் என்று உணர்கிறார்களோ, அன்றுதான் நாட்டுக்கு விமோசனம் ஏற்படும். நாட்டுக்கு ஒரு புதிய எதிர்காலம் வேண்டும் என்று ஆட்சியாளர் கருதினால், பேரினவாதம் என்னும் நச்சுச்செடியை பூண்டோடு அகற்ற வேண்டும். முயற்சித்தால் முடியாதது என்று உலகில் எதுவுமே இல்லை. நல்லதைச் செய்வதற்கு நாள் பார்க்கத் தேவை இல்லை. புதிய அரசிடம் நல்லெண்ணம் தான் தேவை. நல்லெண்ணம் நாட்டை உயரவைக்கும் என்பதைப் புதிய அரசு உணர்ந்தால் நல்லது.

○○○

# இயற்பியல் சமன்பாடுகளை திருடியவள்

**சமரபாகு சீ.உதயகுமார்**

உன் கவிதைகளை
படித்துக்கொண்டிருக்கின்றேன் நான்,
அவை அழகான கவிதைகள்
உன்னை போலவே..!

திடீர்திடீரென
சுடச்சுட கோபங்களை
என்னிடம் தூக்கி காட்டி
என்னை ஏங்க வைப்பாயே, அந்த
கோபங்களும் அழகானவையே
உன் கவிதைகள் போல..!

மூக்குநுனி முட்டிய கோபம் என்று
பெரியவர்கள் சொல்வது
இந்தமாதிரியான
உன் முன் கோபங்களை தானே..!

கடல்நீர் நிறம்போல் சட்டை உடுத்து
கடற்கரையில் நீ நிற்கிறாய்
மீன்கள் என்னவோ
உன் மேல் விழுந்து உன்
கூந்தலுக்குள்
காணாமல் போயினவோ..?

கடற்கரை காற்றும்
உன்னை சுற்றியே வீசுகிறது
ஒரு தென்னங்கீற்று தென்றலான
உன் பார்வை பரிசங்களால்
மடிந்து போவது என்னவோ
என்னிடமுள்ள கணித சமன்பாடுகள்தான்

என் மனசெங்கும் ஒரு பாடமாய்
படிந்திருந்த இயற்பியல் சூந்திரங்களும்
இப்ப மறந்து போய்விட்டனவே...

அடுத்த நாள் வகுப்பறையில்
ஓட்ட மின்னியல் பாடம் சொல்லிக்கொடுக்கிறேன்
கணக்கொன்று போட்டுவிட்டு
இயற்பியல் சமன்பாட்டை தேடுகிறேன்
ஞாபகமாய் வர அவை மறுக்கின்றன

உன்னிடம் வந்து சேர்ந்த
அந்த சமன்பாடுகளை தேடி
நான் உன்னிடம் ஓடிவரவா முடியும்

என் இயற்பியல் ஆசான்
வர்ணம் சேரிடம் சென்று கேட்டு வரவா
முடியும்...

உன்னிடம் வர பயந்த நானும்
வர்ணம் சேரிடம் சென்று கேட்டேன்
அவை உன்னிடம் சென்றுவிட்டதாக
அவரும் என்னிடம் சொல்கிறார்...

(**இயற்பியல் :** Physics)

# வாசகர் பேசுகிறார்

ஞானம் ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

எனது கன்னிக் கவிதையை 291ஆவது இதழில் பிரசுரித்தமைக்கு கோடான கோடி நன்றிகள். கவிதை, கட்டுரை, சிறுகதை, செவ்வி எனப் பல தரமான ஆக்கங்கள் கொண்டது ஞானம் சஞ்சிகை. இளம் கலைஞர்களுக்கு சந்தர்ப்பம் அளிப்பது மிகவும் பாராட்டத்தக்கது. பகிர்வதன் மூலம் மென்மேலும் விரிவும் ஆழமும் பெறும் ஞானத்தை உலகெலாம் பரப்ப அடியேனின் பணிவான வாழ்த்துக்கள்....

**– அநபாய சோழன்**

❍

புரட்டாதி மாதம் 2024 வெளியான ஞானம் - 292இல் சிறப்பு விவரணச் சித்திரமாக அறிமுகம் செய்யப்பட்ட மகாராமாயணம் எனும் நூலானது ஓர் ஒப்பற்ற நூலாகும். துக்கங்களை அழிப்பது, ஆத்மாவிற்கு ஆறுதலளிப்பது, ஆனந்தத்தை பெறுவது எவ்வாறு எனக் கதைகள் மூலமாகவும், செய்யுள் மூலமாகவும் சொல்லப்பட்டுள்ளன.

மனம் என்றால் என்ன? அது எப்படி இயங்குகிறது? அதை வெற்றி கொள்ளும் உபாயங்கள் எவை? போன்ற அதிசயமான உண்மைகள் இந்நூலில் பொதிந்துள்ளன. இப்படி இதன் புகழைச் சொல்லிக் கொண்டே போகலாம். எல்லோருக்கும் இது பொதுவான நூல். வசிஷ்டர் இராமனுக்குக் கூறும் உபதேசங்கள்தான் இந்நூல். வான்மீகி முனிவரல் இயற்றப்பட்ட ஒப்பற்ற நூலைச் சுருக்கமாக உரைச் சித்திரமாக எழுதிய ஞானம் பாலச்சந்திரனவர்களுக்கு வாழ்த்துகள்.

**– ராதா சிவப்பிரகாசம்**

❍

ஞானம் 292 இதழ் படித்தேன், மற்றவர்க்கும் அதை பகிர்ந்தேன். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது, எனக்கு. புதுப்பூரிப்புடன் வர்ண தாள்கள் சகிதம், அருமருந்தான இலக்கிய தேடல்கள் பலவற்றை நிறைத்து வருகின்ற ஞானத்தை படிக்கின்றபோது மனதுக்கு உற்சாகமும், புத்துணர்வும் உண்டாகிறது.

மேலும், சென்ற இதழில் கலைமாமணி வைரமுத்து சந்திரசேகரம் அவர்களின் அட்டைப்படக் குறிப்பினை நான் வரைந்திருந்தேன். ஞானம் குழுமத்திற்கு எனது நன்றிகள். அந்த கட்டுரை தொடர்பாக "வாசகர் பேசுகிறார்" பகுதிக்கு கனகசபாபதி செல்வநேசன் ஒரு குறிப்புரையினை எழுதியிருந்தார்.

"கலாபூசணம் மா.அனந்தராசன் பூதத்தம்பியாக நடித்த விடயம் தனக்கு ஞாபகம் இல்லை" என அவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அவர் பூதத்தம்பியாக நடித்ததை பல மேடைகளில் நானே கண்டு களித்திருக்கிறேன். முக்கியமாக எங்களூர் பாடசாலையான யா/கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையில் பூதத்தம்பி நாடகத்தில் பூதத்தம்பியாக கலாபூசணம் மா.அனந்தராசன் நடித்ததை பார்த்துவிட்டு அவரிடம் சென்று அவரையும் அவருடைய மூத்த மகன் வைகுந்தனையும் பாராட்டி மகிழ்ந்தது இப்பவும் ஞாபகமாய் உள்ளது.

ஆனால், த.கலாமணி பூதத்தம்பியாக நடித்ததை நான் எங்குமே பார்க்கவில்லை. பார்த்ததையும், ஊரவர் சொல்வதையும்தானே நான் சொல்ல முடியும், எழுத முடியும்.

எனக்கு தெரிந்ததையே நான் எழுதி வருகிறேன், சொல்லி வருகிறேன். திட்டமிட்டு எழுதும் மனப்பாங்கு எனக்கு எப்பவுமிருந்ததில்லை.

**– சமரபாகு சீனா உதயகுமார்**

❍❍❍

# பேசும் நாணயங்கள்...

20 ரூ.பா.


**1979ஆம் வருடம் வெளியிடப்பட்ட நாணயத்தாள்கள்**

இலங்கை மத்திய வங்கியினால் 1979ஆம் வருடம் வெளியிடப்பட்ட நாணயத்தாள்களின் தொனிப்பொருளில் பாரியதொரு மாற்றம் ஏற்பட்டது. இந்நாணயத்தாள்களானவை, விலங்குகளும் தாவரங்களும் பூச்சிகளும் எனும் தொனிப் பொருளில் மிகவும் கவர்ச்சிகரமானதாக அமைக்கப்பெற்றன. இத்தொகுதியில் வெளியிடப்பட்ட 2, 5, 10, 20, 50, 100 ரூபாய் நாணயத்தாள்களில் இலங்கையுடன் நெருங்கிய தொடர்புடைய மற்றும் இலங்கைக்குத் தனித்துவமான உயிரினங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு உள்ளடக்கப்பட்டன. இந்தத் தொகுதியிலேதான் முதன்முறையாக 20 ரூபாய் நாணயத்தாள் வெளிவந்தது. அத்துடன் முதற்தடவையாக நாணயத்தாளின் பின்பக்கம் நிலைக்குத்தான வடிவத்தில் அமைந்தது. அவற்றிலே இரண்டு ரூபாய் நாணயத்தாளினை நாம் இங்கு நோக்குவோம்.



Dasia Haliana

**இலங்கைக்குரிய அழிந்துபோகக்கூடிய அச்சுறுத்தல் நிலையிலுள்ள பல்லி இனங்களில் ஒன்று**



Puntius Nigrofasciatus

**செந்நிறக் (செவ்வாயக்) கெண்டை மீன் – இலங்கைக்குரிய அழிந்துபோகக்கூடிய அச்சுறுத்தல் நிலையிலுள்ள மீன் இனங்களில் ஒன்று**



Cethosia Nietneri

**இலங்கைக்குரிய வண்ணத்துப்பூச்சி இனங்களில் ஒன்று. இதனை 'தமிழ்ச் சரிகைச் செட்டையுடைய வண்ணத்துப் பூச்சி' எனவும் அழைப்பர்**







(குறிப்பு : இக்கட்டுரையில் காட்டப்பட்ட நாணயங்கள் யாவும் ஆசிரியரின் தனிப்பட்ட சேகரிப்பிலிருந்து)

இரண்டு ரூபாயில் பொறிக்கப்பெற்ற மீன், வண்ணத்துப்பூச்சி மற்றும் பல்லி இனங்களைக் கொண்டு முறையே 1972, 1978, 2020ஆம் வருடங்களில் இலங்கையில் முத்திரைகளும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இங்குள்ள வண்ணத்துப் பூச்சியினத்தை 1800களின் நடுப்பகுதியில் இலங்கையிலிருந்து அடையாளம் கண்ட John Nietner என்பவர் இதற்கு Tamil Lacewing (தமிழ்ச் சரிகைச் செட்டையுள்ள வண்ணத்துப்பூச்சி) எனப் பெயரிட்டார். இதற்கு ஏன் அவ்வாறு பெயர் தரப்பட்டது? என்பது தனித்த ஆய்வுக்குரியது.












1979ஆம் வருடத்தில் வெளிவந்த நாணயத்தாள்களின் படங்களை இலங்கையின் புகழ்பெற்ற Laki Senanayake (1937-2021) எனும் ஓவியர் வரைந்திருந்தார். 1976ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கி ஆளுனர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இரண்டு வருடங்கள் தாவரவியல் பூங்காக்களிலும், சிங்கராஜ காட்டிலும், ஆற்றோரங்களிலும், வேறுபல இடங்களிலும் தன்னுடைய ஆய்வை மேற்கொண்ட லக்கி சேனாநாயக்க அவர்கள், இந்நாணயத்தாள்களுக்குரிய படங்களை 1977ஆம் வருடம் டிசம்பர் மாதம் வரைந்து முடித்தார். இந்த நாணயத்தாள்கள் இலங்கை நாணய வரலாற்றில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் பெரு வரவேற்பைப் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய ஓவியங்கள் எவ்வாறு நாணயத்தாள்களில் உள்ளடக்கப்பெற்றன என்பதை கீழ்வரும் படங்களின் வாயிலாகக் காணமுடியும்.







இவை ஓவியர் லக்கி சேனாநாயக்காவின் மூல ஓவியங்கள்.
(நன்றி http://notes.lakdiva.org.lk/cbc/1979lkff/laki/)
அடுத்துவரும் தொடர்களில் மற்றைய நாணயத்தாள்களின் விபரங்களை விரிவாகக் காண்போம்.

தொடரும்...


GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/29/2024

கந்தபுராண கலாசாரத்தின் கலங்கரை விளக்கம்

# காசிவாசி செந்திநாதையர்

## நூற்றாண்டுச் சிறப்பிதழ்

(1924 – 2024)




விலை:

ரூபா 1500/=

ஞானம் பதிப்பகம்

3-B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு – 06

+94 112 586 013 / +94 777 306 506 / +94 717 362 862

editor@gnanam.info

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195

ISSN 2478-0340